www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
Ju DG
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
நவ.30–டிச.06,1997
11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 233

## 4 முனைகள் முற்றுகையும் மோதல்களும்




## சங்கவியின் சாதனை

## பஞ்சலிங்கமும் அமிர்தலிங்கமும்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கத்தியின்றி இரத்தமின்றி

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யாழ் குடாநாட்டில்
காணாமல் போனோரின்
உறவினர்கள்
போராட்டங்கள்
நடத்தி உள்ளனர்!

அவர்களது போராட்டத்துக்கு
ஆதரவு தெரிவிப்பதாக
தமிழ்க் கட்சிகள்
அறிக்கை விட்டுள்ளன!

இதனை அறிந்தபோது,
சில கேள்விகள்
எழச் செய்கின்றன!

கட்சிகள்
என்பவை எதற்காக?

மக்களின் முன்னால் நின்று
அவர்களை வழிநடத்தும்
முன்னணிப் படைகள்தான்
உண்மையான கட்சிகள்!

மக்கள் முன்னால் செல்ல
பின்னால் நின்று
ஆதரவு தெரிவிக்கவும்,
ஒரு ஓரத்தில் நின்று
கையசைக்கவும்
கட்சிகள் ஏன்?

மக்களின்
முதுகின் பின்னால் நின்று
அறிக்கைவிட
அரசியல் தலைவர்கள் என்ற
மகுடங்கள் ஏன்?

யாழ் குடாநாட்டில்
புனரமைப்பு வேலைகள்,
சிரமதானப் பணிகள்
என்று ஏகப்பட்ட வேலைகள்
தமிழ்க் கட்சிகளுக்கு!

இந்தத் திருப்பணிகளுக்கு
உண்மையான அர்த்தம்,
தேர்தல் பணி என்பது
திருவாளர் பொதுஜனம்
அறியாத விடயமல்ல!

குளம் திருத்தவும்,
கோவிலுக்கு வெள்ளையடிக்கவும்
கட்சிகள்தான் தேவையா?
தொண்டு நிறுவனங்கள்
சிறப்பாகச் செய்துவிடுமே!

"மக்கள்
பார்வையாளர்களாக
இருப்பது கூடாது!"
என்று அரசியல் கட்சிகள்தான்
மக்களை போராட்டத்துக்கு
அழைப்பது வழக்கம்!

இங்கே
நிலைமை தலைகீழ்!

மக்கள்
போராடத் தயார்!
வழி நடத்தத்தான்
அரசியல் கட்சிகள் இல்லை!

பார்வையாளர்களாக
மாறி நிற்கின்றன தமிழ்க் கட்சிகள்!

பகிரங்க அரசியல் களத்தில்
மாபெரும் வெற்றிடம்
ஒன்று தோன்றியிருக்கிறது!

ஒன்றுக்கு பல கட்சிகள்
பல பிரமுகர்கள்
பிரதிநிதிகள்
எல்லாம் இருந்தும்
தமிழ்பேசும் தரப்பின் குரல்
ஒடுங்கியிருப்பது ஏன்?

நியாயம் நம்பக்கம்
இருந்தும்கூட
இத்தனை தமிழ்க் கட்சிகளால்
உலக அனுதாபத்தை
திரட்ட முடியவில்லையே!

தீர்வு போதாது
என்றும் கூறுகின்றனர்!
கூட்டணியினர் கூட
கருத்துக் கணிப்பு வேண்டாம்
என்கிறார்களாம்!

இக் கூற்றுக்கள்
உண்மையானவை எனில்,
தீர்வு யோசனை பற்றி
உலக அரங்கில்
அரசு செய்யும் பிரசாரத்துக்கு
தக்க பதில் சொல்ல
இக் கட்சிகள் எல்லாம்
தயங்குவது ஏன்?

குன்றிலிட்ட விளக்காக நின்று
குரல் கொடுக்க வழியிருந்தும்
குடத்து விளக்குகளாக
குரல் கம்மி ஒலிப்பது ஏன்?
தமிழ் மக்களுக்கு மட்டும்
கேட்கக் கூடியதாக கூறிவிட்டு,
குரலைக் குறுக்கிக் கொள்கிறார்கள்!

'இம் என்றால் சிறைவாசம்
ஏன் என்றால் வனவாசம்'
என்ற நிலைகூட இல்லையே!
பின்னர் ஏன்
பின் தங்கி நிற்கிறார்கள்?

பொருத்தமான நேரத்தில்
போராட மட்டுமல்ல;
தேவையான செவிகளில் விழ
வாதாடவும் தெரியவில்லை!

தமிழ்க் கட்சிகள்
தங்கள் வரையறைக்குள்ளேயே
தர்மயுத்தம் நடத்தலாம்!
கத்தியும் வேண்டாம்!
இரத்தமும் வேண்டாம்!
தர்மயுத்தம் நடத்தலாம்!

அதற்கு தேவை
மக்களைத் திரட்டும் சக்தி
முன்னின்று போராடும் உறுதி!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### சிறுபிள்ளையாய் மாறுவோம்!

"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வரவிடுங்கள்; அவர்களை தடைபண்ணாதிருங்கள்; பரலோக இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது"- (மத்தேயு- 19:14)

மேற்கூறிய இவ்வாசகம் நமது மேலான ஒரு கோட்பாட்டை வெளிபடுகிறது. நாம் மனத்தளவில் சிறு பிள்ளைகளைப் போலிருந்தால், எல்லா நன்மைகளும் நம்மை வந்து சேரும். ஒளியாகவும், வழியாகவும் இருக்கும் இறைவன் கூறுவது:

"இந்த பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக இராச்சியத்தில் பெரியவனாய் இருப்பான்!"-
(மத்தேயு- 18:4)



ஆம், நாம் எத்தனைதான் பெரியவராய் இருந்தாலும், பட்டங்கள் பெற்று, பதவிகள் வகிப்பவராய் இருந்தாலும், தான் என்ற அகங்காரத்தால் தம்பட்டமடித்து தலைக்கனம் கொள்ளாமல், தன்னைத் தாழ்த்திக் கொள்கிறவனே பெரியவனாவான்.

பூமியில் பிறக்கும்பொழுது நல்லவர்களாகவே பிறக்கும் பிள்ளைகளைப் போல், நாம் வளர்ந்த பின்னும் போட்டி, பொறாமை போன்ற தீய குணங்கள் இன்றி வளரவேண்டும், வாழ வேண்டும். உண்மையிதுவே, ஏனெனில் அனுபவத்தில் என் பேரப்பிள்ளைகள் சேவின், அல்வின் மூலம் உணர்ந்து வருகிறேன். எனவே-

வீட்டிலும், நாட்டிலும், உலகிலும் சமாதானம் நின்று நிலவ, வழியும் ஒளியுமாகிய விவிலியத்தின் போதனைகளை ஏற்று வாழ்வோம்!

ஏ.பி.வி. கோமஸ்.

### தொழுகையின் முக்கியத்துவம்!

இஸ்லாத்தில் அடிப்படை வணக்க வழிபாடுகளுள் தொழுகை மிக முக்கியமானதாகும். இஸ்லாமென்ற விரிவான வாழ்க்கை அமைப்பு, 5 அடிப்படைகளின் மீது கட்டி எழுப்பப்பட்டுள்ளதாக அல்-குர்ஆனும் நபி மொழிகளும் தொழுகை என்ற தூணை உறுதிப்படுத்துகின்றது.

சில ஆதாரங்களை இங்கு நோக்குவோம்:

* "யார் தொழுகையை நிலை நிறுத்துகிறாரோ அவர் தீனுல் இஸ்லாத்தை நிலை நிறுத்தியவராவார். யார் தொழுகையை நிலை நிறுத்தவில்லையோ, அவர் இஸ்லாத்தை தகர்த்து விட்டவராவார்." (நபி-மொழி)

மேலும் இறைவன் எஜமான் எனவும், மனிதன் அவனது அடிமையெனவும் நாம் ஏற்றுக்கொண்ட தத்துவத்தை செயல் பூர்வமாக நிரூபித்துக் காட்டுவதே தொழுகையாகும்.

* "நிச்சயமாக தொழுகை பாவமான காரியங்களிலிருந்தும், மானக் கேடான செயல்களிலிருந்தும் ஒரு விசுவாசியை காப்பாற்றி விடுகிறது." (அல்-குர்ஆன்)

* "நிச்சயமாக முஃமீன்கள் வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் எத்தகையோர் என்றால் உள்ளச்சத்தோடு தொழுகையை நிறைவேற்றியவராவார்." (அல்-குர்ஆன்)

மேற்சொன்ன தொழுகையின் முக்கியத்துவத்தை உணர்ந்து மறுமை வாழ்விற்கும் நன்மை பயப்பதாக எம் வாழ்வை ஆக்கிக் கொள்வோமாக.

பெனாஸிர் ஸாஹிர், மருதமுனை-3.

## கவிதைப் போட்டி இல.230

### பரிசுக்குரிய கவிதை

### யாருக்கும் அமைதி இல்லை

மீனுக்குத் துடிப்பும் இல்லை,
மேனிக்கு உடையும் இல்லை,
வீணுக்குப் போர்செய் நாட்டில்
யாருக்கும் அமைதி இல்லை!

நிவேதிதா சண்முகநாதன்-
ஆரியகம், ஹட்டன்.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:



**கடவுளில்லை!**
தண்ணீரில் மீனழுதால்
தெரிவதில்லை- எங்கள்
கண்ணீரைக்
காண்பதற்கும்
கடவுளில்லை!

கு. திருமால்- அமிர்தகழி,
மட்டக்களப்பு.

**நன்றிக் கடன்?**
மயிலுக்குப்
போர்வை தந்து,
மடக் கொடிக்கும்
தேர் தந்த
பரம்பரைக்கு,
நம் நாடு வழங்கிய
தேசிய உடை?!

எம். வேல்முருகன்-
மாரதென்ன,
பலாங்கொடை.

**ஆதரவு?**
உடுக்க உடையில்லை;
உண்ண உணவுண்டு
ஒதுங்க இடமில்லை,
ஓடக் காலுண்டு
அகதியான மழலைக்கு
ஆதரவு யாருண்டு?!

ஏறாவூர் ஸமீர் ஹாமிஸ்-
ஏறாவூர்-01.

**அடையாள அட்டை**
ஆடையினை
தொலைத்துவிட்டும்
வீதியிலே அலையலாம்!
அடையாள அட்டை
இல்லையெனில்
ஆள் உள்ளேதான்!

நாக. நேசன்- மட்டக்களப்பு.

**பிடிப்பு**
உடுக்கை இழந்தாலும்- கை
இடுக்கிலே பிடித்த-மீனை
இழக்காதே இளையவனே
உயிர்காக்கும் உணவு அது
உன்போன்ற அகதிக்கு!

சீ. தங்கவடிவேல்- மட்டக்களப்பு.

**கண்டுபிடிப்பு**
சோதனைச் சாவடிகளை
சிரமமின்றிக் கடந்துவர
சிறுவனின்
புதிய கண்டுபிடிப்பு!

ஆர். பாலகிருஷ்ணன்-
மாத்தளை.

**விட்டதை கேளீர்**
காரைநகரில் வீடு!
யாழ்ப்பாணத்தில் உறவு...!
தென்மராட்சியில் உடமை...!
இதனால் உடையில்லா நிலமை!

ந. மங்களம்- யாழ்ப்பாணம்.

**வெ(ற்)றி நிச்சயம்**
வன்னியில்- மழைத்
தண்ணி வருகுது!
மீனும் வருகுது!
ஊனும் வருகுது!

சோழியூர் சிவபரீஸ்வரன்-
யாழ்ப்பாணம்.

**ராகிங்**
இது போர்
செய்த
ராகிங்(!)

ரி.புளோரா-
வவுனியா.

**சுடர்விட்டு எரிகிறது**
அஞ்சுவயசினிலும்
அன்னையவள் மடிதவழ்ந்த
பிஞ்சு மழலையிங்கு
பெருமுச்சு விட்டின்று
அஞ்சி நடை நடக்கும்
அவலமது தமிழினத்தின்
சொந்த மதாய் நாளுமிங்கு
சுடர் விட்டு எரிகிறது!

உடுவை குகதாசன்-கொழும்பு-09.

## கவிதைப் போட்டி இல.233



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 06.12.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.233, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை



அன்பு முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். ஆனால் கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் முத்தான தொடர் 'உடைந்த இரவு' முற்றுப் பெற்று விட்டது. இதுகாலவரைக்கும் வாசகர் உள்ளங்களில் இடம் பிடித்தவைகளில் ஒன்றுதான் 'உடைந்த இரவு' அதுவும் முற்றிற்று என்பது கவலையைத் தருகிறது.

எஸ்.எம். ரா.:.பிக், நிகவடவன, தம்புள்ள.

தினமுரசை வாரா வாரம் உற்சாகமாய் படித்து வருகின்றேன். 'உடைந்த இரவு' கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் கதை வெரி சூப்பர். காதிலை பூ கந்தசாமியார் வெளுத்து வாங்குகிறார். என்றென்றும் தினமுரசு தித்திக்கும் அமுதமாய் வெளிவர வாழ்த்துக்கள்!

ஜி.ரி. அஞ்சலா, வெள்ளவத்தை.

முரசே!

"பூச்சாண்டி காட்டும் ஆசாமிகள்! தோட்டப் பகுதிகளில் கைவரிசை" என்னும் தலைப்பில் சொல்லப் பட்ட விடயங்களைக் கண்டு மிகவும் மனம் வருந்தினோம். 'பிச்சையெடுக்குதாம் அனுமான், அதைப்பிடுங்குதாம் பெருமான்' என்பதுபோல், மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து வாய்க்கும், வயித்துக்கும் போதாமலிருக்கும் தோட்டத் தொழிலாளிகளை ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர்களை தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தண்டிக்கவேண்டும். வேலியே பயிரை மேய்வது போல் தோட்ட நிர்வாகமும் அதற்கு உடந்தையாய் இருந்தால், அதையும் தடுத்து நிறுத்திட இளைஞர்கள் முன்வரவேண்டும். வாழப்பிறந்த நாம் கோழைகளாகி எடுப்பார் கைப்பிள்ளைகளாகி விடக்கூடாது.

இரா. வினோத்குமார், ஹட்டன்.

கதையின் முடிவில் தனது 'கிரைம் சக்கரவர்த்தி' என்ற பட்டத்தை காப்பாற்றிவிட்டார் ராஜேஸ்குமார்.

வீ. ஸ்ரீரஜனி, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை.

### கதவுகள்கூட திறக்கவில்லை

பாராளுமன்ற அரசியல் மீண்டும் மக்கள் எழுச்சியை திசைதிருப்ப முயல்வது முற்றிலும் உண்மையே! எத்தனையோ இடர்கள் சூழ்ந்துள்ளன. எத்தனையோ மனித உரிமை மீறல்களை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இறுதியாக தீர்வுப் பொதியின் சாயமும் வெளுத்துப் போய்விட்டது. இவ்வாறான நிலையில் மக்களின் அதிருப்திகளை தணிப்பது போலவும், அவற்றுக்கு எல்லாம் தீர்வுகாண பாராளுமன்றத்தில் முறையிட்டுவிட்டது போலவும் மக்கள் கவனத்தை திசைத் திருப்புகிறார்கள் தமிழ் அரசியல்வாதிகள். வவுனியா அகதி முகாம் கதவுகளைத் திறக்கக்கூட பாராளுமன்றவாதிகளால் முடியவில்லையே!

ஏ. உதயகுமார், யாழ்ப்பாணம்.

### ஒத்துழைப்புப் பல்லவி

அன்பின் ஆசிரியருக்கு,

இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலம் முதல் இன்றுவரை எத்தனையோ தமிழ்க்கட்சிகள் அரசாங்கங்களுடன் சேர்ந்து நின்றன. அமைச்சர் பதவிகளும் கிடைத்தன. மலையக தமிழ்க்கட்சியான இ.தொ.கா.வினர் ஓரளவுக்காயினும் சில நலன்களை பெறமுடிந்தன. பிரஜா உரிமை விடயத்திலும் நலன்கள் கைகூடின. ஆனால் வடக்கு-கிழக்கு கட்சிகள் அரசுகளுக்கு ஆதரவளித்து கிடைத்த பயன் என்ன? ஜி.ஜி. பொன்னம்பலம், திருச்செல்வம் போன்றோர் கண்ட பொதுப் பயன்கள் யாது? இப்போது அதே ஒத்துழைப்புப் பல்லவியை மறுபடி அரங்கேற்றும் தமிழ்க் கட்சிகளுக்கு வரலாறு தெரியாதா? அன்றேல் நம்மை ஏய்க்க முனைகிறார்களா?

வே. மகேஸ்வரன், மூதூர்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

### விமர்சனம் மட்டுமல்ல

விமர்சனம் செய்வது சுலபமான காரியம். ஒன்று தவறு என்று கூறினால், எது சரியெனவும் சுட்டிக் காட்டுவதுதான் பொறுப்புணர்வு. 'முரசு' அப்பணியை செய்திருப்பது பாராட்டத்தக்கது. தமிழ்க் கட்சிகள் இன்று செய்ய வேண்டியது என்னவென்பதை 'அரசியல் அலசல்' தெளிவாக உரைத்திருந்தது. பாராட்டுக்கள்.

எம். காரியப்பர், மட்டக்களப்பு.

### பாராளுமன்ற முழக்கங்கள்

'பட்ஜெட்' வந்தால் பாராளுமன்ற உரைகள் தூள் கிளப்பும் என்று முரசு தெரிவித்திருந்தது. எம் சமுகத்தின் நலமும், பலமும் தூள் தூளாக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், இந்த பா.உக்கள் தூள் கிளப்பி விட்டு தூங்கிப்போவார்கள். பாராளுமன்ற உரைகள் யாவுமே மக்களின் கண்களில் மண்ணைத் தூவும் உரைகளாகி வருகின்றன. பாராளுமன்றத்தால் நம் பாரத்தை இறக்கி வைக்க முடியுமா? அழுதும் பிள்ளையை அவள்தான் பெறவேண்டும்.

கி. ரட்ணராஜா, கொழும்பு-09.

### ஏன் புலம்பல்?

அன்புள்ள முரசுக்கு,

முரசில் பொறாமைப்படும் சில வயிற்றெரிச்சல் விமர்சகர்கள் பற்றி அய்யாத்துரையார் குறிப்பிட்டிருந்தார். அப்படி வசைபாடுகிறவர்களும் முரசு கூறும் கருத்துக்களையோ, விமர்சனங்களையோ குறை கூறவோ, தவறு எனவோ கூறமுடியவில்லையே! அப்படிக்கூற முடியாத காரணத்தால்தானே புலம்புகின்றனர். 'முரசு' இன்று செய்யும் அரசியல் விமர்சனங்களும், வெளிப்படுத்தல்களும், அம்பலப்படுத்தல்களும் காலத்தின் அவசியமாக உள்ளதையும், இவற்றின் பயனாக போலி அரசியல் இனம் காணப்பட்டு வருவதையும், மக்களிடம் இனம் காட்டப்பட்டு வருவதையும் யார் மறுக்க முடியும்? யார் குத்தியும் அரிசியாகட்டும். அவர்களும் தம்மால் முடிந்ததை செய்ய வேண்டியது தானே! அய்யாத்துரையாரே! அவர்களைப் பற்றி எழுதி நீங்கள் ஏன் இடத்தை விரயமாக்குகிறீர்கள்?

சி. லிங்கேஸ்வரன், வவுனியா.

### ஏன் மௌனம்?

எங்கள் தமிழ்ப் பேசும் பிரதிநிதிகளிடம் ஆயுதம் தூக்க வேண்டும் என நாம் கேட்கவில்லை. காந்தி காட்டிய வழியிலாவது போராட முன்வாருங்களேன். ஒன்றுமேயில்லாத விஷயங்களுக்கு எல்லாம் உண்ணாவிரதம் நடத்திய கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி. இப்போதோ எதிர்த்துப் போராட வேண்டிய அநியாயங்கள் எத்தனை? எத்தனை? ஏன் வாளாவிருக்கிறார்கள்?

என். லாபிர், பதுளை.


வாரமலர் தினமுரசு
நவ.30—டிச.06,1997

படிப்பகம்

www.padippakam.com

# யாழ் குடாநாட்டில் புலிகளின் படையணிகள்

# புலிகளின் யாழ் தளபதியாக பொட்டம்மான்

யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல்களை நடத்துவதற்காக புலிகளின் படையணிகள் அனுப்பப்பட்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

யாழ் மாவட்ட தளபதியாக புலிகள் இயக்க மூத்த தளபதியும், புலிகள் இயக்க புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பாளருமான பொட்டம்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் படையினர் காலத்திலும் யாழ் மாவட்ட தளபதியாக பொட்டம்மானையே பிரபாகரன் நியமித்திருந்தார். யாழ் குடாநாட்டில் இந்தியப் படையினருக்கு எதிரான பரவலான தாக்குதல்கள் பொட்டம்மானின் திட்டப்படியே மேற்கொள்ளப்பட்டன.

அமிர்தலிங்கம் கொலையில் புலிகளின் உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் விசு பலியான பின்னர், புலிகளின் உளவுப்பிரிவுப் பொறுப்பாளராக பொறுப்பேற்றார் பொட்டம்மான். அதன்பின்னர் யாழ் மாவட்ட தளபதியாக பானு நியமிக்கப்பட்டார்.

தற்போது பானு வன்னியில் அதிரடித் தாக்குதல்களுக்கு பொறுப்பான தளபதிகளில் ஒருவராக உள்ளார்.

யாழ் குடாநாட்டில் படையினரின் நடவடிக்கைகளை முடக்குவதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட்டே பொட்டம்மானைப் பிரபாகரன் நியமித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

யாழ் மாவட்ட தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளுக்கு நேரடியாகச் சென்றுவிட்டு திரும்பியுள்ளார்.

பொட்டம்மான் தளபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்தே வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தொடர் தாக்குதல்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

படையினரின் சுதந்திரமான நடமாட்டங்களை கட்டுப்படுத்துவது, படையினருக்கு தகவல் கொடுப்போர்மீது நடவடிக்கை எடுப்பது என்பனவே முதற்கட்ட நடவடிக்கைகளாக இருக்குமாம்.

### சுவரொட்டிகள்

யாழ்ப்பாண நகர் பகுதியில் இரவோடு இரவாக சில சுவரொட்டிகள் புலிகளால் ஒட்டப்பட்டன. படையினர் அவற்றை உடனடியாக அகற்றியுள்ளனர்.

"படையினருடனும், ஏனைய இயக்கங்களுடனும் தொடர்புகள் வைக்க வேண்டாம்", "மீண்டும் நாம் வருவோம்" போன்ற வாசகங்கள் சுவரொட்டிகளில் காணப்பட்டதாம்.

வன்னியில் உள்ள புலிகள் இயக்க முக்கியஸ்தர்களும் "விரைவில் யாழ்ப்பாணம் செல்லுவோம்" என்று கூறிவருகின்றனர்.

யாழ் குடாநாட்டில் இம் மாதத்தில் மட்டும் பதினைந்து சிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. கைக்குண்டு வீச்சில் ஆரம்பித்து ரோந்து படையணிகள்மீது தாக்குதல், காவலரண்களை தாக்குதல் என்று புலிகளின் நடவடிக்கைகள் விரிவாகி வருகின்றன.

இதேவேளை யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தி வருகின்றனர். 25.11.97 அன்று சாவகச்சேரி பகுதி சுற்றிவளைப்புக்கு உள்ளானது.

சுற்றிவளைப்பு தேடுதல்கள் நடைபெற்றாலும்கூட தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் புலிகளின் நடமாட்டங்களை தடுப்பதும், நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் கடினமாகும். மறைந்து கொள்ளவும், தப்பிச் செல்லவும் பல வழிகள் அங்கு உள்ளன.

# "கமிஷன் அறிக்கையால் களங்கம் இல்லை"

## தமிழக முதல்வர் கலைஞர் தெரிவிப்பு

போராளி இயக்கங்களிலேயே எனக்கு விடுதலைப் புலிகளுடன் அதிக உறவு கிடையாது. இலங்கைப் பிரச்சனை மற்றும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையை பொறுத்தமட்டில் எனக்கு ஆரம்பம் முதலே அனுதாபம் உண்டு.

அதற்காக போராடிக் கொண்டிருந்த இயக்கங்கள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பம் இவ்வாறு தமிழக முதல்வர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

ராஜீவ் கொலை தொடர்பான ஜெயின் கமிஷன் அறிக்கை தொடர்பாக அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறும்போது, நான் எனது பிறந்த நாளின்போது ஒரு முறை நிதி வசூல் செய்து, அதைப் போராளி இயக்கங்களுக்கு சமமாகப் பிரித்துக் கொடுத் தேன். புலிகள் மட்டும் அதனை வாங்க மறுத்துவிட்டனர். பின்னர் அதை ஏனைய போராளிகளுக்கு பிரித்துக் கொடுத்தேன்.

புலிகள் அதை வாங்க மறுத்த காரணம், அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். என்ன நினைப்பாரோ என்பதுதான். இப்படியிருக்க, விடுதலைப் புலிகளை நான் ஆதரித்து வளர்த்ததுபோல ஜெயின் கமிஷன் அறிக்கையின் பகுதிகள் கூறுவது எனக்குப் பெரும் வியப்பை அளிக்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத் தலைவர் பத்மநாபாவை 'துரோகி' என்று நான் கூறியதாக நடேசன் சொன்னதாக உளவுத்துறை அதிகாரிகள் கூறுகின்றனர். நான் அப்படிக் கூறவில்லை.

காசி ஆனந்தன் என்னைப் பார்த்தார் என்பது உண்மைதான். அவர் இங்கேதான் இருக்கிறார். வரதராஜப் பெருமாள்கூட இந்தியாவில்தான் இருக்கிறார். காசி ஆனந்தன் விடுதலைப் புலியா என்ன? விடுதலைப் புலிகளுக்காக பாட்டுப் பாடுகிறார் அவ்வளவுதான். இவ்வாறு கலைஞர் கருணாநிதி தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஜெயின் கமிஷன் அறிக்கையால் தி.மு.க.வுக்கு எவ்வித களங்கமும் ஏற்படமாட்டாது. நாம் பயப்படவும் இல்லை என்றும் கலைஞர் கூறியுள்ளார்.

ஜெயின் கமிஷன் அறிக்கை இன விரோத, தமிழர் விரோத அறிக்கை. இலங்கைத் தமிழருக்கும், அவர்களுக்காக போராடுவோருக்கும் ஆதரவளிப்பது நமது கடமையாகும். நெல்சன் மண்டேலாவையும், பாலஸ்தீன இயக்கத்தையும் இந்தியா ஆதரிக்கவில்லையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் திராவிடக் கழக பொதுச் செயலாளர் சி.வீரமணி.

# வன்னியில் மாவீரர் தினம் அனுஷ்டிப்பு

## புலிக்கொடி ஏற்றல்! நினைவு வளைவுகள்!

வன்னிப் பகுதியில் மாவீரர் தின வாரம் வழக்கம்போல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் மாவீரர் தினம் ஒருவாரகாலத்திற்கு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதற்கு முன்னர் இரு வாரங்களுக்கு தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்பட்டுவந்தது.

25.11.97 அன்று மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிக்கொடி ஏற்றிவைக்கப்பட்டுள்ளன. நினைவு வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்கள் என அழைக்கப்படும் இடங்களில் 25ம் திகதி முதல் புலிக் கொடிகள் காலையில் ஏற்றப்பட்டு மாலையில் இறக்கப்பட்டன. 27.11.97 அன்று மாவீரர் தினம் நிறைவு பெறுகிறது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரன் ஆற்றும் உரை, அரசியல், இராணுவ அழுத்தங்களுக்கு எதிரானதாகவும், அழுத்தங்கள் மத்தியில் பேச்சுக்களுக்கு புலிகள் இயக்கம் தயாராக இல்லை என்ற நிலைப்பாட்டை மறுபடி வலியுறுத்துவதாகவும் அமையும் எனத் தெரிகிறது. தமிழ் பேசும் மக்களின் தாயகப் பகுதிகளை கூறுபோடும் முயற்சிகள் தொடர்பாகவும் பிரபாகரன் தனது கருத்தை வெளியிடக்கூடும் என நம்பப்படுகிறது. நவம்பர் 27ம் திகதி பிரபாகரனின் 43வது பிறந்தநாளாகும்.

கிழக்கிலும் மாவீரர் தின அனுஷ்டிப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

# இந்நாள் அமைச்சருக்கு முன்னாள் அமைச்சர் சவால்

## பேட்டியை தமிழில் ஒளிபரப்பத் தயாரா?

இளைஞர், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி. திசாநாயக்கா 17/11/97 அன்று இரவு ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் "ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வடமாகாணத்துக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கப் போகிறார் என்று கூறியுள்ளார். அப்படியாயின், ஏனைய மாகாணங்களுக்குக் குறைவான அதிகாரங்களை ரணில் வழங்கப்போகிறாரா? இதனால், சிங்கள மக்களுக்கு அவர் அநீதி இழைக்கப்போகிறார்" என்று தனது பேட்டியில் கூறியுள்ளார்.

இந்தப் பேட்டியை அவர் தமிழிலும் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யவேண்டுமென நான் பகிரங்கமாகவே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம்.அஸ்வர் சவால் விட்டிருக்கிறார்.

இலங்கை அரசியல் யாப்பின் 154ம் பிரிவில் ஒருங்கியை நிரல்-9ஆம் அட்டவணையில் தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சம்பந்தமாக மாகாண சபைகள் பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலம் மாற்றங்களைச் செய்துகொள்ளலாம் என மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. எனவே, ஒவ்வொரு மாகாணத் தேவைகளுக்கேற்ப அதிகாரங்கள் கூட்டவோ குறைக்கவோ முடியும். இதனை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட தற்போதைய 1978ம் ஆண்டு புதிய அரசியல் சாசனம் உறுதி வழங்குகிறது. எனவேதான் பல நாடுகளில் உள்ளவாறு இலங்கையிலும் சிற்சில பகுதிகளின் தேவைகளுக்கேற்ப கூட்டியும் குறைத்தும் அதிகாரங்கள் வழங்கப்படலாம் என்பதை ஆலோசனைக்கு எடுக்க முடியும். என்று எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறிருக்கிறார்.

இக்கூற்றைத் திரித்துக்கூறி, சிங்களப் பகுதிகளுக்கு இல்லாத அதிகாரங்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கு வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார் என்று அமைச்சர் திசாநாயக்கா அவர்கள் கூறுவதிலிருந்து தமிழ் மக்களுக்குக் கூடிய அதிகாரங்களை வழங்குவதற்கு அவர் முயற்சிக்கிறார் என்ற தோரணையில் அமைச்சரின் பேட்டி அமைந்திருப்பது, தமிழ் மக்களுக்கு மிகவும் விசனத்தைத் தரக்கூடிய ஒரு விடயமாகும்.

எனவேதான் இந்தப் பேட்டியில் ஒரு வார்த்தையேனும் பிசகாமல் தமிழ்மொழியில் ஒளிபரப்புவதற்கு ஆவண செய்யுமாறு நான் அரசாங்கத்துக்குச் சவால் விடுக்கிறேன். எனவும் அவர் கூறியுள்ளார்.

# புலிகளின் கப்டன் பலி!

வவுனியா நகரில் புலிகள் இயக்க நகர்புற கெரில்லாக்களால் இரண்டுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

படையினருக்கு தகவல் கொடுப்போர், அகதிமுகாம்களில் உள்ள மக்களிடம் பணம் வாங்கி பாஸ் பெற்றுக் கொடுப்பவர் ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. 20.11.97 அன்று இச்சம்பவங்கள் நடைபெற்றன.

இச் சம்பவங்களின் பின்னர் 21.11.97 அன்று, வவுனியா பூமாங்குளத்தில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் புளொட் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குறிப்பிட்ட உறுப்பினரை புளொட் இயக்கத்தினர் சந்தேகத்துடன் விசாரித்தனராம். அவர்கள் அருகே வந்த அந்த உறுப்பினர் சட்டென்று புளொட் இயக்க உறுப்பினர் ஒருவர் வைத்திருந்த துப்பாக்கியை எட்டிப் பிடித்தாரர்ம். அப்போது புளொட் இயக்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர் பலியானார்.

கப்டன் புனிதவளன் என்றழைக்கப்படும் வவுனியாவைச் சேர்ந்த பாலசேகரம் ஜெயப்பிரகாஷ் என்னும் புலிகள் இயக்க உறுப்பினரே பலியாகியுள்ளார்.

வவுனியா நகரில் கைக்குண்டு வெடிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. புலிகளின் நடமாட்டம் நகரில் அதிகமாக உள்ளது. பொலிசார் தீவிர தேடுதல் நடத்தியும்கூட யாரும் இனம்காணப்படவில்லை என்று கூறப்படுகிறது.

# புளியங்குளத்தில் ஹெலி வீழ்ந்தது!

புளியங்குளத்துக்கு கிழக்கே பெல் 212 ரக ஹெலி ஒன்று 25.11.97 அன்று வீழ்ந்துள்ளது. ஹெலி வீழ்ந்த இடம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். புளியங்குளத்துக்கு கிழக்கே உள்ள பகுதிதான் பழைய வாடி. அங்குதான் ஹெலி வீழ்ந்தது.

பழைய வாடிப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தால்கூட புலிகளின் நடமாட்டமும் கண்காணிப்பும் அப் பகுதியில் உள்ளது.

பெல் ஹெலி அமெரிக்கத் தயாரிப்பாகும். ஏவுகணைகளில் இருந்து தப்பும் வசதி இதனிடம் இல்லை. 500 அடி தூரத்தில் பறக்கும்போதே ஹெலி வீழ்ந்தது என படைத்தரப்பினர் கூறுகின்றனர். அவ்வாறு பறக்கும்போது ஏவுகணையால் தாக்காமல், சுட்டு வீழ்த்தவும் சாத்தியம் உண்டு.

விபத்துக் காரணமாக ஹெலி வீழ்ந்ததாக படைத்தரப்புச் செய்திகளும், புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியால் சுடப்பட்டதாக இன்னொரு செய்தியும் வெளியாகியுள்ளன. இது பற்றிய சரியான தகவல்களை உடன் உறுதி செய்ய இயலவில்லை.

ஹெலி வீழ்த்தப்பட்டதற்கு புலிகளும் உத்தியோகபூர்வமாக உரிமை கோரியுள்ளனர். எனினும் எவ்வாறு தாக்கப்பட்டது என்ற விபரத்தை வெளியிடவில்லை.

# நடக்காத மோதல்

20.11.1997 அன்று யாழ் குடாநாட்டில் வட்டுக்கோட்டை சங்கரத்தையில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே பாரிய மோதல். படையினர் 20 பேர்வரை பலியாகினர் என்று வெளிநாட்டு வானொலி ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் அவ்வாறான மோதல் எதுவும் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெறவில்லை. புலிகளும் அவ்வாறு செய்தி வெளியிடவில்லை.

மோதல் எதுவுமே நடைபெற்றிருக்காத நிலையில், யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர் நடந்த முதலாவது பெரும் தாக்குதல் அது என்றும் குறிப்பிட்ட செய்தியில் விபரிக்கப்பட்டது.

# காணி உழும் புலிகள்

கிழக்கில் பெரும்போகச் செய்கை ஆரம்பித்திருக்கிறது. இருந்தபோதிலும் பலவாறான நெருக்கடிகள் காரணமாக விவசாயிகள் தமது நிலங்களை உரிய வேளைக்கு உழுது தயார்படுத்த முடியாமல் இருக்கிறார்கள். இதனைக் கருத்திற் கொண்டு புலிகள் இயக்கத்தினர் விவசாயிகளின் வயல் நிலங்களைக் கூலிக்கு உழுது கொடுக்க முன்வந்துள்ளனர். இதன்படி ஏக்கர் ஒன்றுக்குத் தலா 1200/= ரூபா விகிதம் புலிகள் இயக்கத்தினர் கூலி பெறுகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு-கிரான் பாலத்திலுள்ள படை அதிகாரி, அப்பகுதிகளிலுள்ள "விவசாயிகள் எந்நேரமும் தங்களுக்குத் தேவையான உதவிகளைக் கேட்க பின்னிற்கக் கூடாது. வேண்டிய உதவிகளைச் செய்துதர நாம் தயாராக இருக்கிறோம். மழைக் காலங்களில் தோணி மற்றும் வாகன வசதிகளை நாம் செய்து தருவோம். டோர்ச் பற்றரிகள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். வெகு விரைவில் பஸ்சேவை நடத்த ஏற்பாடாகியுள்ளது. வீதித் திருத்தமும் செய்து தரப்படும்" என்று கூறுகிறார்.

# மீண்டும் படகுச் சேவை!

## படையினர் அனுமதி

கடந்த பல மாதங்களாக அனுமதி மறுக்கப்பட்டு வந்த வாழைச்சேனை- நாசிவன்தீவுப் படகுச்சேவையை மீண்டும் ஆரம்பிக்கப் படைத்தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர். கடந்த 24.11.97ல் இருந்து இப்படகுச் சேவை நடைபெறுகிறது. இதற்கான அனுமதியை வாழைச்சேனை பிரிகேடியர் சில்வா வாழைச்சேனைப் பிரதேச செயலாளருக்கு வழங்கியிருந்தார்.

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டே இந்தப் படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தினமும் இருதடவைகளே படகுச்சேவை நடைபெறுகிறது.

பாடசாலை விடுமுறைக் காலத்தில் படகுச் சேவையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும் படகுச் சேவைக்கு எதுவித இடையூறுகளும் ஏற்படுத்தப்படாத பட்சத்தில் தொடர்ந்து நடைபெற படைத்தரப்பினர் இணங்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

படகுச் சேவை நிறுத்தப்பட்டதனால் நாசிவன் தீவிலுள்ள மக்கள் வாழைச்சேனை நகருக்கு வந்துபோவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களைச் சுட்டிக்காட்டி, மீண்டும் படகுச்சேவையை ஆரம்பிக்க அனுமதிவழங்குமாறு கேட்டு வாழைச்சேனைப் பிரதேச செயலாளரும் மற்றும் பலரும் பெருமுயற்சி எடுத்திருந்தனர்.

இதேபோல கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் தடைப்படுத்தப்பட்டிருக்கும் வாழைச்சேனை நகருக்குச் செல்லும் வீதியை, பொதுப் போக்குவரத்திற்குத் திறந்துவிட படைத்தரப்பினர் வெகுவிரைவில் நடவடிக்கைக்கு இணங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்

## தட்டுப்பாடில்லாமல் பொருட்கள்!

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்காக கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் உரவகைகள், முழுநேரமும் படையினரின் கண்காணிப்பின் கீழ் இல்லாத பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல மட்டுப்படுத்திய அளவிலேயே அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

கமநலசேந்திர நிலையத்தினால் பெரும்பாக உத்தியோகத்தரினூடாக அனுமதி பெற்று ஒரு ஏக்கர் செய்கைக் காணிக்கு இரு அந்தர், அமோனியா யூரியாக் கலவைப் பசளை கொண்டு செல்ல முடியும்.

இந்த உரவகை கமநல கேந்திர நிலையத்தினால், ஒரு அந்தர் 500/= ரூபாவிற்கு விற்கப்படுகிறது. இந்தக் கலவைப் பசளையில் 21% வீதமே நைதரசன் உள்ளது

ஆனால் தற்சமயம் பெரும்போக விதைப்புக்காலம் துவங்கியுள்ளது. தமது ஆளுகைக்குள் உள்ள பகுதி விவசாயிகளின் பசளைத் தட்டுப்பாட்டை நீக்கும் வண்ணம் போதியளவு யூரியாப் பசளையை புலிகள் இயக்கத்தினர் கையிருப்பில் வைத்து, ஒரு அந்தர் 500/= ரூபாவுக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.

இப்பசளை 46% வீதம் நைதரசன் செறிந்தது. கம நல சேவைத் திணைக்களத்தினால் விற்பனை செய்யப்படும் 21% நைதரசன் செறிந்த அமோனியா சல்பேற்றுப் பசளையை அனுமதி பெற்று 500/= ரூபாவுக்கு வாங்கி ஏற்றுக்கூலி இறக்குக் கூலி கொடுத்து கொண்டு செல்ல வேண்டிய அவசியம் தற்சமயம் இல்லை.

புலிகள் இயக்கத்தினர் தமது பகுதிகளுக்குள் இருக்கும் விவசாயிகளின் காலடிக்கு எடுத்துச் சென்று பசளையை விற்பனை செய்கின்றனர். அத்துடன் படையினர் மட்டுப்படுத்திய அளவில் அனுமதிக்கும் கட்டுப்பாட்டுப் பொருட்களையும், முற்றாகத் தடை செய்யப்பட்ட பொருட்களையும் புலிகள் இயக்கத்தினரின் நுகர்வுக் கடைகளில் தாராளமாகப் பெறக் கூடியதாகவிருக்கிறது என்று பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

# ஜே.வி.பி.யினரின் சுவரொட்டிகள்!

கடந்தவாரம் நாட்டின் தென்பகுதிகளில் சிங்களத்திலும், தமிழிலும் எழுதப்பட்ட பெரிய சுவரொட்டிகளை ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி) யினர் ஒட்டியுள்ளனர்.

அரச அலுவலகங்களுக்கு முன்னாலும், பொது இடங்களிலும், பெரிய அளவில் ஒட்டப்பட்டுள்ள அச்சுவரொட்டிகளில் "சிங்கள, தமிழ், முஸ்லிம் இனவாதத்தைத் தூண்டி விடுகின்ற பிரிவினைவாத அரசியலமைப்பைத் தோற்கடிப்போம்" என்று எழுதப்பட்டுள்ளது.

# பத்து இலட்சம் ரூபாய் மோசடி!

## உப தபால் அதிபரின் கைவரிசை!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை அஞ்சல் மாவட்டத்துக்குள்ளமைந்த அக்போபுரம் உபதபாற் கந்தோரில் பாரிய மோசடியொன்று இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

கந்தளாய் அஞ்சலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இவ்வலுவலகத்தில் உப தபாலதிபராக திருமதி பி. இந்திராணி ராஜகருண என்பவர் கடமையாற்றி வந்தார்.

இவரின் அனுசரணையுடன் இவரது கணவர் எம். 03914401 தொடக்கம் 500ம் இலக்கம் வரையிலான நூறு காசுக்கட்டளைகள் கொண்ட இரண்டு கட்டுக்களை எடுத்து விருப்பம்போல் தொகையினை எழுதி நாட்டின் பல்வேறு தபால் நிலையங்களிலும் பணம் பெற்று வந்திருக்கிறார்.

அக்போபுரம் உபதபாலகத்திலிருந்து தனது பெயருக்கு பணம் வருவதாகச் சில காசுக்கட்டளைகளையும், பலாலி இராணுவ முகாம் தபாலகத்திலிருந்து வருவதாகச் சில காசுக் கட்டளைகளையும் தான் நிற்கும் ஊர்களிலுள்ள தபாற் கந்தோர்களில் பணமாக்கியுள்ளார். இதற்கென இவர் பலாலி இராணுவமுகாம் தபாலகம் என்ற பெயரில் 'றபர்ஸ்டாம்ப்' கூடச் செய்து வைத்திருந்தார்.

இவர் கடந்தவாரம் வழக்கம்போல் கண்டி தபால் நிலையம் சென்று பணம் பெற முயன்றபோது, அடிக்கடி பலாலி இராணுவமுகாம் அஞ்சலக முத்திரையைக் கண்டு பழகிப்போன கருமபீட உத்தியோகத்தருக்கு இவரது காசுக்கட்டளை முத்திரையில் சந்தேகம் வந்தது. அதனால் விசாரிக்கத் தொடங்கியிருக்கிறார்.

தனது குட்டுக்கள் வெளிவரப் போவதையுணர்ந்த மோசடிப் பேர்வழி கருமபீட உத்தியோகத்தர் கையிலிருந்த காசுக் கட்டளைகளைப் பறித்தெடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தாராம்.

உடனடியாகச் செயலில் இறங்கிய கண்டித் தபாலதிபர், கொழும்பு காசுக்கட்டளைப் பணியகத்துடன் தொடர்பு கொண்டு தொடரிலக்கம் மூலம் அக்போபுரம் உபதபாலகத்துக்குரிய காசுக்கட்டளைகள் என்பதைக் கண்டறிந்து, திருகோணமலைக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

### தப்பவிட்டனர்

துரித கதியில் விசாரணை நடந்தபோது, உபதபாலதிபர் முன்னுக்குப்பின் முரணான பதில்களை அளிக்கத் தொடங்கினார். கடைசியில் காசுக்கட்டளை பின்னிலக்கக்கட்டுக்கள் எடுக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டபோது உபதபாலதிபர் தப்பி ஓடிவிட்டார்.

வீட்டிலுள்ள பொருட்கள் அப்படியே கிடக்க வீட்டைத் திறந்தபடி விட்டுவிட்டு, 54-0716 டொல்பின் ஹ ஏஸ் வாகனமொன்றில் ஆங்கிலப்படப் பாணியில் தப்பிச் சென்று விட்டார்.

விசாரணை அதிகாரி உடனடியாகக் கந்தளாய்ப் பொலிசாரின் உதவியைக் கோரியபோதும் அவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் அவரைக் கைது செய்ய முடியவில்லை.

நாட்டிலுள்ள சகல தபாற் கந்தோர்களுக்கும் மோசடி பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு காசுக்கட்டளையில் பத்தாயிரம் ரூபா வரையில் எழுதி, பத்து இலட்சம் வரை மோசடி செய்ய வாய்ப்பிருக்கிறது என அஞ்சலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



படிப்பகம்

# மந்தமான செயற்பாடு! பொருட்களுக்கு தட்டுப்பாடு

(மன்னார் நிருபர்)

மன்னார் ப.நோ.கூ. சங்கத்தின் பணிகள் தற்போது அசமந்தப் போக்கில் காணப்படுகின்றன. மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் மற்றும் அகதிகளுக்கான உலர் உணவு நிவாரண விநியோகம் என்பவற்றில் இச்சங்கம் அண்மைக்காலமாக அசிரத்தையுடன் செயற்படுவதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கடந்த ஆகஸ்ட் மாதம் வழங்கப்பட வேண்டிய அகதிகளுக்கான நிவாரணம் தற்போதுதான் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் சில பொருட்கள் இதுவரை வழங்கப்படவில்லை. செப்டம்பர் மாதத்திற்கான நிவாரணப் பொருட்களை இம்மாதம் 15ம் திகதிக்குமுன் வழங்கும்படி அரச அதிபர் பணித்திருந்த போதிலும் பொருட்களின் பற்றாக்குறையினால் அநேகமான கடைகளில் இன்னும் வழங்கப்படவில்லை.

எனினும் செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 4 மாதங்களுக்கான நிவாரணமும் டிசம்பர் 15ம் திகதிக்கு முன் வழங்கியே ஆக வேண்டும். ஆனால் இது சாத்தியப்படுமா என்று தற்போது வினா எழுந்துள்ளது.


இதற்குத் தேவையான பொருட்கள் எதுவும் தற்போதைக்கு இருப்பில் இல்லை. மாதா மாதம் அரசின் நிவாரணத்தையே நம்பியிருக்கும் அகதிகளின் வயிற்றில் இடி விழுந்தாற்போல் கூட்டுறவுக்கடைகளின் பணி அமைந்துள்ளது.

மண்ணெண்ணெய், மா போன்ற பொருட்கள் சீரான முறையில் கிளைகளுக்கு அனுப்பப்படாததால், இப்பொருட்களுக்கு செயற்கையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மண்ணெண்ணெயை நகரத்திற்கு வெளியே கொண்டுசெல்வதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதினால் கூட்டுறவுச் சங்கங்கள் இதன் விநியோகத்தினைச் சீராக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இச்சங்கத்தில் காணப்படும் ஆளணி மற்றும் வாகனப் பற்றாக்குறையினாலேயே இவ்வாறான கால தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனை நிவர்த்திக்கவோ மாற்று ஏற்பாடுகளைச் செய்யவோ கூட்டுறவு ஆணையாளர் துரித நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

# எழுத்தாளர் ரூபராணிக்கு சாகித்தியப் பரிசு!



(அக்குறணை நிருபர்)

1997ம் ஆண்டுக்கான- சிறுவர் இலக்கியத்திற்கான சாகித்தியப் பரிசு பிரபல சிறுகதை எழுத்தாளர் ரூபராணி ஜோசப்பின், "ஏணியும் தோணியும்" என்ற உருவகக் கதைத் தொகுப்பிற்குக் கிடைத்திருக்கிறது.

மட்டக்களப்பை பிறப்பிடமாகக்கொண்ட எழுத்தாளர் ரூபராணி இளைப்பாறிய நல்லாயன் கல்லூரி ஆசிரியையுமாவார்.

இவர் கடந்த 40 வருடங்களிற்கும் மேலாக இயல், இசை,நாடகத்துறையில் பிரகாசித்து வருகிறார்.

'சொல்லின் செல்வி' என்ற சிறப்புப் பட்டம் பெற்ற ரூபராணி ஜோசப் அவர்கள், 'முரசில்' தொடர்ந்து அற்புதமான கருக்களைக் கொண்ட சிறுகதைகளை எழுதி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முரசின் சார்பாக வாழ்த்துக்கள்.

எம்.என்.எம். அனஸ், அக்குறணை.

# வரப்பிரகாஷ் மரணம்—பொறுப்பாளிகள் யார்?

கடந்துபோன சில நாட்களில் நமது நாட்டின் அனைத்து மக்களையும் வேறுபாடுகளை மறந்து, கருத்தொருமித்து சிந்திக்க வைத்த சோகச் சம்பவம்தான் வரப்பிரகாஷ் எனும் இளம் குருத்தின் உதிர்வு. பகிடிவதை எனும் அர்த்தம் புரியப்படாத ஓர் அந்நியக் கலாசாரத்தின் கொடுமைக்குப் பலியாகி, விரும்பாத மரணத்தைத் தழுவிக்கொண்டவன் இவன். இளம் தலைமுறையினருள் புற்றுநோயாகப் புரையோடிவிட்ட இந்த விஷக் களையை வேருடன்களைய வேண்டும் என்ற ஆக்ரோஷத்தை அனைவரின் இதயங்களிலும் கிளர்ந்து எழச் செய்வதற்கு ஓர் அரும்பின் அஸ்தமனம்தான் தூண்டுகோலாக அமைய நேர்ந்தது ஜீரணிக்க முடியாத துரதிஷ்டம் ஆகும்.

பகிடிவதை என்பது வரப்பிரகாஷில் தான் முதன் முதலாகப் பரிசீலிக்கப்பட்ட ஓர் அறிமுகம் அல்ல. அந்த நாடகத்தை அரங்கேற்றியவர்கள் கூட முன்னர் அந்த வதைக்கு ஆளாக்கப்பட்டு அனுபவித்தவர்கள் தான். அனுபவித்தபோது அருவருத்தவர்களே பின்வந்த காலங்களில் புதியவர்களில் அவற்றை அமுல்படுத்தினர். இதுவே நாளாவட்டத்தில் ஒரு நச்சுவட்டமாக விஸ்வரூபம் எடுத்தது.

பல்கலைக்கழகங்கள் வெறும் கல்வியை மட்டும் போதிக்கும் கூடங்களாக அல்லாமல், மாணவரின் நன்னடத்தை, மனநலன் போன்றவற்றுக்கும் பொறுப்பானவையே. இதற்காகவே மாணவ ஆலோசகர், ஒழுக்கக்கட்டுப்பாட்டுக் குழு, மார்ஷல் போன்றோர் நியமிக்கப்படுகின்றனர்.

இவர்கள் யாவரும் தமது கடமைகளை உணர்வுபூர்வமாக மேற்கொண்டிருந்தால் பகிடிவதை எனும் போதைப் பொருளிலிருந்து மாணவ சமுகத்தைப் பாதுகாத்திருக்கலாம். முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கலாம்.

தமது அதிகாரங்களை, உரிய சட்டதிட்டங்களை அமுலாக்குவதில் பிரயோகிப்பதோடு மட்டும் நின்றுவிடாது மனோதத்துவ ரீதியிலும் மாணவரை அணுகியிருக்கலாம். இடையறாத பிரசாரங்களையும் மாணவர் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கலாம்.

உடலியல் ரீதியான மற்றும் சுகாதாரக் கேடு விளைவிக்கும் வதைகள் இடம்பெறா வகையில் கண்காணித்திருக்கலாம். கடந்த காலங்களில் இந்த பகிடிவதைகளில் சம்பந்தப்பட்டவர்களில் மாட்டுப்பட்டோர் ஒரு சிலரே. இவர்களை வெறும் தண்டனைக்கு உட்படுத்தியதால் மட்டும் இதனைத் தடுக்க முடிந்ததா? வித்தியாசமானமுறையில் இந்த விடயத்தை அணுகியிருக்கலாம் என்பதை அனுபவ வாயிலாக இவர்கள் உணராமல் போனது துரதிஷ்டமே.

மொத்தத்தில் பலரின் கூட்டுநடவடிக் கையாக மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட ஒரு சிலரே அந்நியப்படுத்தப்பட்டுக் குற்றம் சாட்டப்படுவதும் அதிஉச்ச தண்டனையை எதிர்நோக்குவதும் பொருத்தமானதா? இத்தகைய பாரபட்சமான தீர்வு ஒரு பழிவாங்கலாக அமையுமேயன்றி பரிகாரமாகாது. எனவே விசாரணைகளின் அணுகுமுறைகள் ஒரு தலைப்பட்சமற்றதாகவும், பரந்த சிந்தனையுடன் ஆராயப்படுவதாகவும், வெறும் அனுதாபக் கண்ணோட்டத்துக்கு உட்படாமலும், நியாய பூர்வமாகவும் அமைவதே விரும்பத்தக்கது.

மீண்டும் ஒரு வரப்பிரகாஷ் எனும் வேதனையின் சின்னம் என்றுமே தோன்றாமல் தடுக்கப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எடுக்கப்படும் அந்த நடவடிக்கைகள் மாணவர்களிடையே ஆத்மார்த்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாய் அமையவேண்டும்.

நியாயம் விரும்புவோர்கள்-பேராதனை.

## வாழைச்சேனையில் மீண்டும் பதற்றம்!

# புலிகளும்-படையினரும் நேருக்கு நேர்!

மட்டக்களப்பு- வாழைச்சேனையில் மீண்டும் சந்து பொந்துகளிலெல்லாம் புலிகள் இயக்கத்தினர் பட்டப் பகலில் நடமாடி வருகிறார்கள்.

ஆயுதங்களுடன் குறிபார்த்துத் திரியும் இரு தரப்பினருக்குமிடையில் எந்தக் கணத்தில் மோதல் ஏற்படும் என்ற பீதி மக்களைக் கிலி கொள்ளவைத்துள்ளது.

இதேவேளை வாழைச்சேனைச் சந்தியிலிருந்து வீதிப் பாதுகாப்பை வழங்கச் செல்லும் பொலிஸார் சரமாரியாகச் சுட்ட வண்ணம் செல்வதால் அப்பகுதி மக்கள் மேலும் நெருக்கடி நிலைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

புலிகள் இயக்கத்தினரின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் மாவீரர் தின ஏற்பாடுகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. இதனால் பாதுகாப்புத் தரப்பினர் தமது பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் மேலும் அவதானமாக இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

மாவீரர் தின ஏற்பாடுகளுக்காக கிழக்கிலுள்ள புலிகள் இயக்கத்தினரின் தளங்களில் விஷேட பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

# வெற்றிடம் நிரப்பப்படும்

(திருமலை நிருபர்)

திருகோணமலை மூதூர் அஞ்சல் அலுவலகங்களில் ஏற்பட்டுள்ள சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் அனைத்தும் இவ்வாண்டு இறுதிக்குள் நிரப்பப்பட்டுவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அஞ்சலகத்தில் 22 வெற்றிடங்களும் மூதூர் அஞ்சலகத்தில் 8 வெற்றிடங்களும் இவ்வாறு நிரப்பப்பட்டுள்ளன.

இதனால் 1995ம் ஆண்டு முதல் பதிவாளர்களாகக் கடமை புரியும் ஊழியர்கள் நிரந்தர நியமனம் பெறவிருக்கின்றனர் என்று திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு. நல்லதம்பி முரசுக்குத் தெரிவித்தார். இந்நியமனங்கள் ஏனைய திணைக்கள நியமனங்களைப் போலல்லாது தொடர் நியமனங்களாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த பிரதி அஞ்சல் மா அதிபர் (கிழக்கு) திரு ஆர். தியாகலிங்கம் சிரேஷ்ட நிருவாகச் செயலர் திரு எஸ். அருணகிரிநாதன் ஆகியோரின் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டு வரப்பட்டதையடுத்தே துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


சகலவிதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

சங்கீதப் புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு



**SAI SANGEETHA**
L. G. 123, Peoples Park,
Colombo 11. Tel : 445102

மனையாள மாந்திரிகம்





மனையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்கா தேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, மே பீல்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

விளம்பரப் பகுதி

ரெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

அரிசி இடித்து உடன் கொடுக்கப்படும்

நீங்கள் கழுவி, வடிய விட்டு கொண்டுவரும் அரிசியை உடனுக்குடன் இடித்து/இடித்து வறுத்துத் தருவோம். அத்துடன் ஆட்டா, கடலை, குரக்கன், உழுந்து மா, அரிசி மா முதலானவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. K.K.M. உற்பத்திகளும் கிடைக்கப்பெறும்

எமது சேகரிப்பு நிலையங்கள்

VENKAT TRADING CO.
73-B, KOTAHENA STREET, KOTAHENA. T.P : 337591

R.T.C.
33, ST. JOSEPH STREET, GRANDPASS. T.P : 435715

CROW ISLAND GROCERIES
B-21/1, CROW ISLAND ROAD. MATTAKKULIYA. T.P : 523587


ARTHY TRADERS
NO. 22, NEW KATHIRESAN ST., COLOMBO 13. T.P : 330298

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

**GLOBAL RICE FLOUR MILL**
குளோபல் அரிசி மா ஆலை
No. 100A, St. Andrew's Rd., Colombo - 15. T.P. : 522759.
(பஸ் பாதை இலக்கம் 145 & 173)
(Dockland Petrol Shed க்கு அருகாமையில்)
7.30 a.m. - 4.30 p.m. Daily
விடுமுறை நாட்களில் பகல் 12 மணி வரை

GRAYON


# 1வது பிறந்தநாள் வாழ்த்து



**ருக்ஷன் 05.11.1997**

திரு.திருமதி. கண்ணன் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் ருக்ஷன் தனது 1வது பிறந்தநாளை 05.11.97 அன்று ஜெர்மனியில் தனது இல்லத்தில் உற்றார், உறவினர், நண்பர்களுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, கார்த்திகா மாமி(இலங்கை), டடா (அம்மப்பா), அம்மம்மா, நியோமி சித்தா(கனடா), கேதீஸ் சித்தப்பா, நிகி சித்தி(ஜெர்மனி) மோகன் பெரியப்பா, நிஷா பெரியம்மா, ஆதீயா அக்கா, ஆதீஷ் தம்பி (கனடா) தயா மாமா, கௌரி மாமி, நிரோன் மச்சான் (இலண்டன்), பூட்டா, பூட்டி(ஜெர்மனி), ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.


**SPOKEN ENGLISH**
By Dr. Pon. Sakthivel
ஆங்கிலம், பேச, எழுத, வாசிக்க நவீன உளவியல் ரீதியில் மூன்றேமாதங்களில் தபால்மூலமும்/நேரிலும் கற்பிக்கப்படுகின்றது.
கொட்டாஞ்சேனையில்..........
ASIAN BUSINESS COLLEGE
250 first floor,
George R de Silva Mawatha
Colombo - 13 T.P. 078 492354
ஆரம்பம் 6/12/97 - 5 p.m To 7 p.m
வெள்ளவத்தையில் ..........
HARROW INT'L COLLEGE
28A, Alexndra Road. Colombo -06
ஆரம்பம் 7/12/97 - 8a.m to 10a.m
தபால் மூலம் ஆங்கிலம் கற்கவிரும்புவோர்க்கு AUDIO-CASSETTES உடன் கூடிய பாடத்திட்டம். விபரமறிய, கீழ்க்காணும் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து சுயவிலாசம் எழுதப்பட்ட முத்திரை யொட்டி தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
பெயர்: ..........
விலாசம்: ..........
**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S - 27. First Floor. P.O. Box-162.
Colombo Central Supper Market Complex.
Colombo 11. T.P:434770, 074 - 718592

www.padippakam.com

# 'ஜயசிக்குறுய்' கட்டம் மூன்று!

## தாக்குதலா? தற்காப்பா?

நவம்பர் 16ம் திகதி 'ஜயசிக்குறுய்' படையினர் தமது மூன்றாம் கட்ட நடவடிக்கையை ஆரம்பித்தனர். ஜயசிக்குறுய் நடவடிக்கை ஆரம்பமாகி ஆறுமாதத்தின் பின்னர் மூன்றாம் கட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு பிரதானசாலை வழியாக நேராகச் செல்வதானால் ஏறக்குறைய 70 கிலோமீட்டர் தூரம்.

இதுவரை வவுனியா-யாழ் சாலையில் படையினர் முன்னேறியுள்ள தூரம் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர். அதிலும் போரிட்டு முன்னேறியது 12 கிலோமீட்டர்.

**70 கிலோமீட்டர் நெடுஞ்சாலையை 20 ஆயிரம் படைகள் கைப்பற்ற முடியாமல் ஆறுமாத காலமாக தடுத்து வைக்கப்பட்டது இலேசுப்பட்ட காரியமல்ல.**

கனரக ஆயுதபலம், ஆட்பலம் என்பவற்றில் படையினரையும், புலிகளையும் ஒப்பிட்டால் படையினரின் பலம் மலை. புலிகளின் பலம் மடு. ஏணிவைத்தாலும் எட்டாத வித்தியாசம்.

__வான் படை:__ அதிலே நவீன போர் விமானங்கள். ஆள் இல்லாத வேவு விமானம். இரவிலும் தடம் அறிந்து தாக்கும் லேசர் விமானம், குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிகள் என்பவை உள்ளன.

__கடற்படை:__ ரோந்துப் படகுகள், போர்க்கப்பல்கள், எட்டத்தில் இருந்து தாக்கும் ஏவுகணைகள், நவீன ராடர்கள் மற்றும் வசதிகள்.

__தரைப்படை:__ இதற்குள் யானைகள் போல நகரும் டாங்கிப் படை, கவச வாகனங்கள், புல்டோசர்கள் மற்றும் கனரக வாகனப் படை, ஆட்டிலெறிப் படை, மோட்டார் போன்ற கனரக ஆயுதப் படை, மற்றும் துப்பாக்கிகள் ஏந்திய படை.

இதுதவிர, கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட பொலிஸ் படை.

ஆக, நால்வகைப் படை, அந்த நால் வகைப் படைகளுக்குள்ளும் பல ரகப் படைகள். பிரிவுகள்.

அமெரிக்க கொமாண்டோக்கள் முதற்கொண்டு பல நாடுகளில் பயிற்சி பெற்ற படை அதிகாரிகள்.

தண்ணீராய் செலவிடக்கூடிய அளவுக்கு ரவைகள், ஷெல்கள், குண்டுகள்.

புலிகள் ஒரு ஷெல் ஏவினால் பதிலுக்கு குறைந்தது பத்து ஷெல் படைத்தரப்பில் இருந்து பறந்து செல்கிறது.

காயப்பட்ட படையினருக்கு தடையற்ற மருத்துவ வசதிகள், மருத்துவ மனைகளில் சிகிச்சைகளுக்கு முன்னுரிமை, பாரிய இராணுவ மருத்துவமனையும் உள்ளது.

இத்தனை வசதி கொண்ட பெரும் படையை எதிர்த்து ஆறுமாதம் சிறு படை ஒன்று தாக்குப் பிடித்தது என்பதே மாபெரும் ஆச்சரியம்.

அத்தனை ஏன், புளியங்குளத்தில் உள்ள படைகளின் நிலைக்கும், புளியங்குள நகருக்கும் இடையே உள்ள தூரம் குறைந்தது இரண்டு, மூன்று கிலோ மீட்டர்கள்தான்.

**அந்த தூரத்தை கடக்க மூன்று மாதம்வரை முயன்று பார்த்துவிட்டுத்தான் பல முனைகளில் முன்னேறும் முடிவுக்கு படைத்தரப்பு சென்றது.**

வவுனியா-யாழ் சாலையில் உள்ள படையினர் ஒரு முகமாய் ஒன்று குவிந்து மோதியும்கூட மூன்று கிலோ மீட்டர் தூரத்தை கடந்து புளியங்குள நகரை கைப்பற்ற இயலவில்லை.

இதுதான் உண்மைநிலை. இதனை விளக்கினால் புலிகளுக்கு ஆதரவான விமர்சனம் என்று முத்திரை குத்தப் பார்க்கிறார்கள்.

**அரச வெகுஜன தொடர்பு சாதனங்களில் புளியங்குளம் நகரை பிடித்துவிட்டதாக கடந்த ஆறுமாத காலத்தில் பல தடவை கூறியுள்ளன.**

திருப்பி திருப்பி ஒரே நகரை ஏன் பிடிக்கிறார்கள்? என்று மக்கள் கிண்டல் செய்கிறார்கள்.

இறுதியாக சமீபத்தில் பிரிகேடியர் சரத் முனசிங்காவே புளியங்குள நகர் பிடிக்கப்படவில்லை, மாங்குளமும் பிடிபடவில்லை என்று மறுத்திருந்தார்.

**உண்மையாகவே படைத்தரப்புக்கு எதிராக பிரசாரம் செய்வது அரச வெகுஜன தொடர்புச் சாதனங்கள்தான்.**

பொய்யைச் சொல்லிச் சொல்லியே, இனிமேல் படைத்தரப்பு கூறும் உண்மைச் செய்திகளையும் நம்ப முடியாமல் செய்து விடுகின்றனர்.

**போர்க்கள நிலவரத்தைப் பொறுத்தவரை மாபெரும் பலத்துடன் உள்ள படையினர் முன்னேறுவதாகக் கூறப்படும் செய்திகள் ஆச்சரியமல்ல. அவர்களை முன்னேறவிடாமல் சிறுபடைஒன்று தடுத்து நிற்பதுதான் ஆச்சரியம்.**

அரை கிலோ மீட்டர் தூரம் முன்னேறினால்கூட அதனை பெரிதாகக் கருதி படைத்தரப்பு பெருமிதம் கொள்கிறது. பெரிதாக பிரசாரம் செய்கிறது. புலிகளின் எதிர்ப்பு யுத்தம் பாரதூரமாக இருக்கிறது என்பதும், படைத்தரப்பினர் புலிகளை தமக்கு சமபலமான படையாக மதிக்கின்றனர் என்பதுமே அவற்றின் உண்மையான அர்த்தமாகும்.

இன்னொரு நாட்டுக்குள் புகுவதுபோலவே புலிகளின் தளங்களை அறிய வேவு விமானங்களை பறக்கவிடவேண்டியுள்ளது. தரையில் மட்டுமல்லாமல் கடலிலும், வானிலும்கூட புலிகளின் தாக்குதல் தூரத்துக்குள் செல்ல முடியாமல் எட்டத்தில் நின்றபடிதான் வான் படையும், கடற்படையும் செயற்படுகின்றன.




அம்புக்குறியால் காட்டியிருப்பது கரிப்பட்டமுறிப்பில் இருந்து கிளிநொச்சி நோக்கிய உட்பாதை வழி.

புலிகளிடம் கடற் போர்க்கப்பல்கள் எதுவும் கிடையாது. கடற்படையினரிடம் போர்க் கப்பல்கள் உள்ளன. அவ்வாறு இருந்தும் கடல் பரப்பில் நின்ற ஆயுதக் கப்பலை நெருங்கவே கடற்படையினரால் முடியவில்லை. எட்டத்தில் நின்று, வான்படைக்கு தகவல்தான் கொடுக்க முடிந்தது.

வான்படையும் வேவு விமானத்தை அனுப்பி நன்றாக இடம்பார்த்த பின்னர் தீர ஆராய்ந்துதான் தாக்கப்போகிறது.

**இதுவெல்லாம் இன்னொரு நாட்டுப் படையுடன், இன்னொரு நாட்டுப் பகுதிக்குள் நடைபெறும் சமர்களில் கடைப்பிடிக்கப்படும் முறைகளை ஒத்ததாகவே உள்ளன.**

படைத்தரப்பினரும், படை உயரதிகாரிகளும் உள்ளூர புலிகள் பற்றிய பிரமிப்புக்களைக் கொண்டுள்ளனர். "எப்படி தாக்குப் பிடிக்கிறார்கள். எந்த முனையில் சென்றாலும் அங்கு தோன்றுகிறார்களே" என்று படை உயரதிகாரி ஒருவர் தன் நண்பர் ஒருவரிடம் ஆச்சரியம் தெரிவித்தாராம்.

இன்னொரு விடயத்தையும் படையினர் முடிமறைக்க முற்படுகின்றனர். படையினர் பற்றிய செய்திகள் மட்டுமல்ல, புலிகள் பற்றிய தகவல்களும்தான் பத்திரிகைகளில் வெளியாகின்றன.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தொடங்கிய போதே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில், ஓமந்தைவரை படையினர் எதிர்ப்பின்றி செல்ல முடியும். அதன்பின்னர் புலிகள் நிலைகொண்டுள்ளனர். புளியங்குளத்தில் புலிகளின் பாரிய பங்கர்கள் உள்ளன என்று களநிலவரத்தை சுட்டிக் காட்டியிருந்தோம்.

**எனவே, தங்கள் உண்மைக்கு மாறான பிரசாரங்களுக்கு பத்திரிகைகள் ஒத்து ஊத வேண்டும் என்று படைத்தரப்பு எதிர்பார்ப்பது எவ்வகையிலும் நியாயமல்ல.**

இப்போது கள நிலவரத்துக்கு செல்லுவோம்.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தொடங்கப்பட்ட பின்னர் படை அதிகாரிகள் மட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது லால் வீரசூரிய பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பொறுப்பதிகாரி, மற்றும் நாட்டின் பல பகுதிகளில் இருந்து கொண்டு சென்று குவிக்கப்பட்ட மேலதிக படையணிகள், மேலும் இராணுவ தளபாடங்கள் ஆகியவற்றுடன் மூன்றாம் கட்ட நடவடிக்கை ஆரம்பமானது.

வன்னியில் மழை கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. வெள்ளம் ஆங்காங்கே தேங்கி நிற்கிறது.

மழைக்காலத்தில் கெரில்லாப் படையணிகள் நடமாடலாம். கனரக வாகனங்களுடன் நகரும் மரபுப் படையணிகள் மழைக்காலத்தில் முன்னேறுவது முடியாத காரியம்.

டாங்கிகள், புல்டோசர்கள், மற்றும் கனரக வாகனங்கள் சேற்றில் புதையும். கொட்டும் மழைக்குள் கனரக வாகனங்களை நெருங்கும் கெரில்லாக்கள் தாக்கி அழித்தும் விடுவர்.

**மழைக்காலம் தமக்குப் பாதகம் என்று தெரிந்தும் மூன்றாம் கட்ட நடவடிக்கையை படையினர் ஆரம்பித்தமை தொடர்பாக இராணுவ விமர்சகர்கள் சிலர் வியப்புத் தெரிவித்துள்ளனர்.**

ஆனால், ஜயசிக்குறுய் மூன்றாம் கட்ட நடவடிக்கையை மழையோடு மழையாக படைத்தரப்பு ஆரம்பித்தமைக்கு காரணம் இல்லாமல் இல்லை.

மாவீரர் தினத்துக்குள்ளோ, அல்லது மழைக்காலத்தின் முன்போ 'ஜயசிக்குறுய்' படையினர்மீது பாரிய தாக்குதலைத் தொடுக்க புலிகள் தயாராகி வருவதாக படையினருக்கு தகவல் கிடைத்ததாம்.

தற்போது வன்னியில் நிலைகொண்டுள்ள படையினர், புலிகளின் குகைக்குள் தலையைக் கொடுத்த நிலையில்தான் உள்ளனர்.

புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்று நடக்குமானால், ஏற்படக்கூடிய ஆட்பல இழப்பைவிட, கனரக வாகனங்கள், ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினால் மேலும் புலிகளின் மரபுப் படைப் பலம் உயர்ந்துவிடும். பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய கதையாகிவிடும்.

**அதனால், மழைக்காலத்தில் புலிகள் பாரிய தாக்குதலுக்கு தயாராகாமல் தடுக்க, புலிகளை தொடர்ந்து சண்டைக்கிழுக்கும் தந்திரம்தான் இந்த மழைக்காலச் சமர்.**

படைத்தரப்பு முன்னேறும் முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டே இருந்தால், அதனை தடுத்து நிறுத்தும் பணியில்தான் புலிகளின் கவனம் இருக்கும். தங்கள் அணிகளை ஒருமுகப்படுத்தி பாரிய தாக்குதலில் ஈடுபடுத்த சந்தர்ப்பம் கிடைக்காது என்பது படைத்தரப்பின் கணக்கு.

**இன்னொரு காரணம் யாதெனில், ஓய்வாக இருந்தால் படையினர் மழைக்குளிரில் இழுத்துப் போர்த்துக்கொண்டு தூங்கிவிடுவார்கள். விழிப்புணர்ச்சி தளர்ந்து போகும். எனவே முன்னேறும் முஸ்தீபுகளில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தால்தான் தயார் நிலை இருக்கும்.**

**மூன்றாவது காரணம் யாதெனில், பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நடந்து வருகின்றன. வன்னியில் பல்லாயிரம் படைகள் முடங்கிக் கிடக்கின்றன. கண்ட பலன் என்ன? என்று எதிர்க்கட்சி கேள்விகளால் துளைத்தெடுத்துவிடும்.**

எனவே, வன்னிக் களத்தில் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை சுறுசுறுப்பாகவும், முன்னேற்றகரமாகவும் நடைபெற்று வருவதாக நம்பவைக்க வேண்டும்.

**ஆக, படைத்தரப்பின் இராணுவ ரீதியான தற்பாதுகாப்பு, அரசாங்கத்தின் அரசியல் ரீதியான தற்பாதுகாப்பு என்பவைதான் மழைக்காலத்தில் ஆரம்பமான மூன்றாம் கட்ட நடவடிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.**

புலிகளின் அணிகளை பலமுனைகளில் கவனம் செலுத்தச் செய்தால்தான், தாக்குதலுக்கான பாரிய அணியாகத் திரண்டு தங்களை நோக்கி பாய்ச்சல் நடத்தமாட்டார்கள் என்பது படைத்தரப்பின் திட்டம்.

எனவே நான்கு முனைகளில் இருந்து படைத்தரப்பினர் முன்னேறும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**முன்னேறும் முயற்சியாக இது சொல்லப்பட்டாலும் தமது நான்கு முனைகளிலும் உள்ள முன்னரங்க நிலைகளை புலிகள் நெருங்காமல் தடுக்கும் தற்காப்பு முயற்சியாகவும், புலிகளின் ஊடறுப்பை தடுக்கும் தந்திரமாகவுமே இந்த முயற்சிகள் அமைந்துள்ளன.**

புளியங்குள முன்னரங்க நிலைகள், புளியங்குளத்துக்கு கிழக்கே காட்டுப்பாதையை சார்ந்துள்ள பெரியமடு, கரப்புக்குத்தி மற்றும் கரிப்பட்டமுறிப்பு பகுதி நிலைகள், கிளிநொச்சியில் உள்ள நிலைகள் ஆகியவை புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சுறுத்தல் படையினர் மத்தியில் உள்ளது.

இந்த நான்கு முனைகளில் ஏதேனும் ஒன்றை குறிவைத்து புலிகள் அழித்தொழிப்பு சமர் நடத்தலாம் என்று படையினர் நினைக்கின்றனர்.

எனவே, இந்த நான்கு முனைகளில் இருந்து முன்னேறிச் செல்ல முயல்வதும், தம் நிலைகளுக்கு திரும்புவதுமாக சண்டையிட்டபடியே இருந்தால், புலிகள் நெருங்கி வந்து பாய்ச்சல் நடத்த முடியாமல் போகும். அதுதான் படையினரின் தந்திரம்.

நான்கு முனைகளில் ஒன்றின்மீது புலிகள் தாக்குதல் நடத்த தயாராகாமல், நான்கு முனைகளில் இருந்து புறப்படும் படையினரை தடுத்து நிறுத்தும் தற்காப்பு தாக்குதலில் கவனம் செலுத்தவைப்பதுதான் தமக்கு பாதுகாப்பு என்பது படைத்தரப்பின் எண்ணம்.

**அதாவது, படையினர் தமது தற்காப்புக்காக, புலிகளையும் தற்காப்பு நிலையில் வைத்திருக்க விரும்புகின்றனர். மழைக்காலம் முடியும் வரை இந்தத் தந்திரத்தை கடைப்பிடிப்பதுதான் படையினரின் நோக்கம்.**

'ஜயசிக்குறுய்' படையினரின் உடனடி நோக்கம் மழைக்காலத்தின் முன்பாக முன்னேறுவது அல்ல. மழைக்காலத்தில் தம்மை நோக்கி புலிகள் முன்னேறாமல் தடுப்பதுதான்.

நவம்பர் 16ல் மூன்றாம்கட்ட நடவடிக்கை ஆரம்பமானவுடன், அரச பிரசார சாதனங்களில் ஆரவாரமான பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டன.

**புளியங்குளநகர் கைப்பற்றப்பட்டது எனவும், மாங்குளம்நகர் பிடிபட்டது என்றும் வானொலி, தொலைக்காட்சி, அரச பத்திரிகைகள் என்பவற்றில் உண்மைக்கு முற்றிலும் மாறான தகவல்கள் சொல்லப்பட்டன.**

நவம்பர் 16 முதல் 20ம் திகதிவரையான பத்து நாட்களில் ஜயசிக்குறுய் படையினர் தமது முன்னைய நிலைகளில் இருந்து முன்னேறும் முயற்சிகள்தான் நடந்தனவே தவிர, முன்னேற முடியவில்லை.

நான்கு முனைகளில் இருந்து முன்னேறுவதற்கு முற்படுவதாலும், காட்டுப் பாதையூடாக கிளிநொச்சியை சென்றடைய முற்படுவதாலும் வவுனியா-யாழ் சாலையில் புலிகளின் பலம் குறைந்திருக்குமோ? என்று ஆழம் பார்த்தனர் படையினர்.

அதனால் புளியங்குளம் நகர் நோக்கி முன்னேற முயன்றனர். முன்னர்போலவே எதிர்ப்பு இருந்தது. நகரை நோக்கி நகர முடியவில்லை.

அதேசமயம் பெரிய மடுவில் இருந்து கனகராயன்குளம் நோக்கி முன்னேறிச் செல்லவும் இயலவில்லை. அங்கும் புலிகளின் அணிகள் எதிர்ப்புக்காட்டின.

கரிப்பட்ட முறிப்பு ஊடாக மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியை ஊடறுத்து முன்னேறிப் பார்த்தனர். அங்கும் புலிகளின் எதிர்ப்பு பலமாக இருந்தது.

கரிப்பட்ட முறிப்பில் இருந்து உள்காட்டு வழியாக, அதாவது பழைய கண்டி வீதிவழியாக கிளிநொச்சிக்கு செல்ல 40 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க வேண்டும். (20 கிலோ மீட்டர் என்று பிரிகேடியர் சரத் முனசிங்க கூறியது பூகோளத்துக்கு மாறான தகவல்.)

கரிப்பட்ட முறிப்பில் இருந்து மாங்குளத்துக்கு செல்வதானால் மாங்குளம் ஒட்டிசுட்டான் சாலையில் கிட்டத்தட்ட எட்டு கிலோ மீட்டர் செல்லவேண்டும்.

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியால் மாங்குளம் நோக்கி செல்லவும் முயன்றனர். மாங்குளம் செல்லாமல் பழைய கண்டிவீதி உட்பாதையால் கிளி நொச்சி நோக்கிய திசையில் நகரவும் முயன்றனர். இரண்டும் சாத்தியமாகவில்லை.

அதே கட்டத்தில் கிளிநொச்சியில் இருந்து முன்னேறுவதுபோல போக்குக் காட்டிய படையணியும் புலிகளால் தாக்கப்பட்டது.

**மொத்தத்தில் நான்கு முனைகளிலும் நடந்த ஆழம் பார்த்தல் மூலம், மழைக்காலத்தில் முன்னேற முயல்வது சாத்தியம் இல்லை என்பதையும் படைத்தரப்பு நன்கு அறிந்து கொண்டுள்ளது.**

கரிப்பட்ட முறிப்பில் இருந்து கிளிநொச்சிக்கு செல்லும் பாதையிலும், கரிப்பட்ட முறிப்பில் இருந்து மாங்குளத்துக்கு செல்லும் பாதையிலும் கனகராயன் ஆறு குறுக்கிடுகிறது. கடும் மழையால் வெள்ளம் புரண்டோடுகிறது. அதனை மழைக்காலத்தில் தாண்டிச் செல்வது முடியாத காரியம்.

**கரிப்பட்ட முறிப்புக்கு அருகே உள்ள கனகராயன் ஆற்றுப் பாலங்கள் புலிகளால் உடைக்கப்பட்டுவிட்டன. எனவே, தற்பாதுகாப்பு என்ற கட்டத்தை தாண்டி முன்னேறும் தாக்குதல்களை படையினர் மழைக்காலத்தில் நடத்த முடியாது.**

களநிலவரம் இவ்வாறு இருக்கையில் கிளிநொச்சியை நோக்கி படையினர் முன்னேறுவதாகவும், சில நாட்களில் கிளிநொச்சிக்கு படையினர் சென்றடைந்து விடுவர் என்றும் செய்திகள் கூறப்பட்டன.

இத்தனைக்கும் மூன்றாம் கட்ட நடவடிக்கை ஆரம்பித்து இதுவரை பத்து நாட்களுக்குள் பாரிய மோதல்கள்கூட நடைபெறவில்லை.

மூன்றாம் கட்ட நடவடிக்கை பற்றிய பெரிதுபடுத்தல் காரணமாக ஏற்பட்ட எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் விதமாக விமானப் படை தாக்குதல் பற்றிய செய்திகள் ஆரவாரப்படுத்தப்பட்டன.

விமானப்படையினர் நடத்திய இரு தாக்குதல்கள் பற்றிய செய்திகளும், அதில் ஒரு தாக்குதல் தொடர்பாக வேவு விமானம் எடுத்த புகைப்படங்களும் தொலைக் காட்சிகளில் காண்பிக்கப்படுகின்றன.

19.11.97 அன்று மாங்குளத்தில் தேக்கு மரக் காட்டுக்குள் இருந்த முகாம் ஒன்று தாக்கப்பட்டதாகவும், 100 புலிகள்வரை பலியானதாகவும் படைத்தரப்பு கூறியிருந்தது.

**முரசுக்கு கிடைத்த தகவலின்படி, புலிகளின் கராஜ் ஒன்றுதான் தாக்கப்பட்டது. கரப்புக்குத்தி மோதலில் படையினரிடம் இருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட டபிள்கப் வாகனம் ஒன்றும் தாக்குதல் காரணமாக நாசமானது. புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பலியாகி இருக்கிறார்.**

23.11.97 அன்று புலிகளின் டீசல் பரல்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியப் பகுதியே தாக்குதலுக்கு உள்ளானது.

இந்த இரண்டு இலக்குகளுமே அடர் காட்டுக்குள் அமைந்திருந்தவை அல்ல. வேவு விமானத்தால் அடர் காடுகளுக்குள் உள்ள முகாம்களை துல்லியமாக மோப்பம் பிடிக்க இயலாது, வாகன நடமாட்டங்கள் இருந்தால் மட்டும் ஓரளவு மோப்பம் பிடிக்க இயலும்.

புலிகளின் பிரதான முகாம்கள், பிரதான களஞ்சியங்கள் என்பன அடர்காட்டுப் பகுதிகளுக்குள்ளும், வானில் இருந்து பார்த்தால் அடையாளம் தெரியாமல் உருமறைப்பு செய்யப்பட்ட நிலையிலுமே இருக்கும்.

வேவு விமானம் பற்றியும், அதன் மோப்ப வரையறைகளையும் அறிந்து கொண்டு, அதற்கேற்ற பாதுகாப்பு ஏற்பாடுகளை புலிகள் மேற்கொண்டுள்ளனராம்.

அது மட்டுமல்லாமல், குண்டுவீசச் செல்லும் விமானம் எழுப்பும் ஒலி கேட்டதுமே புலிகள் பதுங்கு நிலை எடுத்துவிடுவர். எனவே புலிகளின் முகாம் தாக்கப்பட்டால் கூட பாரிய உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு இருக்காது.

புலிகளின் இரகசிய வானொலியை வழிமறித்துக் கேட்டதாக அடிக்கடி செய்திகளில் கூறுகிறார்கள். வானொலி என்று செய்திகளில் கூறுவது தொலைத்தொடர்பு சாதனங்களை.

**மாங்குளத்தில் நடைபெற்ற சம்பவங்களையோ, வன்னி மோதல்களின் நிலவரம் பற்றியோ புலிகள் மறைக்க விரும்பினால் தொலைத் தொடர்பு சாதனங்கள் ஊடாக ஏன் பேசிக்கொள்கின்றனர். நேராகப் பிரபாகரனிடம் சென்று கூறிவிடலாம். சென்றுவர அரைமணிநேரம்கூட ஆகாது.**

அதேபோல புலிகளின் உடல்கள் கைப்பற்றப்பட்டதாக அடிக்கடி கூறினாலும் கூட, எப்போதாவது ஒரு தடவைதான் உடல்கள் ஒப்படைக்கப்படுகின்றன.

உடல்கள் கைப்பற்றப்பட்டன என்று கூறுவதும் ஒரு பிரசார தந்திரம்போல பாவிக்கப்பட்டு வருகிறது.

போரில் பிரசார யுத்தமும் ஒரு அம்சம்தான். எனினும் இதுவரை புலிகள் தங்கள் தரப்பு இழப்புக்களை சற்றுத் தாமதமாகவேனும் மறைக்காமல் வெளியிட்டு வருகின்றனர். ஆனால் கடந்த 15 வருடப்போரில் படைத்தரப்பு இழப்பு பற்றிய உண்மை விபரம் இன்றுவரை இரகசியமாகவே உள்ளன.

தமது பிரசார யுத்தம் போர்க்கள நடவடிக்கைகளுக்கு உதவுகிறதா? இல்லையா? என்பதை திறந்த மனதுடன் படைத்தரப்பு ஆராய்ந்து பார்ப்பது நன்று. ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**யாழ் குடாநாட்டில்** ரெண்டு எழுத்தாரின் நடமாட்டங்கள் அதிகமாகியுள்ளது. யாழில் வழிதவறிப் போன பச்சை உடையினர் நாலுபேர் பெண் ரெண்டு எழுத்தாரைக் கண்டுள்ளனர். உடனே, அவர்கள் கண்ணில் படாமல் மறைந்து கொண்டனராம். இரண்டு நாட்கள்வரை அப்பகுதியில் ரெண்டு எழுத்தார் நடமாட்டம் இருந்தமையால் பச்சை உடையினரும் பதுங்கியே இருந்துள்ளனர். பின்னர்தான் முகாமுக்கு திரும்பினராம்.

**வடமராட்சியில்** இரண்டு எழுத்தாருடன் நெருக்கமாக இருந்த குடும்பம் அது. அக் குடும்பத்தில் சிலர் ரெண்டு எழுத்தாருடன் இருந்து பலியானவர்கள். சமீபத்தில் அக் குடும்பத் தலைவருக்கும் பச்சை உடை அதிகாரிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இத்தகவல் ரெண்டு எழுத்தாருக்கு போய்ச் சேர்ந்தது. நேராக வந்தாராம் 'பொட்டு'. பதினைந்து வருடமாக ஆதரவாக இருந்துள்ளீர்கள். பெயரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கோ என்று கூறிவிட்டுப் போயுள்ளாராம்.

**ரெண்டு எழுத்துத் தலைவரைப்** பார்க்கச் சென்றால் அப்பிள் சாறு குடிக்கலாம் எண்டு பேட்டி கொடுத்தார் ஒருத்தர். தேசிய தொலைக் காட்சியில்தான் இப் பேட்டி ஒளிபரப்பானது. ரெண்டு எழுத்துத் தலைவர் நாட்டைவிட்டு போகத் திட்டம், கலக்கத்தில் இருக்கிறார் எண்டு முந்தி செய்தி சொன்னவை. இப்ப என்னவென்றால் 'ஹாயாக' இருக்கிறார் எண்ட மாதிரியல்லோ பேட்டியில் சொல்லப்படுகிறது? இதில் எது உண்மை? எண்டு கேட்டார் நண்பர். நான் மூச்சு விடேல்லை. உண்மையைச் சொன்னால் ரெண்டு எழுத்தாரின் 'லைன்' எண்டல்லவோ சொல்லுகினம்.

**தலைநகரில் பாதுகாப்பு** உயர் அதிகாரி ஒருவர் நடத்திய விருந்துபசாரத்தில் மான்கறி தூள் கிளப்பியதாம். வன்னியில் இருந்து வான் மார்க்கமாக மான் வந்ததாம். மான் பறக்குமோ எண்டு கேட்க வேண்டாம். விமானப் பயணம்தான்! இப்பவெல்லாம் வன்னியில் இருந்து கொண்டுவரப்பட்ட மான்கறி இருந்தால்தான் ஒரு மதிப்பு எண்ட மாதிரியாகிப் போச்சாம்.

**யாழில் மலிவுவிலையில்** மரக்கறி கொள்முதல் செய்யப்பட்டு தலைநகர அதிகாரிகளுக்கு வந்து சேர்வதாக ஆங்கிலப் பத்திரிகை ஒண்டு தகவல் போட்டுள்ளது. விமான இருக்கைகளை மரக்கறி பொதிகள் நிரப்புகிறதாம். தலைநகரில் இருந்து தீர்வுப் பொதி போகாவிட்டாலும், அங்கிருந்து மரக்கறிப் பொதி வருகுது பார்த்தியளோ!

**பட்ஜெட்டுக்கு ஆதரவாக ஜெட் வேகத்தில்** கை உயர்த்தினர் கூட்டான கட்சிக்காரர்கள். அச் செய்தியை மட்டும் பத்திரிகைகளில் இடம்பெறச் செய்யாமல் தடுக்க முயற்சித்தனராம். பாதுகாப்பு செலவீனத்துக்கு மட்டும் எதிர்ப்பு தெரிவித்து வாக்களிப்பினமாக்கும். அதைச் செய்தியாக போடுமாறு கேட்பினமாக்கும். பாதுகாப்பு செலவீனங்களும் உள்ளடக்கப்பட்ட பட்ஜெட்டுக்கு ஆதரவளித்துக் கொண்டு, அதுக்கு மட்டும் எதிர்ப்பு காட்டுறது பம்மாத்துதானே பாருங்கோ. எல்லாருக்கும் தண்ணிகாட்டுகினம்.

**யாழ் குடாநாட்டில்** இயக்கத்தினர் பல்வேறு சிரமதானப் பணிகளில் சிரத்தை காட்டி வருவதோடு, ஒரு தும்புத்தடி கொடுத்து உதவினாலும் செய்தியாக வெளியிடுவது யாவரும் அறிந்ததே. மணிக்கூட்டு கோபுரம் திருத்த முயற்சி எண்டும் செய்தி வந்தது. நன்று! மூன்று இயக்கங்கள் யாழில் இருந்தும் கூட, முறிந்து கிடக்கும் சங்கிலியன் சிலையும், உடைந்து கிடக்கும் முதல் போராளி சிவகுமாரன் சிலையும் ஏன் கண்ணில் படேல்லை? காலம் மாறலாம், சூழல் மாறலாம், அடிப்படை உணர்வுகள் மாறுமோ? இன்னமும் வாயால்தானே சோறு தின்கிறோம்.

**யாழுக்கு முஸ்லிம் மக்கள்** திரும்பிச் செல்லவேண்டும் என்பது நியாயத்திலும் நியாயம், அதுக்காக ஒரு வெகுஜனப் பிரதிநிதி புலுடா விட்டார் பாருங்கோ அது அநியாயத்திலும் அநியாயம். தான் சொன்னது பொய் எண்டால் ரெண்டு எழுத்தார் ஏன் மறுக்கேல்லை? எண்டு கேட்கிறாராம். இவரைக் கணக்கில் எடுத்தால்தானே மறுக்கிறதுக்கு. அவரது கட்சியிலேயே கணக்கில் எடுப்பதில்லை. அவரது புலுடாவுக்கு கட்சிக்குள்ளும் விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாம்.

**தற்கால** அரசியல்வாதிகளுக்கு பிடித்த எழுச்சிக் கவிதை.

**சங்கே முழங்கு**

**"எங்கள் வாழ்வும்**
**எங்கள் வளமும்**
**மங்காத பொய்யென்று**
**சங்கே முழங்கு"** ■



படிப்பகம்

www.padippakam.com

**158**

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# வன்னியில் இருந்து இறுதி உத்தரவு!

# கொழும்புக்கு வந்த குழு!

**யா**ழ் அரச அதிபராக பதவி வகித்தவர் பஞ்சலிங்கம். 1984ம் ஆண்டு முதல் யாழ் அரச அதிபராக பதவி ஏற்றார்.

மிகச் சிறந்த நிர்வாகி என்று பெயர் எடுத்தவர் பஞ்சலிங்கம். இயக்கங்களுடனும் நல்லுறவு வைத்திருந்தார்.

குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துடன் பஞ்சலிங்கம் ஆதரவான போக்கைக் கொண்டிருந்தார். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தவர்களாக இருந்த ரமேஷ், டேவிற்சன் ஆகியோர் பஞ்சலிங்கத்தை அடிக்கடி சந்தித்து, அவர்மூலம் சில காரியங்களை செய்வித்தனர்.

யாழ் குடாநாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சிவில் நிர்வாக வேலைகள் டேவிற்சன், ரமேஷ் ஆகியோரின் பொறுப்பில் இருந்தமையால் அரச அதிபரின் ஊடாகவும் சில காரியங்களை மேற்கொண்டனர்.

புலிகள் இயக்கத்தினரும் பஞ்சலிங்கத்துடன் தொடர்பு வைத்திருந்தனர். புலிகள் இயக்க அரசியல் பிரிவு பொறுப்பாளர் திலீபன்தான் பஞ்சலிங்கத்துடன் தொடர்பாக இருந்தார்.

ஏனைய இயக்கத்தினர் பெரியளவு தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் தான் முதன் முதலில் 'ஈழமுத்திரை' வெளியிடப்பட்டது. முத்திரையை வடிவமைத்தவர் டேவிற்சன்.

முத்திரைகள், பணநோட்டுக்கள் என்பவற்றை வெளியிடுவது பாரதூரமான விடயம். அதற்கு ஒத்துழைப்பது மாபெரும் குற்றம். ஆனால் 'ஈழமுத்திரை' வெளியீட்டு விழாவின் பின்னர், அரச அதிபர் பஞ்சலிங்கத்திடம் ஈழமுத்திரையை ரமேசும், டேவிற்சனும் வழங்கிய போது அவர் பணம் கொடுத்துப் பெற்றுக் கொண்டார்.

அப்போது அவர் கூறியது: "இந்தக் கதிரையில் இருந்து நான் இதைப் பெறக்கூடாது. ஆனாலும் நானும் ஒரு தமிழன்தானே."

## எச்சரிக்கை

இந்தியப் படையினர் வந்தபின்னர் பஞ்சலிங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக புலிகளுக்கு அதிருப்தி ஏற்பட்டது. இந்தியப் படை அதிகாரிகளுடன் பஞ்சலிங்கத்துக்கு நெருக்கமான தொடர்புகள் இருப்பதாக புலிகள் நம்பினார்கள்.

அதேவேளை இலங்கை அரசுடனும் பஞ்சலிங்கம் நெருக்கமான உறவு கொண்டுள்ளதாகவும் புலிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

இந்தியப் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே சமரசம் செய்துவைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டார் பஞ்சலிங்கம்.

புலிகளின் சந்தேகத்தை இது மேலும் உறுதிப்படுத்தியது. பல தடவைகள் பஞ்சலிங்கத்தை புலிகள் இயக்கத்தினர் சந்தித்தனர்.

புலிகள் இயக்க அரசியல் பிரிவுக்கு யழுதில் பொறுப்பாக இருந்த சுந்தசாமியும் பஞ்சலிங்கத்தை சந்தித்து தமக்கு உதவிகள் செய்யுமாறு கேட்டிருந்தார். (சந்தசாமி பின்னர் இந்தியப் படையினரால் நல்லூரில் வைத்து கொல்லப்பட்டார்.)

**மாகாணசபைக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எஃப்., இந்தியப்படை, இலங்கை அரசு, புலிகள் ஆகிய நான்கு துருவங்கள் மத்தியில் பஞ்சலிங்கம் பணியாற்ற வேண்டி இருந்தது.**

இவர்களில் யார் சொல்வதைக் கேட்காவிட்டாலும் ஆபத்துத்தான். இலங்கை அரசு பதவியைத்தான் பறிக்கும். இயக்கங்கள் உயிரையே பறித்துவிடும்.

பஞ்சலிங்கத்துக்கு புலிகளால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இலங்கை அரசோடும், இந்தியப் படையோடும் வைத்திருக்கும் நெருக்கத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும். என்று புலிகள் கூறினர். மற்றும், அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் பணத்தில் கையாடல் நடைபெறுவதாகவும் புலிகள் குற்றம் சாட்டினர்.

இந்தியப் படையினருடன் தொடர்புகள் வைப்பதோ, இந்தியப்படை முகாம்களுக்கு செல்வதோ தேசத்துரோகம் எனக் கருதப்படும் என்று புலிகள் ஏற்கனவே பொதுமக்களுக்கு அறிவித்திருந்தனர்.

அந்தக் கட்டுப்பாடு அதிகாரிகளுக்கும் பொருந்தும் என்று புலிகள் கூறினர். உத்தியோக விடயங்கள் தவிர்ந்த நெருக்கங்கள் தொடர்பாகவே அவ்வாறு அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டனர்.

எனினும், இந்தியப் படை உயரதிகாரிகள் பஞ்சலிங்கத்தை அடிக்கடி தொடர்பு கொண்டு வந்தனர். இந்த விடயம் யாழ் அரச செயலகத்தில் உள்ள புலிகளுக்கு ஆதரவான அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஊடாகப் புலிகளை எட்டியது.




## சந்திப்பு

பஞ்சலிங்கத்தை சந்திக்க விரும்புவதாக புலிகள் செய்தி அனுப்பினார்கள். நல்லூரில் உள்ள தனது சகோதரர் வீட்டில் சந்திக்கலாம் என்று தகவல் அனுப்பினார் பஞ்சலிங்கம்.

மே 2ம் திகதி (1989) காலையில் தன் துணைவி சகிதம் நல்லூா கந்தசாமி கோவிலுக்குச் சென்றுவிட்டு, தனது சகோதரர் வீட்டுக்குச் சென்றார் பஞ்சலிங்கம்.

நல்லூர் கோவில் வீதியில்தான் அவரது சகோதரர் வீடு இருந்தது. சகோதரர் பெயர் யோகேஸ்வரன்.

காலை 9.55 மணியளவில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நான்குபேர் பஞ்சலிங்கத்தைச் சந்திக்க அங்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களை அமரவைத்து பேசிக்கொண்டிருந்தார் பஞ்சலிங்கம். அவர் தொடர்பான தங்கள் சந்தேகங்கள், தங்களுக்கு கிடைத்த தகவல்கள் பற்றி கேள்வி எழுப்பினார்கள் புலிகள்.

அவற்றுக்கு பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார் பஞ்சலிங்கம். அப்போது நான்கு பேரில் இருவர் எழுந்து வெளியே நோட்டம் பார்த்தனர். அப்போது நேரம் 10.25 மணி.

அதேநேரம் உள்ளே இருந்தவர்கள் எழுந்து தங்கள் இடுப்பில் மறைத்துவைத்திருந்த பிஸ்டலை எடுத்தனர்.

தனக்கு நேரப்போகும் விபரீதத்தை பஞ்சலிங்கம் உணர்ந்துகொண்டு சுதாகரிப்பதற்கு இடையே, பிஸ்டல்களில் இருந்து ரவைகள் பாயத்தொடங்கின.

கிட்டத்தட்ட 15 ரவைகள்வரை பஞ்சலிங்கத்தின் உடலில் பாய்ந்தன. இரத்த வெள்ளத்தில் சரிந்தார் அரச அதிபர்.

நான்குபேரும் தப்பிச்சென்று விட்டனர். அதன் பின்னர்தான் இந்தியப் படை வந்து தேடுதல் நடத்தியது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ரகு, காண்டீபன், ஜொனி, குமார் ஆகிய நான்கு பேரே பஞ்சலிங்கம் கொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டனர்.

பலியான வை.மு. பஞ்சலிங்கம் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் மாவட்டக் காணி அதிகாரியாகப் பணியாற்றியவர்.

அதன் உதவி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் என்று பல பதவிகளை வகித்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். இரண்டு மகன்கள் இருந்தனர்.

பஞ்லிசங்கம் கொலை தொடர்பாக பரவலான கண்டனங்கள் எழுந்தன. கண்ணீர் அஞ்சலிகளும் தெரிவிக்கப்பட்டன.

புலிகளின் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருக்கிறதோ இல்லையோ, பஞ்சலிங்கம் போன்ற ஒரு சிறந்த நிர்வாகிக்கு புலிகள் கொடுத்த தண்டனை நியாயமல்ல என்பதே பொதுவான அபிப்பிராயம்.

## முழக்கங்கள்

ஈழப் போராட்டத்தில் தங்களை அர்ப்பணிக்கும் உறுதியுடன்தான் ஏராளமானோர் முன்வந்தனர். தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்தனர்.

ஆயினும் புலிகள் இயக்கத்தினர் போன்று ஏனைய இயக்கங்களால் வளரமுடியாமல் போனதற்கு முக்கிய காரணம், அந்த இயக்கங்களின் தலைமைகள்தான்.

இயக்கத் தலைவர்கள் என்று எடுத்துக் கொண்டால் பிரபாகரன், குட்டிமணி, தங்கத்துரை, சிறீசபாரத்னம், உமாமகேஸ்வரன் ஆகியோர்தான் நேரடியாகவே வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளில் பங்கு கொண்ட அனுபவம் பெற்றிருந்தனர்.

தங்கள் இயக்கங்களுக்கு திருப்பம் ஏற்படுத்திக் கொடுத்த நடவடிக்கைகளில் அவர்கள் நேரடியாகப் பங்குகொண்டனர்.

குறிப்பாக, ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதலில் உமாமகேஸ்வரன், திருநெல்வேலியில் இராணுவத்தினர்மீதான தாக்குதலில் பிரபாகரன், சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் சிறீ, நீர்வேலி வங்கிக் கொள்ளையில் குட்டிமணி, தங்கத்துரை இவ்வாறு பல நடவடிக்கைகளைக் கூறலாம்.

ஆனால் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கங்களின் தலைவர்கள் தங்கள் இயக்கங்களின் வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளில் மட்டுமல்ல, அரசியல் பிரசார நடவடிக்கைகளில்கூட பங்கெடுத்தது கிடையாது.

இரண்டாம் கட்ட தலைமையில் இருந்தவர்கள்தான் இந்த இரண்டு இயக்கங்களுக்கும் உருக்கொடுத்தனர்.

பின்னர் ஒரு கட்டத்தில் இரண்டாம் கட்ட தலைமைகளை பின்தள்ளிவிட்டு, இயக்க வளர்ச்சிக்கு உரிமை பாராட்டிய தலைவர்களுக்கு, தங்கள் இயக்கங்கள் வளர்ந்துவந்த பாதைகூட தெரியாமல் போனது.

## விரலுக்கு மிஞ்சிய வீக்கம்.

இயக்கத்தை கட்டுக்கோப்பாக உருவாக்குதல், திட்டமிட்ட செயற்பாடு, சிறந்த தளபதிகளை வளர்த்தல் என்பவை ஒரு கலையாகும்.

ஈரோஸ் அமைப்பினர் கொழும்பில் குண்டுவெடிப்புக்களை நடத்தினர். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் இந்தியா ஆயுதம் கொடுத்த பின்னர்கூட வெற்றிகரமான இராணுவ நடவடிக்கை எதிலும் ஈடுபட முடியவில்லை.

காரணம் என்ன?

கிடைத்த ஆயுதங்களை வைத்து எப்படியான தாக்குதல் நடத்தலாம் என்று திட்டமிடுவதைவிட, மேலும் ஆட்களை சேர்த்து பெரிய இயக்கமாக எப்படி பந்தா காட்டலாம் என்பதுதான் சிந்தனை.

பத்து முகாம் இருக்கும் என்று வையுங்கள், முகாமுக்கு ஒரு துப்பாக்கி, அல்லது கிரனேட் வழங்கப்படும். அதற்கு இயக்க இராணுவ முகாம் என்று பெயர்.

சக்திக்கு மீறி ஆட்களைச் சேர்த்தால் சாப்பாடு போடுவது எப்படி?

தனியார் வீடுகளில் கொள்ளை அடிப்பார்கள். அது எப்படிப் போதும்? மேலும் கொள்ளை.

முகாம் போட்டு ஆட்களைப் பராமரிப்பது, சாப்பாடு போடுவது, சும்மா இருப்பதால் உறுப்பினர்களுக்கிடையே பிரச்சனைகள் தோன்றும். அவற்றை தீர்ப்பது. இவற்றுக்கே நேரம் போய்விடும். இதுதான் இயக்க வேலை என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்கள் தப்பாக நினைத்துக் கொண்டிருந்தனர்.

பத்து முகாமில் இருந்த நூறுபேருக்கு பதிலாக, ஒரே முகாமில் ஒழுங்கான பத்துப் பேரை வைத்து பல தாக்குதல்களை திட்டமிட்டு நடத்தியிருக்கலாம். அது ஆயுதம் சேர்க்கும்முறை. இவர்கள் செய்தது ஆயுதம் பிரிக்கும் முறை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். பாணி என்பது விரலுக்கு மிஞ்சிய வீக்கம். அதனால்தான் கிடைத்த வாய்ப்புக்களை விரயமாக்கிக் கொண்டிருந்தனர். முகாம்கள் நிரம்பி வழிவதை வைத்து தாங்கள் பெரிய இயக்கம் என்ற கற்பனையில் இருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க இரண்டாம் கட்ட தலைமை ஒரு புரட்சிகர அமைப்பை உருவாக்க முனைந்தது. ஆனால் அதன் தலைவர்களோ தங்களைச் சுற்றி ஒரு பெரிய கோஷ்டி இருந்தால்போதும் என்ற ரீதியில் செயற்பட்டனர்.

இந்தியப் படை காலத்திலும் அதுதான் நடந்தது. மாகாண சபை பதவிகள், எம்.பி. பதவிகள் கையில் இருந்தமையால் முகஸ்துதிப் பேர்வழிகள், திடீர் பிரமுகர்கள், பிற்பாட்டுக்காரர்கள், மாலைகள், மரியாதைகள் என்று ஏகப்பட்ட அமர்க்களம்.

இயக்கப் பெயர் கெட்டுக் கொண்டிருந்தது. ஒரு சிறு ஊசியால் குத்த, உடைபடும் பலூனைப்போல இயக்கம் இருந்தது. வரதராஜப் பெருமாள் முழங்கிக் கொண்டிருந்தார்.

"மாகாணசபைக்கு அதிகாரம் கொடுக்காவிட்டால் நாம் தமிழீழத்துக்காக போராடுவது தவிர வேறு வழியில்லை" என்றார்.

பெருமாளை விட ஒருபடி மேலே போய்விட்டார் பத்மநாபா.

1989 மேதினக் கூட்டம் மட்டக்களப்பில் நடைபெற்றது. பத்மநாபா அங்கு உரையாற்றினார்.

உரையைக் கேட்டவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஏதோ பெரிய திட்டத்துடன்தான் இருக்கிறது என்று நினைத்தனர். அப்படி என்ன பேசினார் தெரியுமா?

**"சிறீலங்கா அரசு மாகாண அரசைக் கலைக்க முனைந்தால் நாம் கையைக் கட்டிக் கொண்டு இருக்கமாட்டோம். ஆயுதப் போராட்டம் உட்பட எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடத் தயங்கமாட்டோம்.**

**தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து ஆட்சியைக் கவிழ்க்கவும் பின்நிற்கமாட்டோம்.**

**ஆயுதம் ஏந்தி நாம் போராட ஆரம்பித்தால், பெரும் ஆபத்தாக முடியும் என்பதை சிறீலங்கா அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்!"**

எத்தனை பெரிய வாய்வீச்சை வீசியிருக்கிறார் பார்த்தீர்களா? சாதாரண உறுப்பினர் ஒருவர் அவ்வாறு பேசியிருந்தால் இயக்க உள்நிலை தெரியாமல் பேசியிருக்கிறார் என்று நினைக்கலாம்.

ஆனால் இயக்கத் தலைவரே தன் இயக்க பலத்திற்கு முற்றிலும் மாறான எச்சரிக்கையை வெளியிடுவது, மக்களை ஏமாற்றும் முயற்சிதானே.

கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போவது எப்படி?

இந்தியப் படையை திருப்பி அழைக்கக் கூடாது என்பதை வலியுறுத்த இந்தியா சென்றார் பத்மநாபா.

தற்போதைக்கு இந்தியப் படை வாபஸ் பெறப்படமாட்டாது என்று இந்திய அரசு அதிகாரிகள் பத்மநாபாவிடம் உறுதியளித்தனர்.

அதனை நம்பிவிட்டார் பத்மநாபா. அதனால் சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பின்வருமாறு பேட்டியளித்தார்.

**"இந்தியப்படை திரும்ப நேர்ந்தால், ஈழத்தை தனியரசாகப் பிரகடனம் செய்வோம். சிறீலங்கா படைகளை எதிர்த்து போராடவும் தயங்கமாட்டோம்."**

## புலிகளின் திட்டம்

இந்த முழக்கங்கள் மத்தியில் இந்தியப் படையினரை வெளியேற்றும் இராஜதந்திர நகர்வுகளை மட்டுமன்றி, தாக்குதல்களையும் தீவிரப்படுத்தினார்கள் புலிகள்.

**இக் கட்டத்தில் அமிர்தலிங்கத்தை தீர்த்துக்கட்டும் உத்தரவோடு விசு தலைமையில் ஒரு அணி கொழும்பு வந்து சேர்ந்தது.**

கடைசியாக ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கலாம் என்று பிரகாகரன் நினைத்தார்.

"இந்தியப் படை வெளியேறவேண்டும் என்று அமிர்தலிங்கம் கோரிக்கை விட வேண்டும்" என்று யோகேஸ்வரன் ஊடாக அமுதருக்கு தெரிவிக்கப்பட்டது.

"இந்தியப் படை வெளியேறவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உடனடியாக வெளியேறுமாறு கோரமுடியாது" என்று தன்முடிவை அறிவித்தார் அமுதர்.

"அமுதரை எங்கள் தலைவர் சந்திக்க விரும்புகிறார். வன்னிக்கு வரத் தயாராக இருக்கிறாரோ?" இது அடுத்த கேள்வி.

"அங்கு அவர் வருவது நல்லதல்ல. இங்கேயே நீங்கள் சந்திக்கலாம். நான் ஏற்பாடு செய்கிறேன்." என்றார் யோகேஸ்வரன்.

யோகேஸ்வரன் ஒருமுறை சுகவீனமாக இருந்தபோதும் அவரைச் சென்று சந்தித்து உடல்நலம் விசாரித்தார் விசு.

புலிகளின் உளவுப்பிரிவுக்கு பொறுப்பாளர் விசுதான் என்பது யோகேஸ்வரனுக்கு தெரியும். அதனால் விசு மூலமாக பிரபாகரனுக்கும், அமுதருக்கும் இடையே தொடர்பையும், மீண்டும் உறவையும் ஏற்படுத்திவிடலாம் என நம்பினார் யோகேஸ்வரன்.

இந்தியப்படையை வெளியேறுமாறு கோராதது மட்டுமல்லாமல், பாராளுமன்றத்திலும் இந்தியப் படைக்கு ஆதரவாக உரையாற்றினார் அமிர்தலிங்கம்.

இந்தியப் படையை வெளியேறக் கோரும் அரசின் முயற்சியை கண்டித்து அமுதர் உரையாற்றினார்.

விசுவுக்கு உறுதியான இறுதிக் கட்டளை வந்து சேர்ந்தது.

"போட்டுவிடு!"

"அமுதரை சந்திக்கத் தாயராக இருக்கிறோம். ஏற்பாடு செய்யுங்கள்" என்றார் யோகேஸ்வரனிடம் விசு.

யோகேஸ்வரன் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார்.

(தொடர்ந்து வரும்)



இந்தியப்படை காலத்தில் பெண்புலிகள்

## இந்தியச் செய்தியாளர்களின் பார்வையில்

**இந்தியப் படையினர் பற்றிய விமர்சனங்களை இந்திய எதிர்ப்பு உணர்ச்சியாக சித்தரிப்பவர்களும் உள்ளனர். இந்தியப் படை கால அத்துமீறல்களைப் பற்றி பேச விரும்பாதவர்களும் உள்ளனர். ஆனால் இந்தியப் படைக்கு எதிராக அன்று இந்தியப் பத்திரிகைகள் எப்படியெல்லாம் எழுதின தெரியுமா? இதோ பாருங்கள் 1989 மே மாதத்தில் வெளியானவை இவை.**

மருத்துவ நிலையங்களுக்கு காயமடைந்த இந்தியப்படை வீரர்கள் அடிக்கடி கொண்டு வரப்படுவதும் இந்திய அரசுக்கு இக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றியை அல்ல-இராணுவத் தோல்வியையே காட்டுகிறது.

வவுனியா காடுகளில் அண்மையில் நடந்த பல சண்டைகளும்- ஏனைய நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட மரணக் கிடங்குகளின் விளைவுகளும்- அமெரிக்கப் படைகளுக்கு வியட்நாம் ஏற்படுத்திய அச்சத்தை விடக்கூடிய அச்சத்தையே இந்திய அமைதிப் படைக்கு விளைவித்துள்ளன.

இந்திரானில் பானர்ஜி
'சண்டே' 14-20 மே, 1989

### விடுதலைப் புலிகளின் பலமும் ஆற்றலும் அதிகரித்துள்ளன

'புலிகளின் முதுகெலும்பை உடைத்து விட்டோம்' என்று இந்திய அமைதிப்படை அடிக்கடி சொல்லிவருகிறது. ஆனால் இது முழு அளவில் உண்மை அல்ல. பிரபாகரன் இந்தியப் படைகளினால் பிடிக்கப்பட முடியாதவராக நழுவிக்கொண்டே இருக்கிறார். விடுதலைப் புலிகளிடம் படைவீரர் பற்றாக்குறையும் இல்லை. அதுமட்டுமல்ல தாக்குகின்ற- அழிக்கின்ற ஆற்றலும் முன்பிருந்ததைவிட அவர்களிடம் இப்போது கூடியே இருக்கிறது.

திலிப் பொப்
'இந்தியா ருடே' மே 15, 1989

### இந்தியா நடத்திய "மார்சல் லோ"

இந்திய அமைதிப்படைக்கு ஒரே ஒரு பணிதான் கொடுக்கப்பட்டது. "தமிழ்ப்புலி' என்று யாரைக் கருதினாலும் அவரைச் கட்டுக்கொல்" இது சிறீலங்காவில் இந்தியா அமுல்நடத்தும் 'மார்சல்லோ'தான். இதன் விளைவு? அந்தத் தீவில் இந்தியாவுக்கு இருந்த ஒரே நண்பர்களான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்- பதிலடியாக பல்லாயிரம் இந்திய ஜவான்களும் புதைகுழிக்கு அனுப்பப்பட்டார்கள். இந்திய-சிறீலங்கா அரசியல் அமைப்போ அல்லது- உலகின் எந்தச் சட்டங்களோ இந்தக் கொடுமையை 'ஓர் அமைதி நடவடிக்கை' என்று ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது.

இன்று- இந்தியாவைக் கைகழுவி விட்டு தானே நேரில் எல்.ரி.ரி.ஈ. உடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா 'வெளியேறு' என்று இந்தியாவைப்பார்த்துக் கூறப்போகும் 'அவமானம் நிறைந்த காலம்' நெருங்கிக் கொண்டிருக்கிறது.

வி.ஆர்.கிருஷ்ண ஐயர்
'இந்து' மே 16, 1989.

### இந்திய-சிறீலங்கா ஒப்பந்தம் தகர்கிறது

சிறீலங்காவில் இந்திய வீரர்கள் நூற்றுக் கணக்கில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இருந்து தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இந்தியா தன் தவறுகளை ஒப்புக்கொண்டு படையைத் திருப்பி அழைக்கவேண்டும். தொடர்ந்தும் மேலதிக பாதிப்புக்கள் ஏற்படாமல்- அமெரிக்கா வியட்நாமிலும்- ரஷ்யா ஆப்கானிஸ்தானிலும் இருந்து வெளியேறியதுபோல் இந்தியாவும் நடந்து கொள்ள வேண்டும்.

ராஜீவ் காந்தியின் ஏனைய ஒப்பந்தங்களைப்போல் இந்திய-சிறீலங்கா ஒப்பந்தமும் இதோ உடைந்து தகர்ந்து கொண்டிருக்கிறது.

'எலைவ்'
மே (இரண்டாவது) 1989



படிப்பகம்

www.padippakam.com

# நம்பி ஏமாறும் வரலாறு திரும்புமா?

## முற்றுப்புள்ளியும்! துவக்கப் புள்ளியும்

அலசுவது- இராஜதந்திரி

**மூ**ன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மூலமே இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்பது இன்று தெள்ளத் தெளிவாகி வருகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் பல தடவைகள் மாறி மாறி பதவிக்கு வந்துள்ளன.

இந்த ஐம்பதாண்டு காலத்தில் தமிழ் பேசும் மக்களின் தலைமைகளும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன.


சேர் பொன் இராமநாதன் முதற்கொண்டு தந்தை செல்வாவரை ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள மக்களுடன் சமத்துவமாக வாழ முடியும் என்றே நம்பியிருந்தனர்.

அரசாங்கங்களுடன் ஒத்துழைத்து உரிமைகளைப் பெறுவது, ஒப்பந்தம் செய்து கொள்வது, அமைச்சர் பதவிகளை பெறுவதுமூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முயற்சிப்பது என்று பல்வேறு வழிகளில் தலைமைகளோ கடைப்பிடித்தமையை தவறெனக் கூற முடியாது.

ஆனால் பல முறை சூடு கண்ட பின்னரும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு கொடுக்க முன்வந்தமைதான் தவறாக அமைந்தது.

**ஆட்சியாளர்கள் மற்றும் சிங்கள அரசியல் கட்சித் தலைவர்களுடன் நெருக்கமாகப் பழகிய தமிழ்த் தலைமைகளால், அவர்களது அரசியல் குணாம்சங்கள், நேர்மையீனங்கள் என்பவற்றைக்கூட கணிப்பிட இயலாமல் போயிருந்தது. அவ்வாறு இருக்கையில் தங்களை மேதமை பொருந்தியவர்களாக அவர்கள் கருதிக் கொண்டிருந்தமை சரியானதுதானா? என்ற கேள்வி எழச் செய்கிறது.**

தமிழரசுக் கட்சியினரைப் பொறுத்தவரையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆட்சியில் இருக்கும்போது ஒத்துழையாமை இயக்கம் நடத்துகிறவர்களாகவும், ஐக்கிய தேசியக் கட்சியினர் பதவிக்கு வந்தால் ஒட்டி உறவாடுகிறவர்களாகவுமே இருந்து வந்தனர்.



தமிழர் விடுதலைக் கூட்டணியாக பின்னர் செயற்பட்டபோதும், தமிழரசுக் கட்சியின் ஆதிக்கமே அதற்குள் இருந்தது.

1970 முதல் 1977 வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சி பதவியில் இருந்தது. முதலில் தமிழரசுக் கட்சியாகவும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும் நின்று ஒத்துழையாமை இயக்கம் நடத்தப்பட்டது.

பிரதமர் சிறிமாவோ உட்பட வடக்கு-கிழக்குக்கு விஜயம் செய்யும் அமைச்சர்களின் வருகையை பகிஷ்கரிப்பது, கறுப்புக் கொடி காட்டுவது, ஹர்த்தால் நடத்துவது என்று பல்வேறு போராட்டங்கள் அக்காலத்தில் நடத்தப்பட்டு வந்தன.

**இறுதியாக தமிழீழமே முடிந்த முடிவு என்பதற்கு கருத்துக் கணிப்பாக காங்கேசன்துறை இடைத் தேர்தலையும், 1977 பொதுத் தேர்தலையும் அறிவித்தனர் கூட்டணியினர். பூரண ஆதரவு தெரிவித்தனர் தமிழ் பேசும் மக்கள்.**

'சிறீலங்கா நாடாளுமன்றம் செல்லப் போவதில்லை, தமிழீழத் தேசியப் பேரவை அமைக்கப் போகிறோம்' என்றும் கூறியிருந்தனர். ஆனால், ஐ.தே.கட்சி பதவிக்கு வந்தமையால் ஒட்டி உறவாடத் தொடங்கியதோடு, ஜே.ஆர்.நல்லவர், வல்லவர் என்றும் அமரர் அ.அமிர்தலிங்கம் பாராட்டியும் இருந்தார்.

1977 இனக்கலவரத்தின் பின்னரே ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை அமிர்தலிங்கம் அவ்வாறு பாராட்டி இருந்தார். தமிழ் இளைஞர்கள் மத்தியில் அமிர்தலிங்கம் அவர்களின் மாபெரும் செல்வாக்கு சரிவதற்கு அப்பேச்சும் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

ஜே.ஆர்.அரசுக்கு கூட்டணியினர் ஒத்துழைக்க பிரதான பங்காளிகளாக இருந்தவர்களில் கலாநிதி நீலன் திருச்செல்வம், கலாநிதி வில்சன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இலங்கைத் தமிழர் போராட்டங்களில் ஈடுபாடோ, பங்கு பற்றுதலோ இல்லாதவர்களாக இருந்தபோதும், அரசியல் பேச்சுக்களில் மேற்கண்ட இருவரும் முக்கிய பாத்திரம் வகித்திருந்தனர்.

அக் காலகட்டத்தில் கலாநிதி நீலன் திருச்செல்வம் சி.ஐ.ஏ.ஏஜண்ட் என்று தமிழ் இயக்கங்களினால் குற்றம்சாட்டப்பட்டு வந்தார்.

மாவட்ட சபைகளைக் காட்டி மேற்கண்ட கலாநிதிகளையும், தமிழர் தளபதி என்று அழைக்கப்பட்ட அமிர்தலிங்கம் உட்பட கூட்டணித் தலைவர்களையும் ஜே.ஆர்.ஏமாற்றினார்.

"கிடைப்பதை பெற்றுக் கொள்ளுவோம். தொடர்ந்து போராடுவோம்" என்று கூட்டணியினர் கூறினரே தவிர, திரைமறைவில் அரசுக்கு முண்டுகொடுக்க ஆரம்பித்தனர்.

"இளைஞர்கள் ஆயுதங்களை கைவிடவேண்டும்" என்றும் கூட்டணித் தலைவர்களை வைத்தே அறிக்கைவிடச் செய்திருந்தார் ஜே.ஆர்.

**மாவட்ட சபை என்ற மாயமானை காட்டி ஏமாற்றியதோடு, மிதவாதத் தலைமைக்கும், போராளி இயக்கங்களுக்கும் இடையே பிளவையும் ஏற்படுத்தி பிரித்தாளும் சூழ்ச்சியைக் காண்பித்திருந்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.**

எனவே, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏமாற்றப்பட்ட தலைமைகளாக தமிழ்க் கட்சிகளே இருந்து வந்துள்ளன. தமிழ்த் தலைமைகள் தற்பெருமைகள் பேசினவே தவிர, அரசியல் சதுரங்கத்தில் ஏமாற்றப்பட்டே வந்தன.

'எங்களை ஆட்சியாளர் ஏமாற்றிவிட்டனர்' என்று ஒவ்வொரு தடவையும் தமிழ்க் கட்சிகள் புலம்பும் ஓசைகள்தான் அக் காலத்தில் கேட்ட வண்ணமிருந்தன.

போராளி இயக்கங்கள் தலையெடுக்க ஆரம்பித்தபின்னர்தான் நிலமை மாறத் தொடங்கியது. தற்பெருமைகள் பேசித்திரியாத, கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றாத இளைஞர்களும், யுவதிகளும் ஒரு புதிய சரித்திரத்தையே எழுதத் தொடங்கினர்.

போரா? சமாதானமா? என்று சவால்விட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசை சமாதானப் பேச்சுக்காக திம்புவரை செல்ல வைத்தனர்.

ஆயுதப் போராட்ட எழுச்சியால் இது வெறும் உள்நாட்டு பிரச்சனையல்ல என்ற உண்மையையும் உலகின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

திம்பு பேச்சு முறிந்த பின்னர் அதுவரை இருந்த சரித்திரம் மாறியது.

அதற்கு முன் நடைபெற்ற பேச்சுக்கள் யாவும், தமிழ் தலைமைகளை ஏமாற்றி இழுத்தடிக்கும் ஆட்சியாளர்களின் தந்திரங்களாகவே அமைந்திருந்தன.

ஆனால், திம்பு பேச்சுக்குப் பின்னர் ஜே.ஆர்.அரசாங்கம்தான் புலம்ப வேண்டியிருந்தது. பேச்சும், போர் நிறுத்தமும் நடைபெற்ற கால அவகாசத்தை பயன்படுத்தி யாழ் குடாநாட்டில் இருந்த படைமுகாம்களை போராளிகள் முற்றுகையிட்டிருந்தனர். பேச்சு முறிந்த பின்னர் படையினரால் முன்னேற இயலவில்லை. யாழ் குடாநாடு போராளிகளின் கட்டுப்பாட்டில் வந்தது.

**ஜே.ஆர். ஏமாற்றுவார் என்பதை கணிப்பிட்டமையும், கடந்த கால அனுபவங்களில் இருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களும், கொள்கைப் பிடிப்புமே ஏமாந்த வரலாற்றை மாற்றியமைக்க காரணமாக அமைந்திருந்தது.**

சிங்கள அரசியல் கட்சிகளும், ஆட்சியாளர்களும் தமிழ் பேசும் தரப்பை ஏமாற்றியபோது அது அரசியல் சாணக்கியமாக கருதப்பட்டு வந்தது. போராளி இயக்கங்கள் ஏமாற மறுத்தபோது அது பயங்கரவாதமாக கடந்தகால அரசாங்கங்களின் தலைமைகள் தங்கள் முரட்டுத்தனமான பேச்சுக்கள் ஊடாக தாமாகவே வெளியுலகில் அம்பலமாகி வந்தன.

**ஆனால் இன்றைய அரசாங்கம் மிக விவேகமாகப் பேசி வருகிறது. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைவிட நாசூக்காக வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு மட்டுமல்லாமல், தமிழ் பேசும் தரப்பின் பலத்தை அரசியல், இராணுவரீதியில் வீழ்த்தும் வியூகங்களையும் திறம்பட வகுத்திருக்கிறது.**

இக் கட்டத்தில்தான் பகிரங்க அரசியல் அரங்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஆட்சியாளரின் நாசூக்கான தந்திரங்களை அம்பலப்படுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

தமிழ்பேசும் தரப்பின் பலத்தை குறைத்துவிட்டு அரை குறைத் தீர்வை ஆட்சியாளர்களின் கண்களுக்கு தெரிந்தது.

எப்படியிருப்பினும் நம்பி ஏமாந்த வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை போராளி இயக்கங்களையே சேரும் என்பது தெளிவு.

அப் பெருமையை சிதைக்கும் விதமான அரசியல் வங்குரோத்துத்தனங்கள் மறுபடியும் அரங்கேற ஆரம்பித்துள்ளதை இன்று அவதானிக்க முடிகிறது.

இந்த நாட்டுக்குள் இனப்பிரச்சனையை தீர்க்க முடியாது எனத் தெரிந்தும்கூட, அரசின் காலம் கடத்தும் முயற்சிகளுக்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவு கொடுத்து வருகின்றன.

வன்னி யுத்தம் முடியும்வரை காலத்தை கடத்தும் திட்டத்தோடு, அடுத்த ஆண்டின் இறுதியை அரசியல் தீர்வுக்கு காலவரையறையாக ஜனாதிபதி கூறியிருந்தார். அவ்வாறு ஜனாதிபதி கூறியது தங்களுக்கு தெரியாது, தங்கள் காதில் விழவில்லை என்பதுபோல தமிழ்க் கட்சிகள் பாசாங்கு செய்து வருகின்றன.

**அதேபோல வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு கருத்துக் கணிப்பு நடந்தே தீரும், தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களை ஏற்க முடியாது என்று நீதியமைச்சர் தெரிவித்தமைகூட தங்களுக்கு தெரியாதது போலவே பாசாங்கு செய்து கொண்டிருக்கின்றன.**

இவற்றின் பின்னர்தான் பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பின்மீதான வாக்கெடுப்பில் (19.11.97) அரசுக்கு ஆதரவாக கூட்டணி, ஈ.பி.டி.பி. புளொட் ஆகிய கட்சிகள் வாக்களித்துள்ளன.

**பாராளுமன்ற உரைகளில் முழுக்க முழுக்க பட்ஜெட்டை கண்டித்துப் பேசும் இக் கட்சிகள், அதற்கு ஆதரவாக வாக்களித்திருப்பதும் அவதானிக்கத்தக்கதாகும்.**

அரசியல் தீர்வு என்னும் ஜீவாதாரமான பிரச்சனை முதல், மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகள் வரை தமிழ்க் கட்சிகள் கூறும் கருத்துக்கள் எதனையுமே அரசாங்கம் கருத்தில் எடுப்பதில்லை என்பது புலனாகி வருகிறது.

திணிக்கக்கூடிய அரசியல், இராணுவ முஸ்தீபுகளுக்கான கால அவகாசத்தை ஆட்சியாளர்களுக்கு வழங்காதிருக்கும் வகையில், தங்கள் வியூகங்களை தமிழ்க் கட்சிகள் வகுக்க வேண்டும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரக்கூடிய தருணமும் இதுதான். ஆனால், யுத்தத்தை நிறுத்தவும், அரசும், புலிகளும் பேசவும் மட்டுமே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்று கூட்டணி பா.உ.க்கள் சிலர் பேசிவருவது கேலிக்கு இடமானதாகும்.

இனப்பிரச்சனையின் விளைவுதான் யுத்தமாகும். இனப்பிரச்சனைக்கு தம்மால் தீர்வு காண முடியும் என்றும், ஏனைய தமிழ்க்கட்சிகள் அதற்கு முன்வந்துள்ளன, தீர்வை ஏற்றுள்ளன என்றே வெளியுலகில் ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையை வலுப்படுத்த வேண்டுமானால், இனப்பிரச்சனை தொடர்பான தீர்வு விடயத்தில் இதுவரை அரசுடன் பேசிய தமிழ்க் கட்சிகள் அனைத்தும், "இந்த நாட்டுக்குள் பேசி இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் நம்பிக்கையை இழந்துவிட்டோம்" என்பதை ஒரே குரலில் சொல்ல வேண்டும்.**

எமக்கு அரசில் நம்பிக்கை உண்டு. அரசும், புலிகளும் பேசத்தான் மத்தியஸ்தம் தேவை என்ற ரீதியில் பாம்புக்கு தலையும், மீனுக்கு வாலும் காட்டும் கூட்டணியின் அரசியல் நிலைப்பாடு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு சாதகமானதாக அமையாது. அரசையும் திருப்தி செய்துகொண்டு, புலிகளையும் திருப்தி செய்தபடி அரசியல் நடத்த கூட்டணியினர் முனைகின்றனர்.

ஏனைய தமிழ்க் கட்சிகளும் வாய் வீச்சுக்களுக்கு அப்பால், அரசியல் அழுத்தங்கள் கொடுக்கும் சக்திகளாக தங்களை வளர்த்துக் கொள்ளத் தவறியுள்ளன.

அதனால் முற்றுப் புள்ளி வைக்கப்பட்ட ஏமாந்துபோகும் அரசியல் வரலாற்றுக்கு இக் கட்சிகளே மறுபடி துவக்கப் புள்ளிகள் போட்டு வருகின்றன.

முன்னைய தமிழ்த் தலைமைகள் பாடுபட்டன.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் அரசுடன் ஒத்துழைத்து அமைச்சர் பதவியில் இருந்தபோது தமிழரசுக் கட்சியினர் வசைபாடினர்.

பின்னர் தமிழரசுக் கட்சியினரும் தங்களில் ஒருவரான திருச்செல்வத்தை அமைச்சர் பதவியில் அமரவைத்தனர்.

**அரசுக்கு ஒத்துழைத்தும், அமைச்சர் பதவிகளில் அமர்ந்தும் தமிழ்க் கட்சிகள் அரசியல் நடத்திக் கொண்டிருந்த காலகட்டங்களிலேயே, வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.**

அமைச்சர் பதவி வகித்தவர்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்களுக்குள் இருந்த தலைசிறந்த புத்தி ஜீவிகளாகவும், சட்ட வல்லுநர்களாகவும் அக் காலத்தில் விளங்கியிருந்தனர்.

சிங்கள மக்களுக்குள் தங்களைப் போன்ற படித்தவர்களான, சட்ட ஞானம்மிக்க தலைவர்கள் கிடையாது எனவும், தாங்கள் பேச ஆரம்பித்தால் சிங்களத் தலைவர்கள் வாயைப் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதுபோலவும் அவர்கள் கூறத் தலைப்பட்டதும் உண்டு.

**ஆயினும், இந்த மேதமை பொருந்தியவர்கள் செய்தது எல்லாம் சிங்கள அரசியல் கட்சிகளுக்கு ஆட்சி அமைக்க பெரும்பான்மை பலம் இல்லாதபோது தோள் கொடுத்து உதவியதுதான்.**

அதற்கு நன்றிக் கடனாக அரை மந்திரிப் பதவி அல்லது முழு மந்திரிப் பதவிகள் கிடைத்தனவே தவிர, தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் வழங்கப்படாமலேயே இருந்தன.

அதுமட்டுமல்லாமல், அந்த தமிழ்த் தலைவர்களை தங்கள் அருகில் வைத்துக் கொண்டே, தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை படிப்படியாக விழுங்கும் காரியங்களையும் ஆட்சியாளர்கள் கச்சிதமாக ஆரம்பித்திருந்தனர்.

**தங்களை மேதைகளாகக் கருதிக் கொண்டவர்கள் சிங்கள அரசியல் கட்சிகளிடமும் ஆட்சியாளர்களிடமும் ஏமாந்துபோன வரலாற்றையே நாம் காணக்கூடியதாகவுள்ளது.**

ஆரம்பகாலத்தில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து செயற்படும் போக்கினை தமிழ்க் கட்சிகளோ, தமிழ்த் தலைமைகளோ கடைப்பிடித்தமையை தவறெனக் கூற முடியாது.

---

# செய்திகளும் பேட்டிகளும்

**பு**லிகளின் சிறையில் இருந்த திருடர்களை பேட்டி கண்டு முன்னர் ரூபவாகினியில் ஒளிபரப்பினார்கள்.

சமீபத்தில் புலிகளின் மொழி பெயர்ப்பாளர் என்று ஒருவரை பிடித்துவந்து, கிட்டத்தட்ட ஒரு அரசியல் தலைவர் போல மரியாதை கொடுத்து பேட்டி எடுத்து வெளியிட்டனர். அவரது பெயர் செந்திநாதன்.

தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு செந்திநாதன் மேல் பொறாமை ஏற்பட்டிருந்தால்கூட ஆச்சரியம் இல்லை.

பேட்டி கொடுத்தவர் பிரபாகரனையே பார்த்தது கிடையாது என்பது பேட்டியில் தெரிந்து போனது.

அவரது வாய் வீச்சுக்கு ஏனைய இயக்கங்களில் இருந்திருந்தால் முக்கிய பிரமுகராக இருந்திருக்கக்கூடும். ஆனால் புலிகள் மிகத் தூரத்தில் வைத்து பயன்படுத்தி உள்ளனர்.

பல ஆண்டுகள் மொழிபெயர்ப்பாளராக இருந்தும்கூட பிரபாகரனை சந்திக்கவில்லை என்றால், தங்களை சுற்றி உள்ள நபர்கள் பற்றிய புலிகளின் கணிப்பு பிரமிப்பாக உள்ளது.

குறிப்பிட்ட நபர் நம்பிக்கைக்கு உரிய ஆசாமி அல்ல என்று புலிகளுக்கு தெரிந்திருக்கிறது.

ஆங்கிலப் பத்திரிகைகள், வார இதழ்கள், நூல்கள் போன்றவற்றை மொழி பெயர்க்க எட்டத்தில் வைத்து பயன்படுத்தி இருக்கிறார்கள்.

புலிகளின் இயக்க உள்விஷயங்கள் பற்றியோ, நடவடிக்கைகள் பற்றியோ செந்திநாதனுக்கு எதுவுமே தெரியவில்லை. இரகசியம் காத்தல் என்பதில் புலிகள் வெகு கவனமாகத்தான் இருக்கிறார்கள்

செந்திநாதனின் பேட்டியில் பல இடறுப் பாடுகள் உள்ளன.

சில ஆங்கிலப் பத்திரிகைகளில் உள்ள கோபத்தை நியாயப்படுத்த செந்திநாதனை கருவியாகப் பாவித்துள்ளனர்.


இக்பால் அத்தாஸ் எழுதும் கட்டுரைகளை புலிகள் படித்துவிட்டு தகவல் பெறுகின்றனராம்.

இராணுவ நடவடிக்கைகள் முடிந்த பின்னர் தான் ஆங்கில பத்திரிகைகளில் அவை பற்றிய செய்தி விமர்சனங்கள் வெளியாகின்றன. அது எப்படி புலிகளுக்கு முன்கூட்டியே கொடுக்கப்பட்ட தகவலாகும்?

அது மட்டுமல்ல, 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் ஆரம்ப காலங்களில் இக்பால் அத்தாஸின் கட்டுரைகள் அரச படையினருக்கு வெற்றி வாய்ப்பு கிட்டுவதாகவே கணிப்புக்களை வெளியிட்டுவந்தன. தாண்டிக்குள ஊடறுப்பின் பின்னரே இக்பால் அத்தாஸின் கட்டுரைகளில் மாற்றம் ஏற்பட்டது.

வன்னிக் கள நடவடிக்கை பற்றி ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிடும் வரைபடத் தகவல்கள் பல தடவைகள் தவறாகவே அமைகின்றன. ஆனால் வன்னியின் ஒவ்வோர் அங்குல நிலமும் புலிகளுக்கு பரிச்சயமானது. அப்படியிருக்க, ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிடும் வரைபடங்களைப் பார்த்து புலிகள் தகவல் பெறுவதாக செந்திநாதன் கூறியதுதான் தமாஷ். செந்திநாதன் அப்படிச் சொல்ல வைக்கப்பட்டார் என்பதே சரியானது.

போர்க்களச் செய்திகள் தொடர்பாக அரசு வெளியிடும் பிரசார நோக்கம் சார்ந்த செய்திகளை பத்திரிகைகள் அம்பலப்படுத்துகின்றன. உண்மையான செய்திகளை வெளியிடுவது மூலமே அரச செய்தி ஊடகங்கள் தங்கள் நம்பகத் தன்மையை நிருபிக்க வேண்டும்.



செந்திநாதன்

அதற்குப் பதிலாக, தங்களுக்கு கிடைத்த தகவல்களை தங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பத்திரிகைகளை புலிகளுக்கு தகவல் கொடுப்பதாக கூறுவது சரியல்ல.

புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை நடத்த வேண்டிய பொறுப்பும், அவசியமும் அரச செய்தி ஊடகங்களுக்கு இருக்கிறது. ஆனால் அப்பிரசாரங்கள் கேலித்தனமாக அமைவதுதான் சலிப்பூட்டுகிறது.

சமீபத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி அறிக்கையில் புலிகள் இயக்கத்தை பற்றிய தகவல்களும் படு தமாஷ்.

1974ல் புலிகள் தங்கள் கொலை நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இவர்களது முதற்கொலை 1975ல் துரையப்பாவை கொலை செய்ததில் ஆரம்பமானது என்று முன்னுக்குப் பின் முரணாக சொன்னார்கள்.

புளொட் தலைவர் உமாமகேஸ்வரனை கொலை செய்ததும் புலிகள் என்று சொல்லப்பட்டது. இதுவரை பத்தாயிரம் தமிழர்களை புலிகள் கொலை செய்துள்ளனர் என்று புள்ளி விபரமும் கொடுக்கப்பட்டது. உமா கொலைக்கும் புலிகளுக்கும் ஒரு தொடர்பும் இருக்கவில்லை.

இச் செய்திகளை கேட்கும் விபரம் தெரிந்த மக்கள் அரச செய்தி ஊடகங்களை எப்படி நம்புவர்?

முதலில் தங்கள் நம்பகத் தன்மையை அரச செய்தி ஊடகங்கள் காப்பாற்றினாலேயே போதும். ஏனைய தனியார் செய்தி ஊடகங்கள் பற்றி அரச கவலைப்படும் தேவையே இருக்காது.

# கிருஷாந்தி வழக்கு

**கி**ருஷாந்தி மீதான பாலியல் வல்லுறவும் படுகொலையும் பற்றிய வழக்கு விசாரணைகளின் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதேசமயம் கிழக்கில் மிகக் கொடூரமான பாலியல் வல்லுறவுக்கும், படுகொலைக்கும் உள்ளான கோணேஸ்வரி வழக்கு வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் கோண்டாவிலில் மலசல குழிக்குள் புதைக்கப்பட்ட ராஜினி படுகொலை வழக்கும் தூங்கிக் கொண்டிருக்கிறது.

பாலியல் வல்லுறவுகளும், படுகொலைகளும் பல நடந்துள்ளன. கிருஷாந்தி கொலை வழக்கில் அரச தரப்பு நியாயமாக நடந்து கொள்வதை பாராட்டலாம்.

அதேசமயம் ஏனைய பாலியல் வல்லுறவுப் படுகொலைகள் தொடர்பான வழக்குகளும் துரிதப் படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், மனித உரிமை மீறல்களுக்கு தக்க நியாயம் கிடைப்பதாக காட்டும் முயற்சியாக கிருஷாந்தி வழக்கை அரச பயன் படுத்துவதாகவே கருத வேண்டியிருக்கும். ஒரு கிருஷாந்தி வழக்கை முன்னிறுத்திக் காட்டுவதன் மூலம், ஏனைய வழக்குகளை நிழலில் புதைத்துவிட அரசு முயல்வதாகிவிடும்.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

## பூலான்தேவி 71

தருவது ரசிகன்

பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேவர எத்தனித்த பொலிஸாரை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப் பட்டன.

நான்கு பக்கம் இருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதால், நூற்றுக்கணக்கானோர் வெளியே நிற்பதாக நினைத்துவிட்டனர் பொலிசார்.

அதனால் பின்வாங்கி, பொலிஸ் நிலையத்துக்குள் சென்றனர்.

பொலிசாருடன் மோதல் தொடங்கிய சத்தம் கேட்டதால் பூலான் பரபரப்பானாள்.

நகைக்கடைக்காரர்களையும், பெரிய முதலாளிகளையும் பிடித்துவருமாறு தன் ஆட்களுக்கு உத்தரவிட்டாள்.

நகரத்தின் மத்தியில் இருந்த சதுக்கம் ஒன்றில் பூலானும், பாபாவும் நின்றிருந்தனர்.

நடை, உடை பாவனைகளை வைத்து பண்ணையார் ஜாதியினர் என்று இனம் காணப்பட்ட பத்துப்பேரை பிடித்து கயிற்றால் கட்டி இழுத்து வந்தார்கள் பூலானின் ஆட்கள்.

10 பேரையும் ஒன்றாகக் கட்டி சதுக்கத்தின் மத்தியில் உருட்டி விட்டனர்.

நகைக் கடைக்காரர்களையும், கடை முதலாளிகளையும் துப்பாக்கி முனையில் கொண்டுவந்து பூலான் முன்பாக நிறுத்தினார்கள்.

சதுக்கத்தில் இருந்த ஆலமரத்தின்கீழ் அவர்களை அமரவைக்குமாறு கட்டளை யிட்டாள் பூலான்.

"உங்கள் கண்முன்பாகவே உங்கள் கடைகளை கொள்ளையடிக்க நாங்கள் விரும்பவில்லை. உங்கள் மனம் என்ன பாடுபடும்? அதுதான் உங்களை இங்கே அமரவைத்திருக்கிறேன்," என்று கேலியாகக் கூறினாள்.

அதன்பின்னர் 'பாபாவுக்கு ஜே', 'பூலானுக்கு ஜே' என்று கத்திக் கொண்டே கடைகளுக்குள் புகுந்தனர்.

வீதியில் நின்று வேடிக்கைப் பார்த்தவர்களில் ஏழைகளாகத் தோற்றம் அளித்தவர்களை தனியாக அழைத்தாள் பூலான்.

"கடைகளுக்குள் புகுந்து உங்களுக்குத் தேவையானதை எடுத்துச் செல்லுங்கள்!" என்று கூறினாள்.

தானியக் கடைகளுக்குள் அவர்கள் புகுந்து, தங்களுக்கு கிடைத்தவற்றை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தனர்.

பூலான் ஒரு நகைக்கடைக்குள் புகுந்தாள். ஒரு துணிப்பையில் அங்கிருந்த நகைகளை வாரியள்ளிப் போட்டுக் கொண்டாள்.

கொள்ளைக் கோஷ்டியினர் அனைவரும் நகைகளைக் கொள்ளையடிப்பதிலும், பணத்தைச் சுருட்டுவதிலுமே கவனமாக இருந்தனர்.

அதனால் தானியக் கடைகள் யாவும் ஏழைகளாலும், பொதுமக்களாலும் சுத்தமாகத் துடைத்தெடுக்கப்பட்டன.

பலர் தங்கள் தலைகளில் மூட்டை மூட்டையாக சுமந்துகொண்டு போனார்கள். பூலானை வாயார வாழ்த்திக் கொண்டும் போனார்கள்.

நகைக்கடைக்குள் இருந்து ஒரு கையில் துணிப்பையும், இன்னொரு கையில் துப்பாக்கியுமாக பூலான் வந்தபோது, ஒரு சிறுமி எதிரே வந்தாள். பூலானைப் பார்த்து கைகூப்பினாள்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டாள் பூலான்.

அந்தச் சிறுமியின் தோற்றத்தைப் பார்த்ததும், சிறு வயதில் தனக்கு நேர்ந்த அனுபவங்கள்தான் பூலானுக்கு நினைவில் வந்தன.

துப்பாக்கியைத் தோளில் தொங்க விட்டபடி சிறுமிக்கு அருகில் சென்று, அவள் தலையை வருடினாள்.

"நான் யார் தெரியுமா?"

என்று கேட்ட பூலான், சிறுமி சொன்ன பதிலால் புல்லரித்தாள்.

"தெரியும். நீங்கள்தான் பூலான்தேவி. ஏழைகளுக்குத் தெய்வம்!" என்றாள் சிறுமி.

"யார் உனக்கு சொன்னார்கள்?"

"அம்மா!"

"அம்மா எங்கே அம்மா?"

"அதோ!" என்று சிறுமி காட்டிய திசையில் ஒட்டிய கன்னங்களுடன், கந்தல் ஆடைகளுடன் நடுத்தரவயதுப் பெண்மணி ஒருத்தி நின்றாள்.

அவளை தன் அருகே அழைத்தாள் பூலான். துணிப்பையில் இருந்த நகைகளில் சிலவற்றை அந்தப் பெண்மணியின் கையில் கொடுத்தாள்.

அதனை அப் பெண்மணி எதிர் பார்க்கவில்லை என்பது அவள் கண்களில் தெரிந்தது. பின்னர் அந்தக் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

சிறுமியின் கையில் தங்கமாலை ஒன்றை தூக்கிப்போட்டுவிட்டு, அவள் கன்னத்தைத் தட்டிவிட்டாள்.

பூலான் நகைகளை பரிசளிப்பதை எட்டத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த பாபாவும், அங்கு வந்து பண நோட்டுக்கள் சிலவற்றை அப் பெண்ணிடம் கொடுத்தார்.

கொள்ளை நடவடிக்கை முடிந்தமைக்கு அறிகுறியாக பூலான் விசில் ஊதினாள்.

பொலிஸ் நிலையத்தைச் சுற்றி நின்றவர்கள் இடைக்கிடையே பொலிஸ் நிலையத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தனர்.

பொலிசாரும் வெளியே வராமல், உள்ளிருந்தபடியே சுட்டுக் கொண்டிருந்தனர்.

பூலானின் விசில் சத்தம் கேட்டதும் பொலிஸ் நிலையத்தைச் சுற்றி இருந்தவர்கள் வாபசாகினர்.

வேட்டுச் சத்தங்கள் கேட்கவில்லை என்றதும் பொலிசார் மெதுவாக வெளியே வந்து பார்த்தனர். எதிர்ப்பு இல்லை என்று தெரிந்ததும் தெருவுக்கு வந்து சுடத் தொடங்கினார்கள்.

ஆனால், அவர்கள் தெருவுக்கு வரமுன்னரே பூலான், பாபா குழுவினர் அந்த பகுதியைவிட்டு வெளியேறி விட்டனர்.

இக் கொள்ளைச் சம்பவத்தை அடுத்து, பொலிசார் மீது பத்திரிகைகள் கேலிகளையும், கண்டனங்களையும் வாரியிறைத்தன.

பூலான்தேவியின் பெயர் வராத பத்திரிகைகளே இல்லை. மக்களும் பூலான் தொடர்பான செய்திகளை விழுந்து விழுந்து படித்தனர்.



பூலான்

"சம்பல் பள்ளத்தாக்கின் கொள்ளை ராணியைக் கண்டால், பொலிசார் குதிக்கால் பிடரியில் அடிபட ஓடுகிறார்கள்" என கிண்டல் பண்ணியது ஒரு பத்திரிகை.

இதனால் பொலிசார் வெகுண்டெழுந்தனர். தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டனர்.

ஜங்காஜ்பூர் கொள்ளை முடிந்ததும் பாபா கோஷ்டியும், பூலான் கோஷ்டியும், தனியாகப் பிரிந்து இரு திசைகளில் சென்றனர்.

பூலான் கோஷ்டியில் மான் சிங் உட்பட 20 பேர் இருந்தனர். உத்தரப் பிரதேசத்தில் உள்ள எட்டாவா என்ற கிராமத்தில் பூலான் கோஷ்டி தங்கி இருந்தது.

அக்கிராம மக்களுக்கு நகைகளும், பணமும் தாராளமாகக் கொடுக்கப்பட்டன.

'எட்டாவா' கிராமத்தில் இருந்தபோது, கௌரி என்னும் கிராமத்தில் சிறு வயதுப் பெண்களுக்கு கட்டாயத்திருமணம் நடத்தப்படுவதாக பூலானுக்கு தகவல் எட்டியது.

தன் குழுவினருடன் அக் கிராமத்துக்கு சென்றாள் பூலான். கான்பூர் மாவட்டத்தில் அந்தக் கிராமம் இருந்தது.

சிறு வயதுப் பெண்களைத் திருமணம் செய்த ஆண்கள் அத்தனை பேரையும் தன் முன்னால் கொண்டுவந்து நிறுத்துமாறு உத்தரவிட்டாள்.

இருபதுக்கு மேற்பட்டோர் அவ்வாறு கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர்.

அவர்களில் பலர் நடுத்தர வயதைத் தாண்டி இருந்தனர். ஒருவன் கிழவன் போல தெரிந்தான்.

அவன் அருகில் சென்ற பூலான், "உன் வயது என்ன?" என்றாள்.

"எ... எழுபது..." என்றபோது, திறந்த வாய்க்குள் பற்கள் பல காணாமல் போயிருந்தன.

சடாரென்று அறைந்தாள் புறங்கையால். காறித் துப்பினாள். "நாயே!" என்றாள்.

"சின்னப் பெண்கேட்குதாடா ஈனப் பிறவியே?"

முழங்காலை மடித்து இடுப்புக்குக் கீழே மையப்பகுதியில் இடிக்க, கிழவன் குழறிக்கொண்டு அட்டைபோல சுருண்டு விழுந்தான்.

கிழவனுக்கு விழுந்த இடியைப் பார்த்ததும் ஏனையோருக்கு பயத்தில் உடம்பு நடுங்கத் தொடங்கியது.

"ஏன்டா, பொறுக்கி நாய்களே! சண்டாளப் பாவிகளா? உங்கள் வயதுக்கு பெண்டாட்டியா தேவை? அதுவும் சின்ன பெண்களைப் போய்.... ஏன்டா உங்களுக்கு அக்காள், தங்கச்சிகள்... நாய்களே...." கெட்ட வார்த்தையால் திட்டித்தீர்த்தாள்.

### கடந்த வாரம்

**ஜங்காஜ்பூர் என்ற ஊருக்குள் பூலான் தேவி குழுவினரும் பாபா குழுவினரும் கொள்ளையிடப் புகுந்தனர். அங்குள்ள பொலிஸ் நிலையத்தையும் சுற்றி வளைக்கின்றனர்.** இனி...

"நொருக்குங்கடா இந்த சண்டாளர்களை"

பூலான் உத்தரவிட, துப்பாக்கிகளின் பிடிகளால் அத்தனைபேரும் உருட்டி உருட்டித் தாக்கப்பட்டார்கள்.

எலும்புகள் முறிந்தன. சிலருக்கு மண்டைகள் பிளந்தன. இன்னும் சிலருக்கு பற்கள் உடைந்து இரத்தம் தெறித்தது. அவர்கள் கத்திய கத்தல் கிராமம் எங்கும் எதிரொலித்தது.

பூலானிடம் அடி வாங்கிய கிழவன் மெல்ல மெல்ல வலியில் முனகி இறுதியில் செத்துப் போனான்.

அடி வாங்கிய வலியில் துடித்தபடி இரத்தம் சொட்டச் சொட்ட நின்றுகொண்டிருந்தவர்களைப் பூலான் எச்சரித்தாள்.

"டேய்! இந்தக் கிராமத்தில் மட்டுமல்ல, எங்கே இந்தக் கொடுமை நடந்தாலும் பூலான் வருவாள். தண்டனை தருவாள். அந்தச் சின்னப் பெண்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்று எனக்குத் தெரியுமடா நாய்களே!"

திருமணம் நடத்தப்பட்ட சிறு பெண்களை அழைத்து நகைகளும், பணமுமாக அள்ளி அள்ளிக் கொடுத்தாள்.

"இந்த நாய்கள் யாராவது இனிமேல் வாலாட்டினால் எனக்கு சொல்லி அனுப்புங்கள், தலையை வெட்டி மரத்தில் தொங்கச் செய்கிறேன்"

யார் யார் திருமணம் செய்தார்களோ அந்த ஆண்களின் வீடுகளையெல்லாம் கொள்ளையிட உத்தரவிட்டாள் பூலான்.

ஒரு மணி நேரமாக அக்கிராமத்தில் ருத்ரதாண்டவமாடிவிட்டு பூலான் கோஷ்டியினர் புறப்பட்டுச் சென்றனர்.

கௌரி கிராமம் பொலிஸ் கண்காணிப்பில் இருந்த பகுதிகளில் ஒன்றாகும்.

அப்படியிருந்தும் பூலான் கோஷ்டியினர் புகுந்துவிட்டு தப்பிப் போனதால், அப்பகுதி பொலிஸ் அதிகாரி வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

அச் செய்தியை அறிந்த பூலான் வாய் விட்டுச் சிரித்தாள்.

"ஒரு அதிகாரி காக்கி உடையை கழற்றிவிட்டானா? கழட்டவேண்டும். இவர்களுக்கு ஏன் காக்கி! காவலுக்கு உதவாத காட்டுமிராண்டிகளுக்கு காக்கி எதற்கு?" என்றாள். மான் சிங் அதனை ஆமோதிப்பது போல தலை அசைத்தான்.

"பெண்கள் பூலான் தேவியைத் தெய்வமாகப் போற்றுகிறார்கள். துர்க்கையின் அவதாரமாகக் கூறுகிறார்கள்.

பூலான்தேவி வந்தபின்னர் ஏனைய கொள்ளைக்கோஷ்டிகள் கூட அடங்கிப் போய்விட்டன. மதிப்பை இழந்துவிட்டன"

என்று புதுடில்லியில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று கட்டுரை வெளியிட்டிருந்தது.

***

குசுமாவின் வெற்று முதுகில் குஜாலின் கரங்கள் மேலும் கீழுமாய் அசைந்தபடி இருந்தன.

ஸ்ரீராமின் நண்பன் குஜால். இன்னொரு கொள்ளைக் கோஷ்டிக்குத் தலைவன். பொலிசாருடன் ஸ்ரீராம் போலவே இரகசியத் தொடர்பு வைத்திருப்பவன்.

பூலானை ஒழிக்க குஜாலின் உதவியை நாடினான் ஸ்ரீராம். பூலானை உயிருடன் விட்டுவைத்தால், தன் உயிர் அரைக்காசும் பெறாது என்று தினமும் பயந்து செத்துக் கொண்டிருந்தான் ஸ்ரீராம்.

ஸ்ரீராமுக்கு உதவச் சம்மதித்த குஜாலின் பார்வை குசுமாமீது சென்றது. குறிப்பறிந்து விட்டுக் கொடுத்தான் ஸ்ரீராம்.

குஜால் திடகாத்திரமானவன். குசுமாவும் அவனுடன் சில நாட்கள் தங்க மனப்பூர்வமாக சம்மதித்தாள்.

குசுமாவின் கழுத்துக்குள் குஜால் முகம் புதைத்தான். குசுமாவின் கரம் அவன் தலையை அழுத்தி கழுத்துக்குக் கீழேயும் இழுத்தது.

குஜால் தன் முகத்தை அணைகளில் வைத்துக்கொண்டே, "பூலானை நீ பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

குசுமாவுக்கு அந்த நேரத்தில் அவன் பூலானைப் பற்றிக் கேட்டது பிடிக்கவில்லை. மௌனமாக இருந்தாள். அவன் கவனத்தைத் தன்மேல் திருப்ப, தன் கழுத்துக்குக் கீழே குனிந்திருந்த அவன் தலையை இருபுறமும் அசைத்தாள்.

குஜால் அதன்பின்னர் பேசக்கூடிய நிலையில் இல்லை. எல்லாம் ஆனதன் பின்னர் பூலானைப் பிடிக்கத்தான் போட்டுள்ள திட்டத்தைப் பற்றி விபரித்தான் குஜால்.

குசுமா பிரமித்தாள். பூலான் தப்பவே முடியாது என்று தீர்மானித்தாள்.

(தொடர்ந்து வரும்)

## தடைப்பட்ட திருமணம்



நம்புவது சற்றுச் சிரமம் தான். ஆனால் தகவல் உண்மை. ஹொலிவூட் பட வுலகின் முன்னாள் கவர்ச்சி மின்னல் எலிசபெத் டெய்லர் பற்றிய தகவல் இது.

ஏற்கனவே எட்டுப்பேரை திருமணம் செய்து விவாகரத்து வாங்கியவர் எலிசபெத். ஒன்பதாவது திருமணத்துக்கும் ரெடியாக இருந்தார் அம்மணி. விக்டர் லூனா என்பவரை மணம் செய்ய மனம் விரும்பினார்.

ஆனால் இத் திருமணத்திற்கு எதிர்பாராத தடை ஒன்று ஏற்பட்டதால், விக்டர் லூனாரை மணக்கும் திட்டத்தை கைவிட்டுள்ளார்.

என்ன தடை என்பது தான் சுவாரசியம். எலிசபெத் டெய்லர் ஆசையாக வளர்க்கும் நாயின் பெயர் சுகர். விக்டரைக் கண்டால் சுகருக்கு பிடிப்பதில்லை. பாய்ந்து பாய்ந்து குலைக்குமாம். 'சுகர்' பிரியப்பட வில்லை என்பதால் தன் ஒன்பதாவது காதலை தியாகம் செய்துள்ளார் எலிசபெத் டெய்லர்.

இன்னொரு விஷயம், தன் சொத்தின் ஒருபகுதியை 'சுகர்' பெயரில் எழுதி வைத்துள்ளார் எலிசபெத்.

கொடுத்து வைத்த நாய்!

## திருடப்பட்ட காதல் கடிதங்கள்

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸுக்கு அவரது ஆருயிர் காதலி கமீலா உருகி உருகி எழுதிய கடிதங்களை திருடன் ஒருத்தன் அள்ளிக்கொண்டு போய்விட்டான்.

இது நடந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. முதலில் டயானாமீதுதான் சாள்ஸுக்கு சந்தேகம். அரண்மனை ஊழியர் யாரையாவது ஏவிவிட்டு கடிதங்களை அபகரித்துக் கொண்டாரோ என்று சந்தேகம்.

அக் கடிதங்களில் கமீலா தங்கள் அந்தரங்க லீலைகளைக்கூட விலாவாரியாக நினைவு கூர்ந்திருந்தாராம்.

எங்கே அக் கடிதங்களை டயானா வெளியிட்டுவிடுவாரா என்று சாள்ஸும், கமீலாவும் பயந்துகொண்டிருந்தனர்.

சமீபத்தில்தான் உண்மை வெளியாகியுள்ளது. பிரிட்டனில் புனித ஜேம்ஸ் அரண்மனையில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் கடிதத் திருட்டுக்கு உரிமை கோரியுள்ளார்.

சாள்ஸின் அறையிலிருந்து கடிதங்களை திருடியது நான்தான் என்று பகிரங்கமாக அறிவித்தது மட்டுமல்ல, அவற்றைத் திருப்பி ஒப்படைக்க பெருந்தொகைப் பணமும் கேட்டுள்ளான்.

மூன்று ஆண்டுகளாக மௌனமாக அவன் இருந்ததுக்கும் காரணம் உண்டாம். குறிப்பிட்ட ஊழியன் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவன். மூன்று ஆண்டுகளுக்கு மேல்



ஆகிவிட்டால் பிறநாட்டில் செய்த சிறு குற்றங்களுக்கு இத்தாலியில் மன்னிப்பு உண்டாம். அதுதான் இப்போது ஒப்புக் கொண்டுள்ளானாம்.

சாள்ஸ் அறையில் இருந்து கடிதங்கள் திருடப்பட்டதை தெரிந்துகொண்டு பிரபலம் தேட நாடகம் ஆடுகிறான். அவனிடம் கடிதங்கள் இருக்காது என்றும் அரண்மனை வட்டாரங்கள் கூறுகின்றன.

## அம்மா செய்த கொலை

மிகக் கொடுமையான சமாச்சாரம் இது. பெரிய வல்லரசு என்று தம்பட்டம் அடிக்கும் அமெரிக்காவில் மனித வாழ்க்கை நசிந்து வருகிறது.



குடும்ப உறவுகள் உருக்குலைகின்றன.

தன் ஆறு வயது மகளை அடித்தே கொன்றிருக்கிறாள் தாய். அவளது பெயர் பெட்சி. மகள் பெயர் ஜோன்.

வேலைக்குப் போய்விட்டு வந்து களைத்துப் போய் தூங்கினாள் அம்மா. அலுவலகத்தில் ஏதோ பிரச்சனை வேறு. மகளுக்கு இதெல்லாம் எங்கே தெரிந்திருக்கப் போகிறது.

நடு இரவில் அம்மாவை எழுப்பினாள். படுக்கையில் சிறுநீர் கழித்து விட்டதைச் சொன்னாள். அம்மாவுக்கு வந்ததே கோபம். அடி அடியென்று போட்டு அடித்ததில் பிள்ளை மூச்சுத் திணறி செத்துப் போனாள்.

டென்ஷன் அடங்கியபின்தான் பிள்ளை செத்த விடயம் தெரிந்தது. எப்படியோ நடந்தது நடந்து போச்சு என்று மனைவியும், கணவனும் கொலையை மூடி மறைத்து விட்டனர். ஆயினும் ஆறுமாதத்தின் பின்னர் உண்மை வெளிச்சத்துக்கு வந்து விட்டது.

இப்போது கணவனும், மனைவியும் கம்பி எண்ணுகிறார்கள். மற்றொரு திடுக்கிடும் தகவல், அமெரிக்காவின் பரபரப்பான வாழ்க்கையில் தினமும் பத்துக் குழந்தைகள் அப்பா, அம்மா கையால் அடிவாங்கியே செத்துப் போகின்றனவாம்.

## அடுத்த வாரிசு

பொப் இசைத் திலகங்களுக்கு எல்லாம் திலகம் மைக்கேல் ஜாக்சன். ஏற்கனவே 'பிரின்ஸ்' என்ற பெயரில் மகன் இருக்கிறான்.

ஆண் வாரிசு ஓ.கே. அடுத்து ஒரு பெண் வாரிசு வேண்டும் என்று ஆசைப்படுகிறார் மைக்கேல்.

அதனையடுத்து பாரிசுக்கு தேன் நிலவுப் பயணம் சென்றுள்ளார். மனைவி டெபியும், மைக்கேலும் பெரும் விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர்.

அறையைவிட்டு வெளியே வருவதேயில்லையாம். உணவு முதற்கொண்டு அனைத்தும் அறைக்கே செல்கின்றன.



பெண் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை யாரிடமோ கேட்டு வைத்துக்கொண்டு தீவிரமாக பரிசீலித்துப் பார்க்கிறார்களாம். முயற்சி திருவினையாகட்டும்.

## டயானா கொலை

டயானாவை கொலை செய்தது யார்? இப்படியொரு புத்தகம் எகிப்தில் வெளியாகி பரபரப்பாக விற் பனையாகியுள்ளது. டோடி ஃபயட் பிறந்ததும் எகிப்தில்.



டோடி ஃபயட்டுக்கு ஆதரவானவர்கள் டயானா மரணம் பற்றி எழுப்பும் சந்தேகங்கள் இன்னமும் தீர்ந்தபாடில்லை. பிரிட்டிஷ்காரர்களும், யூதர்களும் இணைந்து செய்த சதிதான் டயானா கொலை என்று அவர்கள் அடித்துச் சொல்கிறார்கள்.

டயானா கர்ப்பமாக இருப்பதைத் தெரிந்து கொண்டதும் பிரிட்டிஷ் அரச குடும்பம் திகைத்தது. இளவரசர் 'வில்லியம்ஸ்சுக்கு ஒரு முஸ்லிம் சகோதரர் இருப்பதா?' என்று நினைத்தது. கூலிக்கு ஆட்களை வைத்து தீர்த்துக்கட்டிவிட்டது என்றும் டோடிஃபயட்டின் ஆட்கள் கடும் குற்றம்சாட்டுகிறார்கள்.

பிரிட்டிஷ் அரச குடும்ப அனுதாபிகள் சும்மா இருப்பார்களா? அவர்களும் பதிலுக்கு கதைகளை அள்ளிப் போடுகிறார்கள்.

டோடி ஃபயட் பொல்லாத போதை மருந்துப் பைத்தியம், அவருக்கு பரிச்சயமில்லாத கெட்ட பழக்கமே இல்லை என்றெல்லாம் கதை அவிழ்க்கிறார்கள்.

"டோடி பெண்கள் விடயத்தில் அப்படி இப்படித்தான். அதைச் சொல்லுங்கள் ஒப்புக்கொள்கிறோம். போதை மருந்துக்கு அடிமை என்று பொய் சொல்லாதீர்கள்." என்று திருப்பி அடித்திருக்கிறார் டோடி ஃபயட்டின் குடும்ப நண்பர் ஸ்ரீபன் என்பவர்.

டயானா மறைந்தாலும், மறைந்தது பற்றிய சர்ச்சைகள் தொடர்கின்றன. ■



படிப்பகம்

www.padippakam.com



## சுவையான முயற்சி

அப்பிளை லபக்கென்று கவ்விக் கொள்கிறார் அல்லவா, இவர் ஒரு கில்லாடி மாப்பிள்ளையேதான்!

சீனாவின் ஷெஜியாவ் மாகாணத்தின் நதிக்கரையில் ஆண்டுதோறும் ஒரே சமயத்தில் பல ஜோடிகளுக்கு திருமணம் நடக்கும். செம கலாட்டாக்களும் நடக்கும்.

அதில் ஒன்றுதான் இந்த ஆப்பிள் கலாட்டா. பலூன்களில் அப்பிள்களை கட்டி பறக்கவிடுவார்கள். பலூன்கள் ஆப்பிள்களை தூக்கிக்கொண்டு பறப்பதற்கு இடையில் ஆப்பிள்களை பிடிக்கவேண்டும். அதுதான் போட்டி. ஆனால் கையால் பிடிக்கக் கூடாது என்பது கண்டிப்பான நிபந்தனை.

அதுதான் ஒரே கவ்வாக கவ்வுகிறார் மாப்பிள்ளை. குறிப்பிட்ட நேரத்துக்குள் அப்பிளை சாப்பிட்டும் முடிக்கவேண்டுமாம். அந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறார். மணமகள் இரசிக்கிறார். மாப்பிள்ளைக்கு நல்ல பயிற்சிதான்! சுவையான முயற்சிதான்!



## நாம் இருவர் நமக்கு நால்வர்

நாம் இருவர், நமக்கு இருவர் என்பதும் சுருங்கி, நாம் இருவர், நமக்கு ஒருவர் என்னும் அளவுக்கு குடும்பக் கட்டுப்பாடு வந்துவிட்டது. காரணம், அரசு சொல்வதை மக்கள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள் என்பது அல்ல. பொருளாதார நெருக்கடிதான் காரணம். எனினும் சில ஏழைக்குடும்பங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் தப்பானவை என்ற தப்பான எண்ணம் உள்ளது.

இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ராமனுக்கும், அவர் மனைவி லட்சுமிக்கும் ஏற்கனவே மூன்று குழந்தைகள். இவர்கள் ஆதிவாசிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். குடும்பக் கட்டுப்பாடு எல்லாம் சரிப்பட்டுவராது. கடவுள் கொடுக்கும்வரை கொடுக்கட்டும், நாம் தடுக்கக் கூடாது என்ற கொள்கை. (நல்ல கொள்கைதான் போ) நான்காவது பிரசவத்திற்காக மருத்துவ மனையில் சேர்ந்தார் லட்சுமி. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்குமாம். அதுபோல லட்சுமிக்கும் கொடுத்துவிட்டது. ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள்.

இக் குழந்தைகளின் எடை 1.5 கிலோ மட்டும்தானாம். வழக்கமாக கேரளாவில் பிறக்கும் குழந்தைகளின் எடை 2.8 கிலோ. அதனால் இந்தக் குழந்தைகளை மருத்துவர்கள் கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வருகின்றனர்.

தாய்க்கு ஊட்டச்சத்து இல்லை. பிறக்கும் குழந்தைகள் எப்படி ஊட்டமாக இருக்கும்? அளவுக்கு மீறிய குழந்தை உற்பத்தி தாய்க்கும் கேடு, சேய்க்கும் கேடு.

## பிரசவ சாதனை

இதுவும் ஒரே பிரசவத்தில் நாலு குழந்தைகள் கதைதான். இங்கிலாந்தில் கஃபோல்க் என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் மார்க், பற்சி தம்பதியினர். நீண்டகாலமாக குழந்தை இல்லை. தீவிர முயற்சியின் பின்னர் குழந்தைப் பேறு கிடைத்தது.

'ஸ்கேன்' செய்து பார்த்தபோது இன்ப அதிர்ச்சி. நான்கு குழந்தைகள் கருவறையில் இருப்பது தெரிந்துவிட்டது. அந்தப் பூரிப்பில் இருந்தபோதுதான் ஏழாவது மாத நடுப்பகுதியில் திடீர் பிரசவவலி ஏற்பட்டது. 'இப்ஸ்விச்' மருத்துவமனையில் சேர்த்தனர்.

குறைப்பிரசவம் என்பதால் குழந்தைகள் உருப்படியாக பிரசவமாகுமா? என்று மருத்துவர்கள்கூட பயந்துபோய் இருந்தனர். கண்ணீருடன் காத்திருந்தார் கணவர்.

அதிசயங்கள் நடப்பதுண்டுதானே, நான்கு குழந்தைகளும் சேதாரம் இல்லாமல் பிரசவமாயினர். 15 தாதிமார் டாக்டர்களுக்கு ஒத்துழைக்க வெற்றிகரமாக இப்பிரசவ சாதனை நிகழ்ந்தது.

பிரசவத்தின் பின்னர் தங்கள் நான்கு முத்துக்களுடன் புன்னகை மின்ன போஸ் கொடுக்கிறார்கள் தம்பதியினர்.



## தகவல் பெட்டி

## தொடரும் சமர்

'ஜயசிக்குறுய்' சமர் காடு சார்ந்த பகுதிகளுக்குள் நடந்துவருகிறது. கொரில்லாக்களுக்கு காடுகள் வரப்பிரசாதம். பாருங்கள், மரங்கள் சார்ந்த காட்டுப்பகுதியில் சிறுபகுதிதான் இது. கொரில்லாக்கள் நிற்கிறார்கள். கரிப்பட்டமுறிப்பு மோதலில் கைப்பற்றிய மோட்டார்களை புலிகள் பார்வையிடுகின்றனர். கீழே இருப்பவை சிறியரக மோட்டார்கள். ஏனையவை 80 எம்.எம். ரக மோட்டார்கள். துரிதநகர்வுச் சண்டைகளுக்கு சிறிய ரக மோட்டார்கள்தான் வசதி. தூக்கிச்செல்வது சுலபம்.



அமெரிக்காவில் பொஸ்ரன் நகரில் நடந்த கண்காட்சியில் 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது. கண்காட்சியில் இக் காட்சியை இடம்பெறச் செய்தவர்களின் 'ஐடியா'வை மெச்சலாம்.

உலகிலேயே மிகச் சிறிய ட்ரக் வண்டி இது. ஆனால் சக்கரங்கள் மட்டும் பெரிசோ பெரிசு. சின்னம் சிறிய ட்ரக் வண்டிக்கு சாரதி யார் தெரியுமா? படத்தில் இருக்கிறார் பாருங்கள் மனித மலை, அவரேதான். உலகிலேயே எடை கூடிய சாரதி இவர் தானாம். (ட்ரக் வண்டி என்ன பாடுபடும்?!) இந்த குட்டி ட்ரக் வண்டி மணிக்கு 28 மைல் வேகத்துடன் செல்லக்கூடியது.





## இராட்சத பீரங்கி



தற்போது நவீன பீரங்கிகள் போர்க் களங்களில் குண்டுகளை துப்பிக்கொண்டிருக்கின்றன. முதன்முதலில் பீரங்கிகளை கண்டு பிடித்து போருக்கு பயன்படுத்தியவர்கள் ரோமர்கள் என்று தகவல். படத்தில் இருப்பது தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் இருக்கும் பீரங்கி. சாதாரண பீரங்கியல்ல, இராட்சதப் பீரங்கி. படத்திலேயே இந்தப் பிரமாண்டம் எனில், நேரில் எப்படியிருக்கும்?! 16ம் 17ம் நூற்றாண்டில் இது தயாரிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் இது சூரப்பீரங்கி. இப்போது கண்காட்சிப் பொருளாகிவிட்டது.

தற்காலத்தில் நவீன பீரங்கிகள் ரகம் ரகமாக இருந்தாலும் இப்பீரங்கியைப் போன்ற இராட்சத பீரங்கிகள் கிடையாது. இதன் எடை 30 ஆயிரம் கிலோ! அதாவது 30 தொன்! இதன் நீளம் 25 அடி. 300 கிலோ எடையுள்ள குண்டை இது வீசும். இதன் சுடு தூரம் ஆயிரம் அடி.

இந்தப் பீரங்கியில் உள்ள இரும்பு வளையங்களை யானையின் உதவிகொண்டே தூக்கி மாட்டியிருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. மனிதனை மனிதன் அழிக்க அந்தக் காலத்திலும்கூட எத்தனை ஏற்பாடுகள் பார்த்தீர்களா!



பீரங்கியின்
முன்பக்க தோற்றம்



படிப்பகம்

திரையுலக 31 மறுபக்கம்

# மும்பாயில் இருந்து வந்த மூன்றெழுத்து நடிகை உருகிய நடிகர் விலகிப் போனார்

மும்பாயில் இருந்து வந்த மூன்றெழுத்து நடிகை அவர். அவருக்கு முன்பாக மும்பாயில் இருந்து வந்த 'பூ' நடிகையின் மார்க்கெட் அவுட்டாகிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில்தான் இவர் வந்து சேர்ந்தார். இருவருக்கும் ஒரு ஒற்றுமை. இரண்டு பேருமே மூன்றெழுத்து பெயர் கொண்டவர்கள்.

மும்பாயில் இருந்து வந்த நடிகைகள் என்றாலே சகல விஷயங்களிலும் அனுசரித்துப் போவார்கள், எந்த நேரத்திலும் கதவைத் திறந்து வைத்திருப்பார்கள் என்று தமிழ்ப் பட உலகில் பலர் நினைக்கிறார்கள்.

ஆனால் புதிதாக வந்த நடிகை ஏற்கனவே பழம் தின்று கொட்டைபோட்டவர். இந்தி படங்களில் நடித்திருக்கிறார். அங்குள்ள சபலக் கேசுகளையெல்லாம் சமாளித்து அனுபவம் பெற்றிருந்தார். எனவே, தமிழ்ப்பட உலகிலும் தனது அனுபவத்திற்கு ஏற்பவே நடந்து கொண்டார். தன் முன்னேற்றத்திற்கு ஏணியாக பயன்படக் கூடியவர்கள் என்று நன்கு தெரிந்தவர்களை மட்டுமே தன்னை நெருங்க அனுமதித்தார்.

மீசைக்கார தயாரிப்பாளர் ஒருவருக்கும் நடிகை பச்சைக்கொடி காட்டினார். அந்த தயாரிப்பாளர் நடிகைக்காக எத்தனை பணம் வேண்டுமானாலும் செலவழித்து படம் எடுக்க முன்வந்தார்.

நடன நாயகனை வைத்து படம் பிரமாண்டமாகத் தயாரானது. படப்பிடிப்பின்போது நாயகனும், நாயகியும் காட்சிகளில் மட்டுமல்லாமல், உண்மையாகவும் நெருக்கமாயினர்.




'காதலா' 'காதலா' என்று உருகத் தொடங்கினார் நடிகை. 'காதலன்' அவர் தான் என்று மலைபோல நம்பி நாயகனுடன் தனிமையிலும் இனிமை காணத் தொடங்கினார்.

தாடிக்கார நாயகனும் 'என்னவளே என்னவளே' என்று பாடாத குறையாக நடிகையின் பின்னால் அலைந்தார். மலரில் விழுந்த வண்டாகக் கிடந்தார்.

இந்த விடயம் தயாரிப்பாளருக்கு தெரிய வந்ததும், நடிகையை அழைத்து விசாரித்தார். "என்னை நீ என்ன குத்தகையா எடுத்திருக்கிறாய். என் விருப்பம், யாரோடு வேண்டுமானாலும் இருப்பேன். என் அறைக்கு அழைப்பேன். சொந்த விஷயங்களில் தலையிடுவது எனக்குப் பிடிக்காது" என்று முகத்தில் அடித்தாற்போல கூறிவிட்டார் நடிகை.

## தணிக்கை

நடன நாயகனும், நாயகியும் பாடல் காட்சிகளில் நடிக்கும்போது தாராளமாகவே கட்டிப்புரண்டனர். படப்பிடிப்புக் குழுவில் இருந்தவர்கள் பலரே முகம் சுளிக்கும் அளவுக்கு நடந்து கொண்டனர்.

வழக்கமாக தணிக்கையில்தான் நெருக்கமான காட்சிகளை வெட்டிப் போடுவார்கள். இயக்குநரே சில காட்சிகளை தவிர்க்க வேண்டிய அளவுக்கு அவர்கள் இருவரும் நெருக்கம் காட்டினார்கள்.

குறிப்பிட்ட படம் வெளியாகி சூப்பர் ஹிட்டானது. பிரமாதமான வசூல் கொடுத்தது.

அதனையடுத்து இன்னொரு படத்திலும் அதே ஜோடி நடித்தது. அந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைவதற்கு இடையே இருவருக்கும் தங்கள் உறவு திகட்டத் தொடங்கிவிட்டது.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது போன்று. தலைகால் தெரியாமல் ஆடியதால் விரைவாக திகட்டியது. இதற்கிடையே நடன நடிகர் முன்பிருந்தே ஒரு பெண்ணைக் காதலித்து வந்தார். நடிகர் நடன இயக்குநராக இருந்தபோது, அவரது குழுவில் இருந்த பெண்ணைத்தான் காதலித்து வந்தார்.

நடிகையின் மயக்கத்தில் இருந்ததால் நாயகனால் தன் காதலியை பார்க்க முடியவில்லை. ஆனால் காதலியோ நடிகரின் அவசரத்தால் கர்ப்பமாக இருந்தார். தான் கர்ப்பமாக இருக்கும் விஷயத்தை நடிகரைச் சந்தித்து தெரிவிக்க எவ்வளவோ முயன்றும். நடிகர் கிடைக்கவே இல்லை.

நடிகையின் சகவாசம் திகட்டிய பின்னர்தான் மறுபடி காதலியைச் சந்தித்தார் நடிகர். காதலி கர்ப்பமாக இருந்த செய்தி கேட்டு நடிகருக்கு பலத்த அதிர்ச்சி. நடிகரின் வீட்டிலோ காதலுக்கு பயங்கர எதிர்ப்பு. காதலி வேறு மதத்தைச் சேர்ந்தவர் என்பதாலும், நடன நடிகையாக இருந்தவர் ... தாலும் நடிகரின் வீட்டில் பிரளயமே வெடி...

வீட்டாரின் எதிர்ப்பின் மத்தியில் தன் காத... இரகசியத் திருமணம் செய்து கொண்டார் ந...

## புதிய நட்பு

இக்கட்டத்தில் மூன்றெழுத்து நடிகை... வில்லனாக வந்து கதாநாயகனாகிய 'கு... நடிகருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது...

'குமார' நடிகரின் கட்டுமஸ்தான உடல்வ... பழகும் முறையும் நடிகையை அவர்பால் ஈர்... நடிகருக்கும் சபலம்தான். ஏற்கனவே இன்னொ... உயர நடிகையை காதலித்து ஏமாந்தவர் ந... ஹீரோ என்பதற்கு நெருக்கமான உச்சரிப்... பெயர் கொண்டவர் அந்த நடிகை.

காதல் தோல்வியில் வருத்தமடைந்தி... 'குமார' நடிகருக்கு நடிகையின் சிநேகிதம் இத... இருந்தது. நடிகையுடன் சுற்றத் தொடங்கி... நடிகரின் மனைவிக்கு தகவல் போக. ... கோபத்தில் தாண்டவமாடிப் பார்த்தார். ந... அசைந்து கொடுக்கவில்லை.

நடிகைக்கு கார் பரிசளித்தார். முன்... காதலித்த நடிகைக்காக வாங்கிப் போட்டி... பங்களாவில் இருவரும் தங்கினார்கள்.

நடிகர் பரிசளித்த காரில்தான் நடிகை ... பிடிப்புகளுக்கு சென்று வந்தார். நடிகையை... தன் கணவரைப் பிரிக்க முடியாது என்று ... தபோது நடிகரின் மனைவி தன் பிள்ளைகளு... தனியாகச் சென்றார்.

## 'ஆஹா' பிரிய...

நீண்ட கால இடைவெளியின் பின்னர் த... முகம் காட்டியுள்ளார் பானுப்பிரியா. மு... போல கவர்ச்சி மழை கிடையாது. குடு... பாங்கான மருமகள் வேடம். ரகுவர... மனைவியாக 'ஆஹா' படத்தில் நடித்... கிறார்.

படம் பாதகமில்லாமல் ஓடிக் கொ... ருப்பதால் பானுப்பிரியா சந்தோசத்... இருக்கிறார். இப் படத்தின் பின்னர் குணசி... வேடங்களில் பானுப்பிரியா தொடர்ந்து தோ... வாய்ப்புக்கள் கிடைக்கலாம். தான் இணை... நடித்த ஹீரோக்களுக்கு அண்ணியாக, ... யாக நடித்தாலும் ஆச்சரியமில்லை.

"வெட்டி வேரு வாசம்
வெடலப்புள்ள நேசம்
பூமிக்கும் வாசம் உண்டு
வேருக்கும் வாசம்
வந்ததுண்டோ? மானே!"
(வைரமுத்து)



மாதுரி டிக்ஷித்

## விஜயகாந்த் சொன்னது

விஜயகாந்த், மீனா, சங்கவி நடித்த 'உளவுத்துறை தீபாவளிக்கு வருவதாக இருந்தது. ஆனாலும் படப்பிடிப்புக்கள் முடியாமையால் தாமதம் ஆகியுள்ளது.

படப்பிடிப்பில் தனியாகச் சாப்பிட மாட்டாராம் விஜயகாந்த். வீடு அருகில் இருந்தாலும் படப்பிடிப்புக்கு சென்றால் படப்பிடிப்புக் குழுவினருடன்தான் சாப்பாடு.

ஒரு மனிதன் இலட்சம், இலட்சமாக சம்பாதித்தாலும் அதைச் சாப்பிட முடியுமோ? நான் சாப்பாட்டு விஷயத்தில் பாரபட்சம் காட்டவே மாட்டேன்" என்கிறார் விஜயகாந்த்.

## மினி சினி

* தமிழிலும், தெலுங்கிலும் ஒரே நேரத்தில் வெளியான 'ரட்சகன்', தமிழைவிட தெலுங்கில் வசூலை வாரிக் குவிக்கிறதாம். தெலுங்கில் இது 'ரட்சகடு' என்ற பெயரில் வெளியாகியுள்ளது.
* சூர்யா கதாநாயகனாக நடிக்கும் 'காதலே நிம்மதி' படத்தில் கணவன்-மனைவியாக நடிக்கும் நாசர்-கீதா ஜோடி, மு.களஞ்சியம் இயக்கும் 'கிழக்கும் மேற்கும்' படத்திலும் அதேபோல் நடிக்கின்றனர்.
* 'பொற்காலம்' படத்தில் முரளியின் தங்கையாக நடித்துள்ள ராஜேஸ்வரி தற்போது நடித்து வரும் படம் 'மூவேந்தர்'. இப்படத்திலும் இவருக்குத் தங்கை வேடம்தான்.
* தேவயாணி முதன் முறையாக தெலுங்கில் கதாநாயகியாக நடித்துள்ள 'சுஸ்வாகதம்' விரைவில் வெளியாகவுள்ளது. 'சுஸ்வாகதம்' தமிழில் வெற்றி பெற்ற 'லவ்டுடே' படத்தின் தெலுங்குப் பதிப்பு ஆகும்.
* சின்னி ஜெயந்த் கதாநாயகனாக நடிக்கும் 'வாய் ஜாலம்' படத்தை சிவாஜி புரடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்தப் படத்தில் நடிகர் திலகம் கௌரவ வேடத்தில் நடிக்கவுள்ளார்.
* விஜயின் தாயார் ஷோபா சந்திரசேகரன் இயக்கத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்கவிருக்கும் 'ரசிகை' என்ற படத்தின் பெயரை தற்போது 'பிரியமுடன்' என்று மாற்றியுள்ளார்கள்.
* 'சேனாதிபதி' படத்தைத் தயாரித்த கே.பாலு, அடுத்து சத்யராஜை வைத்துத் தயாரிக்கும் படத்திற்கு 'அனுபவிராஜா' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதை 'வள்ளல்' படத்தை இயக்கிய ராஜ்கபூர் இயக்குகிறார்.
* சிரஞ்சீவி கதாநாயகனாக நடிக்கும் தெலுங்குப் படமொன்றின் படப்பிடிப்புக்கள் யாவும் நியூஸிலாந்தில் படமாக்கப்பட வுள்ளன. ஜெயந்த் என்பவர் இயக்கும் இப்படத்தில் ரம்பா கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.
* 'வி.ஐ.பி.' படம் மூலம் தமிழில் அறிமுகமான சிம்ரானின் சொந்தப் பெயர் ரிஷிபாலா. சினிமாவுக்காக வைக்கப்பட்ட பெயர்தான் சிம்ரான். சிம்ரான் என்றால் தியானம் என்று அர்த்தமாம்.
* நீண்ட இடைவெளிக்குப் பின் சோ, தமிழ்ப்படமொன்றில் நடிக்கிறார். கமலின் 'காதலா காதலா' படத்தில், கமலுக்கு உதவி புரியும் ஒரு வேடத்திலேயே சோ நடிக்கிறார்.

## சங்கவியின் சாதனை

இடைவேளை வரை கலகல, பின்னர் கண்ணீர் பொல பொல கொட்டும் கதை. ஆனாலும் தீபாவளிப் படங்களில் முதலிடத்தை பிடித்தாலும் ஆச்சரியமில்லை. அதுதான் 'பொற்காலம்'

படத்தில் இயக்குநர் சேரன் செய்துள்ள சாதனைகளில் ஒன்று, சங்கவியை சேலையுடன் நடிக்க வைத்திருப்பது. 'அந்தி மந்தாரை' படத்திலும் சேலையுடன்தான் நடித்தார். ஆனாலும் பொற்காலத்தில் சாதனை படைத்திருக்கிறார் சங்கவி.

என்ன சாதனை? அரை குறை ஆடைகளுடன் கவர்ச்சி காட்டுவதை விட, சேலையுடன் மகா கவர்ச்சி காட்டலாம் என்று நிரூபித்திருக்கிறார். முரளியை துரத்தித் துரத்தி "குதிரையேறலாமா?" என்று கேட்பது. முரளியை மயக்க முந்தானையை உருவுவது என்று சேலையிலும் கவர்ச்சிக் கொடி நாட்டியிருக்கிறார்.

என்னதான் சங்கவி ஜொள்ளுப் பண்ணினாலும், மீனாதான் கவர்ச்சியிலும், நடிப்பிலும் ஆணியடித்து நிற்கிறார்.

படத்தில் மணிவண்ணனுக்கு முரளியின் அப்பா வேடம். பொறுப்பில்லாத குடிகாரத் தந்தை. கொல்லலாம் போல ஆத்திரம் வருமளவுக்கு நடித்திருக்கிறார் மனிதர். தேவாவின் இசை ஓ.கே. மொத்தத்தில் சேரனுக்கு இது 'பொற்காலம்'. பார்க்கக்கூடிய படம்.

## ஊர்வசியின் வாசுகி

தீபாவளி படங்களில் 'வாசுகி' படத்தில் நகைச்சுவையில் புகுந்து விளையாடி இருக்கிறார் ஊர்வசி. படம் சுமார் ரகம்தான். ஊர்வசிக்காக பார்க்கலாம்.

ஊர்வசியின் சொந்த வாழ்க்கையில் பல சோகங்கள். தம்பி காதல் தோல்வியால் தற்கொலை. மூத்த சகோதரியின் மணவாழ்க்கை முறிவு. ஊர்வசியின் காதலும் நிறைவேறினபாடில்லை. இத்தனை சோகங்கள் மத்தியிலும் நகைச்சுவை நடிப்பில் புகுந்து விளையாடுகிறார் ஊர்வசி.

'வாசுகி' படத்தில் ஊர்வசி நடிப்பதாலும், கஸ்தூரிராஜா இயக்கியுள்ளதாலும் ஒரே ஒரு காட்சியில் மட்டும் வந்து போகிறார் குஷ்பு. ஊர்வசியும் குஷ்புவும் நெருங்கின தோழிகள்.



## முகப்பில்

சங்கவி

நெப்போலியன்

பானுப்பிரியா



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




கமல்
படம்: மருதநாயகம்

## எபி ஜோடி சிம்ரான்

குஞ்சுமோன் தயாரிப்பில் தீபாவளிக்கு வந்த படம் 'ரட்சகன்'. அடுத்த பட வேலைகளில் மீசையை முறுக்கிக் கொண்டு இறங்கிவிட்டார் குஞ்சுமோன்.

குஞ்சுமோனின் மகன் எபி கதாநாயகனாக நடிக்கும் கோடீஸ்வரன் படத்தின் வேலைகள் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன.

'எபி'யை அப்பாசுக்கு போட்டியாக களத்தில் இறக்கியுள்ள குஞ்சுமோன், அவருக்கு தேடிக் கொடுத்துள்ள ஜோடி யார் தெரியுமா? சிம்ரான்.

அப்பாசுடன் கிசுகிசுக்கப்பட்ட சிம்ரானை தன் மகனுடன் ஜோடி சேர்த்து அழகு பார்க்கிறார். அப்பாசை அறிமுகம் செய்தவர் குஞ்சுமோன். தனது அடுத்த படத்தில் நடிக்க அப்பாஸ் பிகு செய்ததால், தன் மகனை நாயகனாக்க முடிவு செய்தார் குஞ்சுமோன்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம், நம்பியார், செந்தில், வடிவேலு, ரகுவரன், அம்பிகா, லதா, ஆகியோரும் நடிக்கின்றனர்.

மிக முக்கிய தகவல் யாதெனில், இந்தி நடிகைகள் கரிஷ்மா கபூர், ஜெயப்பிரதா ஆகியோரையும் நடிக்க வைக்க பணக்கட்டோடு மும்பாய் போயிருக்கிறார் குஞ்சுமோன். அவர்கள் உடன்பட்டால் கரிஷ்மா கபூர் இன்னொரு கதாநாயகியாக நடிப்பார். சிம்ரானுக்கு போட்டி. ரசிகர்களுக்கு ஜாலி.

புதிய இயக்குநரான மு.நந்தகுமார் இயக்குகிறார். இசை; ஆகோஷ். பாடல்கள், வைரமுத்து. சண்டைப் பயிற்சி விக்ரம் தர்மா.

## கமல் பாடிய பாடல்

கமல் சொந்தக் குரலில் பாடுவது புதுமையல்ல. பாடியுள்ள பாடல்தான் புதிது. 'காதலா காதலா' படத்திற்காக கமல் புதிதாகப் பாடியுள்ளார்.

காசுமேலே காசு வந்து கொட்டுகிற நேரமிது, வாசக் கதவ ராசலட்சுமி தட்டுகிற வேளையிது, தேடிப்பார்த்தேன் காந்தியைத் தான் காணோம்.... என்று தொடங்கும் பாடலை கமல் பாடியிருக்கிறார். பாடல்; வாலி, இசை; கார்த்திக்ராஜா.

கமல், பிரபுதேவா, ரம்பா, சவுந்தர்யா, வடிவேலு, சோ, டெல்லி கணேஷ், ஸ்ரீவித்யா, கோவை சரளா, எம்.எஸ்.விசுவநாதன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## வெற்றி விழா

'அருணாச்சலம்' பட 200வது நாள் வெற்றிவிழா சமீபத்தில் நடைபெற்றது. கமலஹாசன், பாலசந்தர், வைரமுத்து, மம்முட்டி, சிம்ரான் உட்பட பலர் கலந்துகொண்டனர். கமல் அருகே அமர்ந்திருந்த பாலசந்தர் கமலுடன் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. ஆனால் விழாவில் பேசும் போது, "என்னை யாரும் தாழ்த்தவும் வேண்டாம், உயர்த்திப் பேசவும் வேண்டாம்" என்று கூறினார்.

மருதநாயகம் படவிழாவில் கமல் பேசியதற்கு பதிலடியாகவே பாலசந்தர் அப்படிப் பேசினார். மருதநாயகம் பட விழாவுக்கு கமலின் அழைப்பை நிராகரித்த பாலசந்தர், ரஜினியின் அழைப்பை ஏற்றுக்கொண்டு 'அருணாச்சலம்' விழாவில் கலந்து கொண்டார்.

## விருந்தினர் நடிகை

நடிகை வினிதா மும்பாயில் முகாமிட்டிருக்கிறார். சில பெரிய நடிகர்களின் ஆதரவு இருந்தாலும்கூட தங்க இடம் இல்லாமல் தவித்தாராம்.

இப்போது இந்திப்பட போஸ்டர்கள் அச்சடிக்கும் தொழிலதிபர் ஒருவரின் விருந்தினர் விடுதியில் தங்கி இருக்கிறார். தொழிலதிபரின் விருந்தினராக இருக்கிறார் என்பதுதான் பொருந்தும்.

## காதலுக்கு மரியாதை

ஷாலினியை பேபியாக அறிமுகம் செய்தவர் இயக்குநர் பாசில். இப்போது இளம் குமரியாக நடிக்க வைத்திருப்பவரும் பாசில்தான். பேபி ஷாலினி இளம் நாயகியாக தமிழில் அறிமுகமாகும் படம் 'காதலுக்கு மரியாதை.' விஜய் ஜோடியாக நடிக்கிறார்.

ரஜினியுடன் ஜோடியாக நடிக்கத்தான் ஆசைப்பட்டார் ஷாலினி. அதுமட்டும் நிறைவேறவில்லை.

## மாதுரி வீழ்ச்சியா?

மாதுரி திக்ஷித்தின் முதலாம் இடத்தை பிடித்துவிட்டார் கஜோல். ஸ்ரீதேவிக்குப் பின்னர் இந்தியில் முதலிடத்தை பிடித்தவர் மாதுரி திக்ஷித்.

மாதுரி திக்ஷித்தின் நடன அசைவுகளுக்காகவே ரசிகர்கள் அவர் படங்களை பல முறை பார்ப்பது உண்டு. இப்போது மாதுரி திக்ஷித் துக்கு முன்னைய இளமைத் துள்ளல் குறைந்துவிட்டது. இனிமேல் கஜோல் போன்ற இளம் நடிகைகளுக்குத்தான் வரவேற்பு இருக்கும். மாதுரி திக்ஷித்தும் அதனை புரிந்து கொள்வார் என்கிறார்கள் இந்திப்பட உலகத்தினர்.

மாதுரி திக்ஷித்தும் சஞ்சய் தத்தும் ஒரு காலத்தில் மகா நெருக்கக் காதலர்கள். பின்னர் சஞ்சய் தத் பொலிஸாரால் கைதானதும் மாதுரி திக்ஷித் ஒதுங்கிக் கொண்டார். தற்போது மறுபடி 'நட்பு' துளிர்த்து வருகிறது.

## யார் இசை?

'மருதநாயகம்' பட டிரெய்லருக்கு இசையமைத்தவர் கார்த்திக் ராஜா. மருதநாயகம் படத்திற்கு யார் இசையமைப்பாளர்?

இளையராஜா, அல்லது கார்த்திக் ராஜா இருவரில் ஒருவருக்கு வாய்ப்புக் கிடைக்கலாம் என்று தகவல். ஜாகிர் உசேனின் பெயரும் அடிபடுகிறது.



ரோஜா
படம்: அரசியல்

## ...க்கப்பட்டார்

...ார்த்திபன் ஜோடியாக ...ண சுந்தரம்' படத்தில் நடிக்க ...தார் மந்த்ரா. படப்பிடிப்புக்கு செல்லாமல் இழுத்தடித்தாராம். மந்த்ராவின் அப்பாவும் லொள்ளுப் பண்ணினாராம்.

மந்த்ராவை தூக்கிப்போட்டுவிட்டு, பார்த்திபன் ஜோடியாக கீர்த்தி ரெட்டியை நடிக்கவைத்துள்ளனர்.

## அஜித் ராசி

அஜித்குமாருக்கும் நடிகைகளுக்கும் இடையே அப்படி என்ன ஒட்டும் ராசியோ தெரியவில்லை. லேட்டஸ்ட்டாக அஜித்குமாருடன் பேசப்படுகிறவர் கீர்த்திரெட்டி.

இதனை அறிந்து ஹீரா தாம் தூம் என்று குதித்தாராம். புதிய படம் ஒன்றுக்கு வாங்கிய முற்பணத்தை அப்படியே ஹீராவிடம் கொடுத்து சமாதானம் செய்தாராம் அஜித்குமார்.

அனுபவம் காரணமாக இப்போது வாயை அதிகம் திறக்காமல் இருக்கிறார் அஜித்குமார்.

பத்திரிகையாளர்களைக் கண்டால் நழுவிப் போய்விடுகிறார். முன்பு என்றால் நீண்ட விளக்கங்கள் கொடுப்பார். தத்துவங்களைக் கொட்டுவார். இப்போது திருத்தம்.

ஆனால் நடிகைகளை கணக்குப் பண்ணுவதை மட்டும் விடுகிறார் இல்லை.



ஊர்வசி-குஷ்பு

## காதோடு சொல்லுகிறோம்

இயக்குநரும் ஒளிப்பதிவாளருமான பாலுமகேந்திராவின் 'ராமன் அப்துல்லா' படத்தில் நடித்தார் விக்னேஷ். முன்னரே நடிக்க வாய்ப்பு வந்ததாம். அப்போது இயக்குநருடன் ஒட்டியிருந்த நடிகைக்கு விக்னேஷ்மீது ஏதோ கோபம். அதனால் அந்த வாய்ப்பை தடுத்து நிறுத்தினாராம். இயக்குநருக்கு தினமும் 'அர்ச்சனை' பண்ணிய அந்த நடிகை இப்போது பிரிந்து போய்விட்டார். அதனால்தான் ராமன் அப்துல்லாவில் நடிக்க முடிந்ததாம். இது விக்னேஷ் சொன்ன தகவல்.

ரயில் 'ரா' நடிகையின் வெளிநாட்டுக் கணவர் இன்னமும் பூரண சமாதானமாக வில்லையாம். அதனால் நடிகைக்கு பணத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 'பா' இயக்குநர் தான் நடிகைக்கு தேவையான நேரத்தில் கைகொடுத்து நிற்பாராம். சினிமா உலகப் பிரச்சனையில் இயக்குநர் தலையைக் கொடுத்திருப்பதால் நடிகைக்கு உதவ முடியவில்லையாம்.

சூப்பர் நடிகரின் புதிய பிரமாண்ட படத்தில் நடிக்க 'கௌ' நடிகை விரும்புகிறாராம். 'ஆஸ்தான முத்த நடிகை' என்று சூப்பர் நடிகருடன் இணைத்துப் பேசப்பட்டவர் 'கௌ' நடிகை. தனது புதிய படத்தில் நடிகைக்கு ஏற்ற பாத்திரம் எதுவுமில்லை என்று கைவிரித்துவிட்டார் நடிகர். விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகும் நடிகைக்கு ஏன் இந்த அவசரம்?

சிம்ம நடிகையுடன் கிசுகிசுக்கப்பட்ட நடிகர் திடீர் திருமணம் செய்து கொண்டார் அல்லவா. அதன் பின்னணியில் பல சங்கதிகள் உள்ளனவாம். 'சிம்ம' நடிகை சகலருடனும் தாராளம் என்பது நடிகர் அறிந்த சமாச்சாரம்தான். மொடலிங் செய்து கொண்டிருந்த காலத்திலேயே நடிகை சுதந்திரப் போக்குத்தான். நடிகரும் அதனை பயன்படுத்திக் கொண்டது தனிக்கதை. நடிகரும் தாராளவாதிதான். ஆனாலும் பத்திரிகைகளில் வந்த கிசுகிசுக்களால் கலங்கிப் போனார் நடிகர். கிசுகிசுக்களை வைத்து நடிகை தன் கழுத்தில் பிடிக்கக்கூடும் என்று பயந்து நடிகர், தன் முறைப்பெண்ணை அவசரம் அவசரமாக மணந்து கொண்டாராம். ஆனால் நடிகைக்கு அப்படியொரு அபிப்பிராயம் இருந்ததோ தெரியவில்லை. இப்போதும் மான்போல துள்ளித் திரிந்து வாய்ப்புக்களை தேடிக் குவிக்கிறார்.

## விடுகதை படு தோல்வி

தீபாவளிப் படங்களில் முதலில் மரண அடி வாங்கிய படம் 'விடுகதை'. 'வான்மதி', 'காதல் கோட்டை', 'கோகுலத்தில் சீதை' ஆகிய படங்களை இயக்கியவர் அகத்தியன்.

அதனால் விடுகதை படத்திற்கு பயங்கரமான எதிர்பார்ப்பு இருந்தது. படத்தை தயாரித்தது பாலசந்தரின் பட நிறுவனம். அதனால் எதிர்பார்ப்பு இரட்டிப்பானது.

ஆனால், படம் பார்த்தவர்கள் முகத்தில் கிலோ கிலோவாக கரிபூசிவிட்டார் அகத்தியன். ஆமை போல நகர்கிறது கதை. மணிவண்ணன் மட்டும் இடைக்கிடையே சிரிக்க வைக்கிறார். கல்லூரி மாணவிக்கும் 48 வயதான ஒருவருக்கும் இடையே காதல் மலர்வது, கல்யாணம் நடப்பது, வயதானவரின் தாழ்வு மனப்பான்மையால் ஏற்படும் பிரச்சனைகள் என்று அறுவையென்றால் அறுவை. அகத்தியன் கொன்றுவிட்டார். படம் பப்படமாகிவிட்டது.



படிப்பகம்

லேடீஸ் ஸ்பெஷல்

# தற்காப்புக் கலை



முன்பெல்லாம் பெண்கள் தற்காப்புக் கலை பயில்வது கேலியாக கருதப்பட்டது. இவ்வாறான கேலிக்குப் பயந்தே பெண்கள் ஒடுங்கிக்கிடந்தனர். இப்போது காலம் மாறிவிட்டது.

கல்லூரிகளுக்கும், வேலைகளுக்கும் செல்லும் பெண்கள் சிறிது தற்காப்பு கலையும் கற்று வைத்திருப்பது மிக உபயோகமாக இருக்கும்.

தனியாகச் சென்றுவரும்போது, வம்பு செய்யும் நபர்களிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் உதவும். தன்னம்பிக்கையும் வளரும்.

பெண்கள் கல்லூரிகளில் உடற்பயிற்சிகள் சொல்லித்தரும்போது, கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளையும் கற்றுக் கொடுக்கலாம்.

பெற்றோர்களே! வெள்ளம் வரும் முன்பே அணைகட்டவேண்டும். அபாயங்களில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் அடிப்படை அறிவு உங்கள் பெண் பிள்ளைகளுக்கு இருக்க வேண்டும் என்பதை மறவாதீர்கள்.

உடலுக்கு பயிற்சியுமாகிறது, உரிய நேரத்தில் உதவியுமாகிறது.



# குழந்தைகளின் வளர்ச்சிக் கட்டங்கள்

| செயல்கள் | வளர்ச்சிக்காலம் |
|---|---|
| ★ ஆட்காட்டி விரலால் அடையாளம் காட்டுதல் | → 8 முதல் 14 மாதங்களில் |
| ★ பிடிமானமின்றி நடத்தல் | → 8 முதல் 17 மாதங்களில் |
| ★ படுக்கையிலிருந்து எழுந்திருத்தல் | → 14 முதல் 22 மாதங்களில் |
| ★ இரண்டு கால்களால் குதித்தல் | → 18 முதல் 30 மாதங்களில் |
| ★ கப்பைப் பிடித்துக் கொண்டு தானாகக் குடித்தல் | → 18 மாதங்களில் |
| ★ துணிகளைத் தானாகக் கழற்றுதல் | → 24 மாதங்களில் |
| ★ விழாமல் ஓடுதல் | → 24 மாதங்களில் |
| ★ தவறவிடாமல் பொருட்களை எடுத்தல் | → 36 மாதங்களில் |

# நரையோ நரை

கொஞ்ச காலத்திற்கு முன்பு முடி நரைப்பது புத்திசாலித்தனத்தின் வெளிப்பாடு என்று நம்பினார்கள். ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.



பல பெண்கள் நரை வந்துவிட்டாலே, அழகு குலைந்து போய் விடுமே எனப் பயப்படுகிறார்கள். எந்த ஹேயார்டை சிறந்தது என்று விசாரிக்கத் தொடங்கி வருகிறார்கள்.

நரை முதுமையின் வெளிப்பாடு என்று நம்பப்பட்டாலும், 15 வயதிலேயே முடி நரைக்கத் தொடங்கி விடுகிறது என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்த நரையை நம்மில் பலரால் அடையாளம் காண முடியாது. 30 வயதிற்கு மேலேயே நரையைக் கண்டு பிடிக்க முடிகிறது.

மெலானின் என்ற வர்ணப் பொருள்தான் முடிக்கு நிறத்தைக் கொடுக்கின்றது. அதன் தன்மையைப் பொறுத்து, முடியின் நிறத்தில் மாறுதல் தோன்றும். 20 வயதிலேயே மெலானின் தயாரிப்பு குறையத் தொடங்கி விடுகிறது. அதனால் முடியின் நிறமாற்றம் மெல்ல மெல்ல ஏற்படும். முழுமையாக அதன் உற்பத்தி நின்று போனதும் முழுமையாக கூந்தலின நிறம் வெள்ளையாகி விடும்.

முடி நரைப்பதற்கு பரம்பரையும் முக்கிய காரணம். அத்துடன் மலேரியா, டைபோயிட் போன்ற நோய்களும் நரைக்குக் காரணமாக அமைகிறது. தைரோய்ட் சுரப்பிகளின் அதிகமான செயற்பாடு, சத்துணவுக் குறைபாடு போன்றவைகளாலும் நரை விரைவாகத் தோன்றும்.

நோய் மற்றும் சத்துணவுக் குறைபாடுகளால் தோன்றும் நரையைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

தொகுப்பு: திருமதி.எஸ்.தேவிகா,
கொழும்பு-05.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை CT

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-12-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் (11)

இரண்டாவது உலகப்போரில் பெரும் பங்கேற்றவர் மவுண்ட்பேட்டன் பிரபு. சுதந்திர இந்தியாவின் முதலாவது மகாதேசாதிபதியாகவும் பதவி வகித்தவர்.

இந்தியாவின் முதலாவது பிரதமரான நேருவுடன் நெருக்கமாக இருந்தவர் மவுண்ட் பேட்டன் பிரபுவின் துணைவி.

1979 ஆகஸ்ட் மாதத்தில் அயர்லாந்தில் மவுண்ட் பேட்டன் பிரபு கொல்லப்பட்டார். அயர்லாந்து விடுதலைப் போராளிகள் அவர் பயணம் செய்த படகில் வைத்திருந்த குண்டு வெடித்தே அவர் பலியானார்.

இளவரசர் சாள்சின் ஆலோசகராக இருந்தவர் மவுண்ட் பேட்டன் பிரபு. தனது தந்தைக்கு நிகராக அவரை மதித்தார் சாள்ஸ்.

மவுண்ட் பேட்டன் பிரபுவின் மரணம் சாள்ஸை வெகுவாகப் பாதித்தது. நீண்ட நாட்களாக சோகம் அவர் முகத்தில் நிழலாடிக்கொண்டிருந்தது.

மவுண்ட் பேட்டன் பிரபுவின் மரணத்தின் பின்னர் ஒருநாள் சாள்ஸ் போலோ விளையாடப் போயிருந்தார்.

டயானாவும் அங்கு வந்திருந்தார். அவளைக் கண்டதும் சாள்ஸுக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

இருவரும் தனிமையாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். குதிரைலாயம் அருகில் இருந்த வைக்கோல் குவியலில் அமர்ந்தே பேசிக்கொண்டிருந்தனர்.

மவுண்ட் பேட்டன் பிரபுவின் மரணச் சடங்கில் டயானாவும் கலந்து கொண்டாள். அங்கு சோகம் நிழலாட, இருளடைந்த முகத்துடன் சாள்ஸ் நின்றகோலம் டயானாவை கவலைக்குள்ளாக்கியது.

சாள்ஸை தனிமையில் சந்திக்க கிடைத்ததால், அதனை நினைவுகூர்ந்த டயானா கூறிய வார்த்தைகள் சாள்ஸை நெகிழச் செய்தன.

"தங்களுக்காக எனது இதயம் இரத்தம் சிந்தியது" என்று கூறினாள் டயானா.

இளவரசர் சாள்ஸிடம் பிற்கால இளவரசி அன்று காதலோடு கூறிய முதல் வார்த்தைகள் அவைதான்.

நெகிழ்ந்துபோன சாள்ஸ், தன் மனக் குமுறலை கொட்டினார். தன் சோகத்தை மனம் திறந்து வெளியிட்டார்.

இச் சம்பவத்தின் பின்னர் இருவரும் அடிக்கடி தொலைபேசியில் பேசிக்கொண்டனர். நலம் விசாரிப்புக்களாக இருந்தபோதும்,



புவனா

பின்னர் பலித்தது.

கரோலினா மூலமாக டயானாவின் ஏனைய தோழிகள் பலருக்கும் தகவல் எட்டியது.

பொல்லாத கலாட்டாப் பேர்வழிகளான அந்தத் தோழிகள் டயானாவை, "மாட்சிமை பொருந்திய இளவரசி" என்று அழைப்பதும், தலைகுனிந்து வணக்கம் தெரிவிப்பதுமாக தினமும் அறுத்தே கொன்றார்கள்.

அறுவை தாங்காமல் இருந்தாலும், டயானாவுக்கு உள்ளூர ஒரு சந்தோசமும் ஏற்படவே செய்தது.

## தூதன் வந்தான்

ஒருநாள் இளவரசர் சாள்ஸ் தன்னுடைய தூதன் ஒருவனை டயானாவிடம் அனுப்பியிருந்தார்.

அன்று நடைபெற இருந்த இசை நாடகம் ஒன்றுக்கான அனுமதிச் சீட்டை அவன் கொடுத்துவிட்டுப் போனான்.

தூதன் சென்றபின்னர் சாள்ஸிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

"அனுமதிச் சீட்டு கிடைத்ததா?"

"கிடைத்தது, நன்றி!"

"நாம் இருவரும் சேர்ந்தே போகலாம் என்று ஆசைப்படுகிறேன். நீ என்ன நினைக்கிறாய்?"

"மிக்க மகிழ்ச்சி!"

இசை நாடகத்தை இருவரும் அருகருகே

# தித்திப்பான சந்திப்புக்கள்

அப் பேச்சுக்களில் காதல் தொனித்ததை இருவரும் அறிந்தும், அறியாததுபோல நடித்துக் கொண்டிருந்தனர்.

## மனக் குழப்பங்கள்

இளவரசர் சாள்ஸ் தன்னை மனைவியாக அடைய நினைக்கிறாரா, அல்லது தனது பெண் நண்பிகளில் ஒருவராகக் கருதி, நெருங்கிப் பழக ஆசைப்படுகிறாரா என்ற குழப்பம் டயானாவின் அடி மனதில் இருந்தது.

சாள்ஸுக்கும் குழப்பம் இல்லாமல் இல்லை. வயது வித்தியாசம் கருதி, தன் காதலை டயானா ஏற்க மறுப்பாளோ? இளவரசர் என்ற கோதாவிலும், குடும்ப நண்பர் என்ற மரியாதையிலும்தான் தன்னுடன் டயானா பழகி வருகிறாளோ? என்ற சந்தேகம் சாள்ஸின் மனதை அரித்துக் கொண்டிருந்தது.

எப்படி டயானாவின் மனதில் உள்ளதை அறிவது? என்று குழம்பிப் போயிருந்தார் சாள்ஸ்.

இளவரசர் சாள்ஸ் தன்னுடன் மனம்விட்டுப் பேசுவதைப் பற்றி தன் தோழியான கரோலினாவிடம் கூறினாள் டயானா.

"அப்படியா சங்கதி. நீ அதிஷ்டக்கட்டையடி. இங்கிலாந்தின் எதிர்கால இளவரசியே, எங்களை மறந்துவிடாதே!" என்று கேலி செய்யத் தொடங்கிவிட்டாள் கரோலினா.

"என்னைப் பார்த்தால் இளவரசியாகும் தகுதியுள்ளவள் போலவா இருக்கிறது?" என்று கேட்டாள் டயானா.

"உனக்கென்ன குறை? இளவரசி மட்டுமல்ல, இங்கிலாந்தின் வருங்கால மகாராணியும் நீதானடி" என்றாள் கரோலினா.

கரோலினா சொன்னதில் ஒன்றுதான்

அமர்ந்து பார்த்து இரசித்தனர். நாடக அரங்கில் இருந்த பலரது கண்கள் இளவரசர் சாள்ஸின் அருகில் அமர்ந்திருந்த அழகிய இளம்பெண்மீது பாய்ந்தன.

அரங்கில் இருந்த மங்கலான விளக்கொளி சாள்ஸுக்கு வசதியாக இருந்தது. தன் அருகே அமர்ந்திருந்த டயானாவை அடிக்கடி திரும்பிப் பார்த்து, அவள் அழகை தன் கண்களால் பருகிக்கொண்டிருந்தார்.



சகோதரன் சாள்ஸ் ஸ்பென்சர்–டயானா

சாள்ஸ் தன்னைப் பார்ப்பதை டயானாவும் கடைக்கண்ணால் கவனிக்கவே செய்தாள் மனதுக்குள் புன்னகைத்தாள்.

தன்னுடன் இசை நாடகம் பார்க்க வந்தமைக்காக திரும்பத் திரும்ப பலமுறை சாள்ஸ் நன்றி சொன்னார்.

அதையே சாக்காக வைத்துக்கொண்டு பல முறை ஃபோன் செய்தும் விட்டார் சாள்ஸ்.

டயானாவுக்கு சாள்ஸின் செய்கைகள் சிரிப்பாக இருந்தன. தன்மேல் உள்ள விருப்பத்தை நேரடியாகச் சொல்ல முடியாமல் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறார் என்பது நன்கு விளங்கிவிட்டது.

## அழைப்பு

அடுத்து இன்னொரு அழைப்பும் டயானாவுக்கு வந்து சேர்ந்தது.

இம்முறை சாள்ஸிடம் இருந்தல்ல, நேரடியாக அரச குடும்பத்திடம் இருந்தே அழைப்பு வந்தது.

அரச குடும்பத்தினருக்கு சொந்தமான படகு ஒன்றில் கடல் நடுவே விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்த விருந்துக்கு டயானாவுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

சாள்ஸும், டயானாவும் தங்கள் காதலை ஒருவருக்கொருவர் மறைத்துக் கொண்டிருந்தனர்.

அதேசமயம் இவர்கள் இருவருக்குமே தெரியாமல், அவர்களின் ஜோடிப்பொருத்தத்தை திரைமறைவில் ஆராய்ந்துக் கொண்டிருந்தது அரச குடும்பம்.

எலிசபெத் மகாராணியும், அவரது தாயாரும் டயானாவை தங்கள் அரண்மனை மருமகளாக்க தயாராகிவிட்டனர்.

படகில் நடந்த விருந்து டயானா அரச குடும்பப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ற பெண்தானா என்பதை பரிசீலிக்கச் செய்யப்பட்டதுதான்.

விருந்தில் டயானா நடந்துகொண்டவிதம் அரச குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியளித்தது. சாள்ஸும் டயானாவும் சிரித்துப் பேசியதும் மகாராணிக்கும், அவர் தாயாருக்கும் திருப்தியாக இருந்தது.

சாள்ஸும் டயானாவும் தனிமையாக சந்தித்ததும், தொலைபேசியில் பேசிக்கொள்வதும் அரச குடும்பத்தினருக்கு அப்போது தெரியாது.

அன்று விருந்து முடிந்தபின்னர், டயானாவுக்கு விடை கொடுக்கும்போது கன்னத்தில்



முத்தமிட்டார் சாள்ஸ்.

டயானாவின் கன்னம் சிவந்துபோனது. அவள் காந்தக் கண்களில் வழிந்த போதையை கிட்டத்திலே பார்த்த சாள்ஸின் இதயம் தட தடத்தது.

முத்தமிட்டு பிரியாவிடை கொடுப்பது அங்கு புதியதல்ல. ஆனால் சாள்ஸ் கொடுத்த முத்தம் சம்பிரதாய முத்தம் மட்டுமல்லவே.

அதனால்தான் இருவருமே நிலை தடுமாறிப் போயினர்.

## தொடர் சந்திப்பு

அதன்பின்னர் டயானா, சாள்ஸ் சந்திப்புக்கள் அடிக்கடி நடந்தன. நெருக்கம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

ஒருநாள் டயானாவின் இடையை தன் கையால் சுற்றி அணைத்துக்கொண்டார் சாள்ஸ். டயானா ஒரு புறாக்குஞ்சுபோல அவரது அணைப்புக்குள் கதகதத்தாள்.

டயானாவின் இதழ்களை நோக்கி குனிந்த சாள்ஸ் இதமாகவும், மென்மையாகவும் முத்தமிட்டார்.

## முதல் முத்தம்

முத்து முத்தாய் கொடுத்த முத்தம்!

டயானாவுக்கு முதல் காதல் முத்த அனுபவம். அவளின் கரிய கண்களையும், அவை கிறக்கத்தில் செருகிக்கொண்டதையும் இமைகள் மூடி மறைத்தன.

மூடிய இமைகள் மீது சாள்ஸ் தன் உதடுகளை பதித்து முத்தமிட, சூடான ஒத்தடம் போன்று இருந்தது.

அதற்குமேல் டயானா அன்று அனுமதிக்கவில்லை. இளம் இதழ்களின் ஸ்பரிசம் அன்றிரவு முழுவதும் சாள்ஸை கண்ணயர விடவில்லை.

மறுநாள் "மீன்பிடிக்கச் செல்லலாம் வா!" என்று அழைத்தார் சாள்ஸ்.

ஏன் அழைக்கிறார் என்பது டயானாவுக்குத் தெரியும்தான். புது அனுபவம் மேலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தபோதும், "நேற்றுப்போல் நடந்து கொள்ளாவிட்டால் வருகிறேன்" என்றாள்.

காட்டின் ஒதுக்குப்புறத்தில் இருந்த ஏரியொன்றின் கரையில் இருந்தபடி சாள்ஸ் தூண்டில் போட்டுக்கொண்டிருந்தார். டயானா அருகில் அமர்ந்து இருந்தாள்.

தங்களை யாரோ அவதானிப்பதாக டயானாவுக்கு ஏதோ ஒரு உறுத்தல்.

உறுத்தல் எழுந்த வேகத்தில் திரும்பிப் பார்க்க, அங்கே மரத்தின் பின்னால் ஒரு நபர் மறைந்துகொள்வது தெரிந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வெள்ளவத்தை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

சி. நேசராஜினி,
46, கோகிலா வீதி, வெள்ளவத்தை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக,வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

www.padippakam.com

## தனிமை

வெளியில்....
தொலைவில்....
துப்பாக்கி வேட்டுக்கள்
தொடர்ந்து கேட்டன...
✋✋
பதற்றமும், பரபரப்பும்,
அச்சமும், அவசரமுமாக
வெளியிலே வந்தேன்!
✋✋
மதில்களின் மேலால்
தலைகள் தெரிந்தன...
✋✋
கரையத் தொடங்கின கணங்கள்...
கரைந்து போயின நிஜங்கள்....!
✋✋
பக்கத்தே இருந்த
பள்ளியில் இருந்தும்
பாங்கொலி கேட்டது!
✋✋
வெளியில்...
தொலைவில்....
துப்பாக்கி வேட்டுக்கள்
தொடர்ந்து கேட்டன!
✋✋
கல்முனை வீதியில்
கரைபுரண்ட மக்களைக்
காணவே இல்லையே!
✋✋
வதந்திக்குச் சிறகு முளைத்தது.
ஊருக்குள் மயானம் புகுந்தது!
✋✋
கோயிலின் அருகே
குண்டோடு பாய்ந்த
போராளியின் மண்டையோடு
சிதறிக் கிடப்பதாய்
சொல்லிய நண்பன்
ஓடியே மறைந்தான்!
✋✋
இராணுவ ட்றக்கில்
ரோந்து வந்தோர்
வீழ்ந்து கிடப்பதாய்ப்
பக்கமாய் வந்த பாவலர்
முணுமுணுத்தபடியே மூக்கைச்
சொறிந்தவர்
முடுக்கால் கிறிகினார்.
✋✋
ஆயினும் நான்
தனிமையில்...,
ஆரவாரமற்ற வீதியில்...!
✋✋
வெளியில்....
தொலைவில்
துப்பாக்கி வேட்டுக்கள்
தொடர்ந்து கேட்டன...

அலிக்கான், மருதூர்,
சாய்ந்தமருது-03.

## முதற் பாவம்

ஜன்னலின் இடுக்கினூடே
தாவி வரும் பார்வைகள்!
வளைவுகள் சுருங்க-
வாத்ஸல்ய புன்னகைகள்!
பின்னழகின் ஆரோகணிப்பில்
சித்தம்பிசகி, சிதறுமென் இளநெஞ்சு.

மழைக்கால மையிருட்டில்
விழி மட்டும் மினுங்கி வரும்!
ஒரு கடுவனின் உறுமலும்
கிடாயின் தணகலுமாய்...!

மிக அழகாய் இருந்தது மாலை
எனினும்-
அது சோபிக்கவில்லை
உன் சிரிப்பைவிட!

தொண்டைக்குள் சதா
மீன் முள்ளாய் சிக்கிக்கொள்வதும்
குடலிறங்கி விக்கிக் கொள்வதுமாய்
உன் நினைவு கடுமவஸ்தை!

அடி போ
முதற் காதலில் இதுவெல்லாம்
பிரமைதான்!

## குருதி காயாத குருஷேத்திரம்!

இங்கெம் துயர்கலைக்க இதுவரைக்கும்
கிருஷ்ணர்கள்
சங்கெடுக்கவில்லை!
சாப்பாம்பு அசைந்தாட
மகுடி ஊதுறாரன்றிப் பாம்படிக்க மனிசரில்லை!
பகுத்துணர்ந்து...
ஏங்கும் பாண்டவர்க்குப் பரிசளிக்க
பீஷ்மர்கள் தானும் பெருந்தன்மை காட்டவில்லை!
பதினெட்டு ஆண்டில் பாரதப்போர் முடிந்ததிங்கோ
குருஷேத்திரம் இன்னும் குறையவில்லை!
போரனலால்
வாடும் பயிர்மகிழ மழைமேகம் வயல்நோக்கி
வந்ததோர்நாள்;
ஆனால் மண்சிலிர்க்கப் பெய்யவில்லை!
இன்றைக்கும் இந்த 'இதிகாசம்' தொடர்கிறது
மான்திரிந்த மண்ணில்
வனப்பேய் சிரிக்கிறது!
வழமைபோல் எங்கள் வழியெங்கும் சடலங்கள்!
பழிவாங்கும் படலம்
பசித்தவர்க்குப் பரிசளிக்க
மனமின்றி....
'இன்றை' மரணம்தான் ஆளுகிறதே....
கனகாலம் போமோ கலிசாய?
ஆர்சொல்வீர்?

அருணன், யாழ்ப்பாணம்.



## தோல்வி

இங்கே
மலிவாய் கிடைப்பது
இரண்டு
ஒன்று: - காதல்!
மற்றது: தோல்வி!
•••
சிலர்
தேறியதற்கும்
பலர்
தேறாமற்போனதற்கும்
எழுதுகோல்தான்
பின்னணி வகிக்கிறது!
•••
காதலை
ஆரம்பிப்பதொன்றும்
கஷ்டமில்லை- என்பதால்
தோல்வி பலருக்கு
தொந்தரவில்லை!
•••
இப்போதெல்லாம்
கட்டாயமாக
கண்டிக்கவேண்டியது
எதையெனில்....?
•••
'கவிஞர்களாவதற்காக
காதலில் தோற்றோம்!'
என்று-
கத்துவதை!!

எஸ். பிரபா, பதுளை.

## தீர்வுப் பொதி

இதனுள்
என்னயிருக்கிறதென்று..
ஆருக்குந்தெரியாது!
இதுவுமொரு
சிதம்பர
இரகசியந்தான்!

ஆரம்பத்திலிது
கனமாயிருந்ததாம்!
காலஞ்செல்லச்... செல்ல
கனம் குறைந்ததாம்!
எது குறைந்ததென்று
ஆருக்குத் தெரியும்!

இதனை
எல்லோரையும்
பிரித்துப் பார்க்கச்
சொன்னார்கள்!
ஆரும் பாராமலேயே
இது பாரமென்றார்கள்!

மாந்தருக்கிதன்
மகத்துவமுணர்த்தினர்!
அவர்களோ....
இதன்
மகத்துவம் யாதென
வினாத் தொடுத்தனர்!

அரச மரத்தடிக்கீழிதனை
அலசினர்!
விகாரை வீதிகளில்
தவழச் செய்தனர்!
பின்னே....
•இதன் விதிகளெல்லாம்
எமக்கான
சதிகளென்றனர்!

சிலர்
இதனுள்
'குண்டு' இருக்கலாமென்றனர்!
பலர்,
இதனுள்
'பாகப்பிரிவினை' என்றனர்!
இன்னும் சிலர்
'இதனை விடவா...!' என்றனர்!

பொதி
'பொதி' செய்யப்பட்டதா?
அல்லது,
'சதி' செய்யப்பட்டதா?
யாமறியோம்
பராபரனே!

சோ. ஸ்ரீதரன்-
பொகவந்தலாவை.

## தேன் கிண்ணம்



## வி.ஐ.பி

முன்நூற்று சொச்சம்
மைல்களை கடந்தும்
எந்த சோதனைச் சாவடிகளிலும்
சோதனை செய்யப்படாதவரை!
0-0-0
பயணத்து வழிகளில்
எந்த ஷெல் வீச்சுக்கும்
என் தலை அகப்படாதவரை-
0-0-0
வாழ்க்கை சுவடுகளில்
அகதி வாழ்வை
சந்திக்காதவரை-
0-0-0
தேசத்து ஓட்டைகளால்
எந்த அவதூறுகளும்
என் மீது வீசப்படாதவரை
நானும் ஒரு வி.ஐ.பி.தான்!
0-0-0
அது வரையில்
நிலவோடு பேசுவேன்
காற்றிலே பறப்பேன்
வான்மீது நடப்பேன்
மலை மேல் ஏறுவேன்
மல்லிகையில் தூங்குவேன்
என் வழியில் யாரும் குறுக்கிடமுடியாது
என் இராஜாங்கமே தொடரும்
ஏனென்றால்
அதுவரையில் நானொரு வி.ஐ.பி.!

செல்வி. எஸ். பு. சுஜாதா.

## அந்த நாள் ஞாபகம்





←சினிமாவில் நடிக்க வருவதற்கு முன்னர் ஜெயலலிதாவின் இளமைத் தோற்றம். அடுத்த படத்தில் இருப்பது: நூறு படங்களில் → நடித்த பூரிப்புடன் சதை போட்ட ஜெயலலிதா. மூன்றாவது ↓ படத்தில் தமிழ்நாடு முழுவதும் தன்வசமான பண்மடங்கு பூரிப்பில் பெருத்துவிட்ட ஜெயலலிதா.



## யார் இவர்கள்?







↑ யார் இவர் தெரிகிறதா? நீண்டகாலமாக அதாகப்பட்டது சிவாஜி, எம்.ஜி.ஆர். காலம் முதல் இன்றுவரை நடித்துவருகிறார். குணசித்திரம், நகைச்சுவை, வில்லன் எனப் பல அவதாரம் எடுத்தவர். ராமன் தான் இவர் சாமி.

← இயக்குநராக இருந்து இப்போது நகைச்சுவை, குணசித்திரம், வில்லத்தனம் மூன்றிலும் வெளுத்துக் கட்டும் நடிகர். மணியான நடிகர். இவர் கண்டு பிடித்து விட்டீர்களா?

→ சினிமா விருது ஒன்றின் பெயரைக் கொண்ட நடிகை. இவருக்கும் நகைச்சுவை நடிப்பு என்றால் அல்வாதான். பெண்களைக் கவர்ந்த நடிகை. இது மேக் அப் இல்லாத தோற்றம்.

விடைகள் உதவி; 18ம் பக்கம்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(30.11.1997 தொடக்கம் 06.12.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண்முயற்சி, காரியத் தடை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| புதன்- பலவித கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- அந்நியர் பகை, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பயனற்ற செயல். | பகல் | 12 | மணி |
| சனி- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செய்தொழில் கஷ்டம், பண முடங்கல். | காலை | 8 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- துயர் நீங்கும், காரிய சித்தி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் கலக்கம், பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| சனி- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- இனசன மகிழ்ச்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- பெரியோர் சுகம், கௌரவம். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- பலவித நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன் படல். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண் கலக்கம், பெரியோர் சகாயம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக் கிலேசம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், புதன். |
| தனு | - வெள்ளி, செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

★ சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால்,- பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- துயர் அதிகம், வீண் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பகல் | 11 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், துயர் நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன் - வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், கடன் சுமை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பலவித முயற்சி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- காரிய சித்தி, இனசன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தொழில் மந்தம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வீண் கலக்கம், பொருள் வரவுகுன்றும். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பெரியோர் சகாயம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தேகசுக நன்மை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கடன் பயம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- இனசன மகிழ்ச்சி, காரியசித்தி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பயனுள்ள செயல். | பகல் | 11 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வீண் துயர், பெரியோர் சகாயம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- இனசன மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| சனி- புதிய முயற்சி, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உறவினர் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2


படிப்பகம்

www.padippakam.com





அச்சப் பேயைக் கொல்லும் படையாம்
வித்தைத் தேனில் விளையும் கனியாம்
வாராய் நிலவே, வா!
–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# வியாபாரி வீசிய மூட்டை

ஓர் ஊரின் ஆற்றங்கரையருகே! ஒருநாள் மந்திரவாதி ஒருவன் வித்தைகள் காட்டிக் கொண்டிருந்தான்.

அவ்வூர் மக்கள் அனைவரும் திரண்டு வந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த ஊரில் உள்ள தர்மன் என்ற விவசாயியும் இதைப் பார்க்க வந்தார். வந்து வசதியாக ஓர் இடமும் பிடித்து உட்கார்ந்து விட்டார்.

கொஞ்ச நேரம் கழித்து, அதே ஊரைச் சேர்ந்த மணியன் என்ற வியாபாரி வித்தை பார்க்க வந்தான். மிகவும் திமிர் பிடித்த மணியன் மற்றவர்களை எப்போதுமே மதிப்பதில்லை.

தர்மன் உட்கார்ந்திருந்த இடத்திற்குப் பக்கத்தில் இடம் காலியாக இருக்க, அங்கே போய் உட்காரப் போனான் மணியன்.

தர்மனுக்குப் பக்கத்தில் சிறிய மூட்டை ஒன்று இருந்தது. மணியன், தர்மனைப் பார்த்து,

"மூட்டையை இந்த இடத்திலிருந்து எடுக்கப்போகிறாயா இல்லையா?" என்று அதிகாரத் தொனியில் கேட்டான்.

மணியனின் சுபாவத்தை நன்கு அறிந்த தர்மன் அவனிடம்,

"நான் ஏன் எடுக்க வேண்டும்?" என்று அதே வேகத்தில் கேட்டார்.

இது மணியனுக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்தியது. உடனே விறுவிறுவென்று, அந்த மூட்டையை எடுத்துச் சென்று ஆற்று நீருக்குள் தூக்கி எறிந்துவிட்டான்.

அதன் பின், அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டே,

"இனியாவது, என்னுடன் மரியாதையாக இருக்கப் பழகிக்கொள்!" என்று தர்மனைப் பார்த்துத் திமிராகச் சொன்னான் மணியன்.

தர்மன் சிரித்துக் கொண்டே,

"நான் மரியாதையைப் பழகிக் கொள்வது ஒருபுறம் இருக்கட்டும். நீ தூக்கி வீசிய மூட்டை என்னுடையதல்ல. அந்த மூட்டைக்குச் சொந்தக்காரர், பக்கத்தில் இருக்கும் கடைக்குச் சென்றுள்ளார். பயில்வான் போல் இருக்கும் அவரிடம் இருந்து முதலில் உன்னைக் காப்பாற்றிக் கொள்!" என்றார்.

இதைக் கேட்ட மணியனுக்கு உடலெல்லாம் நடுங்கியது. மூட்டைக்குச் சொந்தக்காரன் வந்தால் என்ன நடக்குமோ என்று பயந்தபடி அந்த இடத்தை விட்டு ஒரே ஓட்டமாக ஓடி விட்டான்.



## அதிசயம்–ஆனால் உண்மை!

### தஹர்



ஆசிய மலைப்பகுதிகளில் உள்ள 'தஹர்' என்ற ஆட்டை வலை வீசிப்பிடிக்கும்போது அது மயக்கமடைந்துவிடும்.

### பெரிய கமெரா



1899ல் ஒரு முழு ரயிலை அதன் ஒவ்வொரு பகுதியும் நன்கு தெரியும்படி துல்லியமாக படம் பிடிப்பதற்காக ஒரு பெரிய கமெரா செய்யப்பட்டது. 20 அடி நீளமும், 1400 இறாத்தல் கனமும் கொண்ட இந்த கமெராவில் 10 அடிக்கு 8 அடி கொண்ட நெகட்டிவ் பயன்படுத்தப்பட்டது.

### எச்சரிக்கை




ஆபிரிக்காவில் உள்ள தங்களீக்கா என்ற இடத்தில் இருக்கும் சரணாலயத்தின் வழியாகச் செல்லும் காரோட்டிகளை எச்சரிப்பதற்காக 'சிங்கங்கள் ஜாக்கிரதை' என்று அமைக்கப்பட்டுள்ள சின்னம் இது. சிங்கத்தின் மண்டையோடும், குறுக்காக இரண்டு எலும்புகளும் வைக்கப்பட்டுள்ளன.

### வெந்நீர்–குளிர்நீர் ஊற்று



ஆர்மியா என்ற இடத்தில் ஓடும் அருவியில், குளிர்காலத்தில் வெந்நீரும், வேனிற்காலத்தில் ஐஸ் போன்று குளிர்ந்த நீரும் ஓடும்.

## வாரம் ஒரு நாடு

### பஹ்ரைன்

தலைநகர் – மனாமா
பரப்பு – 669 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை – 6 இலட்சம்
மொழி – அரபி, ஆங்கிலம்
எழுத்தறிவு – 77%
சமயம் – இஸ்லாம்
நாணயம் – டினார்
தனி நபர் வருமானம் – 9000 டொலர்.



**அமைவிடம்:**

மத்திய கிழக்கு நாடு, 33 தீவுகள் அடங்கிய தீவுக்கூட்டமே பஹ்ரைன். சவுதி அரேபியாவின் கிழக்குக் கடற்கரையில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தென்கிழக்கே கட்டார் துறைமுகம் உள்ளது. முக்கிய இருதீவுகள் பஹ்ரைன் மற்றும் முகராக்.

**வரலாறு:**

90 வருடங்களாக பிரிட்டனின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. 1971 ஒகஸ்ட் 15ல் சுதந்திரமடைந்தது.

**பொருளாதாரம்:**

மரபு வழித் தொழில்களான கால்நடை வளர்ப்பு, விவசாயம், மீன்பிடித்தல் ஆகியன இன்றும் பின்பற்றப்பட்டாலும், பல நவீன தொழில்களும் வளர்ந்துள்ளன. நாட்டின் பொருளாதாரத்தில் எண்ணெய் முக்கிய பங்கு வகிக்கிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.12.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 221
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 219

பரிசுக்குரியவர்:
நிரோகிஷன் இராஜமோகன்,
கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.ஆர்.ஹஸ்மத் பானு, க/ஜமாலியா மு.ம.வி., படகொள்ளாதெனிய, கண்டி. | பத்மா சிறீஸ்கந்தராஜா, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை. |
| நிவேதிகா மனோகர், சைவ மங்கையர்க்கழகம், கொழும்பு-6. | எம்.பைசல், பதுரியா மத்திய கல்லூரி, மாவனல்லை. |
| எஸ்.மதுரன், தமிழ் ம.ம.வித்தியாலயம், வவுனியா. | அம்பிகா செல்வநாயகம், விஹாரமகாதேவி மகளிர் வித்தியாலயம், கண்டி. |
| எஸ்.செபதீபன், புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. | எம்.சதீஷன், கடவளை த.ம.வி, கினிகத்தேனை. |
| ஆர்.ஜேசுதாஸ், ஆரா/உ.த.ம.வி., உடப்பு. | ஆர்.உம்மு குல்தூம், மட்/றகுமானியா மகா வித்தியாலயம், ஏறாவூர். |


## கண்டு பிடிப்புக்கள்



சாதாரண இறப்பர் கடுங்குளிரால் விரிசல் அடைகிறது. இதே போல் வெப்பத்தால் உருகிப்போகிறது. ஒருநாள் குட்இயர் என்பவர், இறப்பரை அடுப்பின் மீது இருந்த காந்தத்தின் மேல் போட்டு விட்டார். அப்போதும் இறப்பர் உருகவில்லை. மாறாக இறப்பர் கெட்டியாகிவிட்டது.

இதன் பின்புதான் வாகன டயர்களுக்குப் பயன்படுத்தும் கெட்டியான இறப்பர் கண்டு பிடிக்கப்பட்டது.

☆☆☆



இங்கிலாந்தில் உள்ள 'பிரிக்ஷையர்' நகரின் கடதாசித் தொழிற்சாலையில் நடந்த நிகழ்ச்சி இது. அந்த தொழிற்சாலையில் உள்ள ஒரு தொழிலாளியின் கவனக் குறைவால் சரியான முறையில் அமையாத கடதாசிகள் தயாராகிவிட்டன.

இந்தக் கடதாசிகளை வீணடிக்காமல், சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தலாம் என்று நினைத்தார் கடதாசித் தொழிற்சாலை முதலாளி. அந்தத் தாள்களில் பேனாவால் எழுதிப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! அந்த தாள், மை முழுவதையும் உறிஞ்சிக் கொண்டது.

இந்த நிகழ்ச்சியே மை உறிஞ்சும் தாள் கண்டுபிடிப்பதற்குக் காரணமாய் அமைந்தது.

## சில்வர் எறும்புகள்



மத்திய சஹாரா பாலைவனத்தில் வசிக்கும் எறும்புகள்தான் இந்த சில்வர் எறும்புகள். எறும்புகளிலே அதிவேகமாக ஓடக் கூடியது. இவற்றின் கால்கள் மிகவும் நீளமானவை.

இவை நடுப்பகலில் 46 பாகை சென்டிகிரேட் வெப்பநிலை இருக்கும் போது தங்களது வேட்டையை ஆரம்பிக்கும். அந்த நேரத்தில் கடும் வெப்பத்தால் செத்துமடியும் விலங்குகளைத் தேடிப்பிடிப்பதற்காகவே இவை செல்லும். அத்துடன் இந்த எறும்புகளின் எதிரியான ஒரு வகைப்பல்லிகள் வெப்பம் காரணமாக நடுப்பகலில் வெளியே வருவதில்லை.

ஆனால் சில்வர் எறும்புகள், பாலைவனத்தின் வெப்பநிலை 50 பாகை சென்டிகிரேட்டிற்கு ஏறும்போது தமது வேட்டையை நிறுத்திவிடும்.

## விடுகதைகளும் விடைகளும்

1. விளக்கைச் சுமந்து கொண்டு விடிய விடியப் பறப்பான்.
   அவன் யார்?
2. நன்றிக்கு வால், கோபத்துக்கு வாய்.
   அது என்ன?
3. காலையில் ஓரிடத்திலும், மாலையில் வேறிடத்திலும் இருப்பான்.
   அவன் யார்?
4. ஒற்றைக் காலன், ஆட்டத்தில் கெட்டிக்காரன்.
   அவன் யார்?
5. தீக்குள் புகுந்தாலும் திடமாகவே இருப்பான்.
   அவன் யார்?
6. உருண்டிருக்கும் பாறை மேல் திரண்டிருக்குது கோரைப்புல்.
   அது என்ன?
7. ஒரு நேரம் பருப்பான், ஒரு நேரம் மெலிவான்.
   அவன் யார்?
8. பூப்பது தெரியும், காய்ப்பது தெரியாது.
   அது என்ன?
9. பூப்போல அடியெடுப்பான், புசுபுசு உடம்புக்காரன்.
   அவன் யார்?
10. உயரப் பறக்கும், ஊன்று கோலில் நிற்கும்.
   அது என்ன?

### விடைகள்


1. மின்மினிப் பூச்சி 2. நாய்
3. சூரியன் 4. பம்பரம்
5. செங்கல் 6. தலைமுடி
7. சந்திரன் 8. நிலக்கடலை
9. பூனை 10. கொடி.

தொகுப்பு: செல்வி.எஸ்.றிஸ்மியா

## சின்னச் சின்னச் செய்திகள்

* பெல்ஜியம், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தேர்தலின்போது வாக்களிக்காதவர்களுக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது.
* நதிகளின் நகரம் என்றழைக்கப்படும் நகரம், ஜப்பான் நாட்டிலுள்ள ஹிரோஷிமா ஆகும். இந்த நகரில் 5 நதிகள் ஓடுகின்றன.
* காளான் ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே முதலிடத்தில் உள்ள நாடு தாய்வான்.
* கிரேக்க நாட்டின் தேசிய கீதத்தில் 128 வரிகள் உள்ளன. உலகிலேயே மிகப்பெரிய தேசிய கீதம் இதுதான்.

## தாகூர்



இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றியவர் ரவீந்திரநாத் தாகூர் என்பது எல்லாருக்கும் தெரியும். 1861 முதல் 1941 வரை வாழ்ந்த தாகூர் பற்றிய மேலும் சில தகவல்கள் இதோ:

ரவீந்திரநாத் தாகூர் உருவாக்கிய கல்வி நிலையங்கள்: சாந்தி நிகேதன், ஸ்ரீநிகேதன், விஸ்வபாரதி நிகேதன் ஆகியவை.

1890ல் சிறந்த பள்ளியாகத் தோற்றுவிக்கப்பட்ட விஸ்வபாரதி நிகேதன், 1992ல் உலகப் புகழ் பெற்ற விஸ்வபாரதி பல்கலைக்கழகமாக விரிவாக்கப்பட்டது.

ரவீந்திரநாத் தாகூர் தனது கீதாஞ்சலி கவிதைக்காக 1913ல் நோபல் பரிசைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.


படிப்பகம்

www.padippakam.com

## வாரம் ஒரு கிரைம் கதை

# ஒரு நிழல் நிஜம்

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்



நிகிலா அந்த மின்விசிறியின் மையத்திலிருந்த, சேலையில் தூக்கிட்டுக் கொண்டு ஒரு நேர்க்கோடு மாதிரி தொங்கியபடி தெரிய, ஹாலில் காக்கி யூனிஃபார்ம்களும், ஃபாரன்ஸிக் துறை ஆட்களும் மௌனமாய் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பக்கத்து வீட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒருவரை, இன்ஸ்பெக்டர் விசாரித்துக் கொண்டிருந்தார்.

"நிகிலாவுக்கு என்ன வேலை...?"

"ஸார் நிகிலா விளம்பரப் படங்களில் நடிக்கிற ஒரு ஆர்ட்டிஸ்ட். நிறைய விளம்பரப் படங்களில் ஆக்ட் பண்ணியிருக்காங்க...."

"இந்த வீட்ல நிகிலாவைத் தவிர வேற யார் யாரெல்லாம் இருக்காங்க...?"

"வேலைக்காரியைத் தவிர வேற யாரையும் நான் பார்த்தது கிடையாது ஸார்..."

"பாடியை முதல் முதலா பார்த்தது நீங்கதானே?"

"ஆமா ஸார்....!"

"எதுக்காக இவ்வளவு காலை நேரத்துல நிகிலாவோட வீட்டுக்கு நீங்க வந்தீங்க?"

"என்னோட வீட்டு டெலிஃபோன் அவுட் ஆஃப் ஆர்டர் ஸார். அதான் ஒரு ஃபோன் பண்ணிக்கலாம்னு நிகிலா வீட்டுக்கு வந்தேன். காலிங் பெல் கொடுத்துப் பார்த்தேன். கதவு திறக்கவே இல்லை. சந்தேகப்பட்டு பங்களாவோட பக்கவாட்டுக்குப் போய், ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தேன். நிகிலா தூக்குல தொங்கிட்டிருந்தாங்க..."

"நிகிலாவுக்கு இதே ஊர்தானா...?"

"தெரியாது ஸார்...."

"இந்த வீட்டுக்கு குடி வந்து எவ்வளவு வருஷம் இருக்கும்?"

"ரெண்டு வருஷம்..."

"ஆண்கள் யாராவது வந்துட்டு போறது உண்டா...?"

"நான் பார்த்தது இல்ல ஸார்..."

இன்ஸ்பெக்டர் விசாரிப்பதை தற்காலிகமாய் நிறுத்திவிட்டு, கீழே இறக்கப்பட்ட நிகிலாவின் உடல் அருகே வந்து நின்றார். வரவழைக்கப்பட்ட டாக்டர் அவளை தீவிரமாய் பரிசோதித்துப் பார்த்துவிட்டு இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

"நிகிலா மூணு மாச கர்ப்பமா இருந்திருக்காங்க..."

இன்ஸ்பெக்டர் தன் நெற்றியைக் கீறிக் கொண்டார். "தற்கொலைக்கான காரணம் கிடைச்சாச்சு... இனிமே ஆள் யார்ன்னு தெரியணும்..."

டாக்டர் புன்னகைத்தார்.

"இதை தற்கொலைன்னு உடனே முடிவு கட்டிடாதீங்க இன்ஸ்பெக்டர். இது மர்டராக இருக்கவும் வாய்ப்பு இருக்கு...."

"எப்படி சொல்றீங்க டாக்டர்....?"

"தேர் ஆர் சிம்ப்டம்ஸ்... கழுத்துக்குக்கிட்ட பாருங்க ஒரு காயம். ஏதோ ஆயுதம் கீறின மாதிரி இருக்கு.... நிகிலாவோட உயிர் பிரியறதுக்கு முந்தி கழுத்தை இறுக்கி அதுக்கப்புறமா கயித்தை மாட்டி தொங்க விட்டிருக்காங்க..."

டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே- கான்ஸ்டபிள் ஒருவர் பக்கத்தில் வந்து நின்றார்.

"ஸார்...!"

"என்ன...?"

"பெட்ரூம் தலையணைக்குக் கீழே இந்த லெட்டர் இருந்தது..."

அதை இன்ஸ்பெக்டர் வாங்கிப் பிரித்துப் பார்த்தார். சாய்வாய் எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்கள். படிக்க ஆரம்பித்தார்.

*காவல் துறை ஆணையாளர் அவர்களுக்கு,*

*நிகிலா எழுதிக் கொண்டது. நான் வாழ்ந்த நாட்களில் சந்தோஷ நாட்கள் வெகு குறைவு. இனி வரப்போகும் நாட்களும் சந்தோஷமாக இருக்காது என்றே நினைக்கிறேன். நான் ஒருவரைக் காதலித்தேன். அவர் ஒரு பெரிய புள்ளியின் மகன். என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்குக் கொடுத்துவிட்டு- பின் அதைக் காற்றில் பறக்கவிட்டார். கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தியபோது என்னைக் கொன்று விடுவதாய் மிரட்டினார். என் உயிருக்கு காவல் துறைதான் பாதுகாப்பு தரவேண்டும். என்னைக் கைவிட்ட புண்ணியாத்மா வேறு யாருமில்லை. அறநிலைய துறை அமைச்சர் தணிகாசலத்தின் மகன் ராஜவேல். இந்த விஷயத்தில் நீங்கள் நடவடிக்கை எடுத்து எனக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டுகிறேன்.*

*இப்படிக்கு,*
*நிகிலா.*

இன்ஸ்பெக்டர் கடிதத்தைப் படித்துவிட்டு, நிமிர காமிரா கோணம் மாறி ஜூம் லென்ஸின் உதவியோடு நிகிலாவை நெருங்கி அவளுடைய முகத்தை க்ளோஸப்பில் காட்டியது.

காட்சி ஸ்லோமோஷனில் மறைய அரங்கு பூராவும் கைதட்டல் எழுந்தது.

கைத்தட்டல் ஓய்ந்ததும் மைக்கில் குரல் கேட்டது.

"சிறந்த துணை நடிகைக்கான சினிஃபேர் பரிசு இந்த வருடம் சித்ரப்ரியாவுக்கு வழங்கப்படுகிறது. 'எரி நட்சத்திரங்கள்' என்ற படத்தில் நிகிலா என்னும் கேரக்டரில் நடித்து பெரும் பாராட்டுதலைப் பெற்ற சித்ரப்ரியாவுக்கு இந்தப் பரிசை மலையாள திரைப்பட டைரக்டர் கல்பாத்தி வழங்குவார். குமாரி சித்ரப்ரியாவை மேடைக்கு வரும்படி அழைக்கிறோம்....!"

மைக்கில் அந்த அறிவிப்பைத் தொடர்ந்து அரங்கத்தின் இரண்டாம் நாற்காலி வரிசையிலிருந்து அந்த அழகான சித்ரப்ரியா எழுந்தாள். ரோஜா நிறப்பட்டுப் புடவையில் தகதகத்த சித்ரப்ரியா அரங்கத்தின் கரகோஷத்தை ஏற்றுக்கொண்டு மெதுவாய் மேடையை நோக்கி நடந்தாள்.

அறிவிப்பாளர் மைக்கில் சொல்லிக் கொண்டிருந்தார், "குமாரி சித்ரப்ரியா அடுத்த வருடமும் சிறந்த நடிகைக்கான பரிசை வாங்க வேண்டும் என்று சினி ஃபேர் விரும்புகிறது. அவருக்கு சினிஃபேரின் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்....!"

கரகோஷம் அதிகப் பட்டது.

சித்ரப்ரியா ஒரு பெரிய புன்னகையோடு மேடை ஏறினாள். ஃபோகஸ் லைட் ஒரு வெளிச்ச வட்டத்தை உற்பத்தி செய்து அவள் மேல் கவிழ்த்தது.

மலையாள டைரக்டர் கல்பாத்தி கையில் வெள்ளியிலான ஒரு மயில் உருவத்தை வைத்துக் கொண்டு காத்திருந்தார். சித்ரப்ரியா நெருங்கியதும், அவளுடைய கையைப் பற்றி குலுக்கி வாழ்த்துக்களைச் சொல்லி விட்டு மயில் உருவத்தைக் கொடுத்தார்.

கரகோஷம் மறுபடியும் எழுந்து ஓய்ந்தது.

சித்ரப்ரியா மைக்குக்கு முன்பாய் வந்து நின்றாள். அவளிடம் விழாவைத் தொகுத்து வழங்கும் பெண் கேள்விகளைக் கேட்டாள்.

"சித்ரப்ரியா! இந்த சினிஃபேர் விருதை நீங்க எதிர்பார்த்தீங்களா?"

"எதிர்பார்க்கலை...."

"இந்தப் பரிசு கிடைச்சப்ப உங்க மனநிலை எப்படி இருந்தது?"

சித்ரப்ரியா சிரித்தாள்.

"ஏறக்குறைய வானத்தில் பறக்கிற உணர்வு...!"

"இந்த சினிஃபேர் அவார்டைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"பெருமைக்குரிய விருது..."

"அடுத்த வருடம் சிறந்த நடிகைக்கான சினிஃபேர் அவார்ட் வாங்குவீர்களா....?"

"மாட்டேன்...!"

அரங்கில் சலசலப்பு.

கேள்வி தொடர்ந்தது.

"ஏன்...?"

"இனிமேல் நான் நடிக்கப்போவதில்லை. எரி நட்சத்திரங்கள்தான் நான் நடித்த கடைசிப்படம்..."

"ஏன் இனி நடிக்கமாட்டீர்கள்? கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்களா?"

"இல்லை..."

"பின்னே...?"

"நான் இந்த மேடையில் ஒரு உண்மையைச் சொல்லலாமா...?"

"சொல்லுங்கள்....!"

"நான் கடைசியாக நடித்த 'எரி நட்சத்திரங்கள்' படத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட நிகிலா பாத்திரத்தோட நிலைமைதான் எனக்கும் இப்போது ஏற்பட்டுள்ளது...."

அரங்கம் ஒரு மோசமான நிசப்தத்துக்குப் போக- சித்ரப்ரியா மைக்கில்- குரலைத் தொடர்ந்தாள்.

"நான் இப்போது மூணு மாச கர்ப்பம். இந்த கர்ப்பத்துக்குக் காரணம் பிரபல தமிழ் டைரக்டர்களில் ஒருத்தருதான். என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக சொன்னவர், இப்போது கல்யாணம் என்ற வார்த்தையை எடுத்தாலே கொலை செய்யப்போவதாக மிரட்டுகிறார். நான் அவருடைய மனதைக் காதலித்தேன். அவரோ என் உடம்பை மட்டும் காதலித்திருக்கிறார் என்கிற விஷயம் இப்போதுதான் புரிகிறது. நான் ஒரு நடிகைதான். ஆனால் அவரைக் காதலிக்கும்போது நான் நடிக்கவில்லை. அவர் நடித்திருக்கிறார் என்கிற விஷயம் என் மன நிம்மதியைக் குலைத்துவிட்டது. அந்த டைரக்டர் யார் என்று காட்டிக் கொடுக்க நான் விரும்பவில்லை. இந்த மேடையில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். காதலிப்பவர்கள் யாரோட இருந்தாலும் சரி உண்மையாக காதலியுங்கள். உடம்புகளை பரஸ்பரம் தொட்டுக் கொள்வதற்காக மட்டும் காதலிக்காதீர்கள். அது விபச்சாரத்தைவிட மோசமானது. காதலுக்காக உயிரை விடுங்கள், தப்பில்லை. ஆனால் உயிர் வாழ்வதற்காக காதலை சாகடித்து விடாதீர்கள். நான் தோற்றுவிட்ட காதலை மனதில் வைத்துக் கொண்டு உயிர்வாழ விரும்பவில்லை. இந்த விருது பெற்ற மகிழ்ச்சியோடு மரணத்தை தழுவிக் கொள்கிறேன்."

சொன்ன சித்ரப்ரியா-

அரங்கம் முழுவதும் திகைத்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இடது கை விரல்களில் மறைத்து வைத்திருந்த அந்தச் சிறிய சயனைட் குப்பியை கடித்து- அவசர அவசரமாய் விழுங்கினாள்.


சயனைட் உடனடியாய் எச்சிலில் கலந்து தொண்டையில் இறங்கி இரத்தத்தில் சங்கமித்து- உயிர் ஜன்னலை அடைக்க ஆரம்பித்தது. (முற்றும்)


**கிரைம் தொடராக வந்தது உடைந்த இரவு. அடுத்ததையும் தொடராகத் தராமல் ஒரு வித்தியாசத்திற்காக சில வாரங்களுக்கு வாரம் ஒரு கிரைம்கதையாகத் தந்தால் என்ன? அந்த யோசனையின் விளைவே இந்தக் கதை! அசத்தலான– படு சூடான கதைகள் இடம்பெறவுள்ளன. வாரம் தவறாமல் படித்து வாருங்கள்.**



## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: என்.பிரபாகரன்,
வயது: 24
முகவரி: 183/6, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எஸ்.உமா,
வயது: 23
முகவரி: 21/1, தெ.பள்ளம்சேனை, கொச்சிக்கடை.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல்.

பெயர்: ஏ.தமிழ்ச்செல்வன்.
வயது: 27
முகவரி: P.O.BOX-1424, CODE NO-22015, SALMIYA, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.அஜ்வி,
வயது: 23
முகவரி: 208/ஏ, பிரதான வீதி, பெரிய குடியிருப்பு, கல்பிட்டி.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல்.

பெயர்: எம்.நிசாம்,
வயது: 27
முகவரி: 25/42ஏ டிக்கோயா வீதி, ஹட்டன்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஐ.மஹ்பூப்,
வயது: 22
முகவரி: P.O.BOX-1768, DOHA, QATAR.
பொழுது போக்கு: ரீ.வீ., கிரிக்கெட்.

பெயர்: ஏ.ஹலிம்,
வயது: 25
முகவரி: 21/ஏ, நக்ஸ்பான, மல்வானை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம்.றிஸ்வி,
வயது: 29
முகவரி: 1/12, கெத்தாராம வீதி, களுத்துறை தெற்கு.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஏ.விஜயராஜா,
வயது: 16
முகவரி: 3ம் ஒழுங்கை, தாண்டிக்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்.

பெயர்: பி.சுப்ரமணியம்,
வயது: 30
முகவரி: 78, என்.ஆர்.பி., பிரதான வீதி, மாத்தளை.
பொழுது போக்கு: பேனா நட்பு, வானொலி.

பெயர்: ஏ.சுபாஷ்,
வயது: 33
முகவரி: MAIL BOX NO-828, ST-LAURENT, QUEBEG, H4L 4W2, CANADA.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எம்.நஸீர்,
வயது: 22
முகவரி: 200/ஏ, யுனிட்/8, முள்ளிப்பொத்தானை.
பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.



படிப்பகம்

www.padippakam.com




6

> "சினிமால மட்டும் இல்லை, இப்ப எல்லா ஃபீல்டுலயும் கொஞ்சம் 'மொராலிட்டி' குறைஞ்சுதான் இருக்கு. என்ன? எங்க ஃபீல்டுல நியூஸ் வெளியே வந்தா மட்டும் பேனால பெருசா வர்றது. அதனால எல்லாரும் சினிமா ஃபீல்டுல 'மொராலிட்டி' போயிருச்சுன்னு சொல்றாங்க. நாட்டுல எத்தனை பொண்டாட்டி புருஷனுக்குத் துரோகம் பண்றா! எல்லாப் பக்கமும் இது இருக்கு!"
>
> ஜெமினி கணேசன் ஒரு பேட்டியில் 'ஆனந்த விகடன்'-23.03.97 இதழில்

## பட்டுக்கோட்டை பிரபாகர்

மதுமிதா தனது நகங்களில் பூசியிருந்த பிங்க் நிற பாலீஷை ரிமூவர் கொண்டு துடைத்தபடி நிமிர்ந்து எதிரே நின்ற இனியாவைப் பார்த்தாள்.

"கதவைச் சாத்திவிட்டு வா இனியா!" என்றாள் மதுமிதா.

"எதுக்கு?" என்றாள் இனியா.

"எல்லாத்துக்கும் காரணம் கேட்கணுமா?"

அந்த அதட்டலில் அவசரமாகச் சென்று, அறையின் கதவைத் தாளிட்டுவிட்டு வந்தாள்.

'நம்ம வீட்டுக்குள்ளே வேறு யாரு இருக்காங்க? அப்படி என்ன ரகசியம் பேசப் போறோம்?' தனக்குள்ளே முனகிக் கொண்டாள்.

"ஹாஸ்டல்லயே வளர்ந்துட்டே இனியா நீ! உனக்கு அனுபவம் பத்தாது. வீட்டுக்குள்வே நெருக்கமா இருக்க வேண்டியவங்களே, வேறு யாரோ மாதிரி நடந்துக்கற கொடுமை எல்லாம் நீ அனுபவிச்சுப் பார்க்கலை, உட்காரு."

அமைதியாக அமர்ந்தாள். தன் அக்காவைப் பார்த்தாள்.

'அப்படி என்ன பிரமாதமான அழகு? கொஞ்சம் சிவப்பு. அகலக் கண்கள். இணைக்கப்பட்ட இமைகள். செதுக்கின புருவங்கள். உப்பல் கன்னங்கள். சராசரி அழகுதான். தெருவுக்கு இரண்டு பெண்கள் இந்த மாதிரி இருப்பார்கள். பிறகு ஏன் உலகம் இவளைக் கொண்டாடுகிறது? 'என் தேவதையே' என்று துவங்கி ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கடிதம் எழுதுவது எப்படி? பத்திரிகை ஆசாமிகள்கூட கேள்வி-பதில் பகுதிகளில் மதுமிதாவை அழகுப் பெட்டகம், வரம் வாங்கி வந்தவள், அது இது என்று புகழ்வது எதனால்?

அதிர்ஷ்டம்! அது ஒன்றுதான் காரணம். இதோ.. வீட்டில் எந்த ஒப்பனையும் இல்லாமல் உட்கார்ந்திருக்கும் இந்த நிலையில், ஒரு புகைப்படம் எடுத்து வெளியிட வேண்டும். அப்போதும் ரசிப்பார்களா என்ன?'

இனியா இந்த ரீதியில் யோசித்துக் கொண்டிருக்க...

"என்ன யோசிக்கிறே நீ?" என்றாள் மதுமிதா.

"சொல்லமாட்டேன்"

"ஏன்?"

"சொன்னா உனக்குக் கோபம் வரும்"

"பரவாயில்லை சொல்லு"

"என்ன பெரிய அழகி நீன்னு ஊர்ல, தலையில தூக்கி வெச்சிக்கிட்டு ஆடறாங்கன்னு யோசிச்சுப் பார்த்தேன்."

மதுமிதாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

அக்கா இதற்குச் சிரிப்பாள் என்று தங்கை எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"யோசிச்சதுல விடை கிடைச்சுதா?"

"ம்..."

"என்ன அது?"

"எல்லாம் நேரம்தான்! ஜனங்களுக்கு ஒவ்வொரு சமயத்துல ஒவ்வொருத்தரை உக்கார வெச்சி ஆராதனை செய்யணும். இந்த பீரியட்ல அதிர்ஷ்டமாலை உன் கழுத்தில விழுந்திருக்கு... தட்ஸ் ஆல்"

மதுமிதா மறுபடி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறே?"

"உனக்கு இப்படியெல்லாம்கூட யோசிக்கத் தெரிஞ்சிருக்கேன்னு நினைக்கறப்ப சிரிப்புதான் வந்துச்சு." என்றவளின் முகம் சட்டென்று கடுமையாகி, "ஆகாஷோட எந்த அளவுக்கு உனக்குப் பழக்கம்?" என்றாள்.

"என்னது திருப்பித் திருப்பி அதையே கேட்டுக்கிட்டிருக்கே! ஆகாஷ் என் ஃப்ரெண்ட்ஸ்ல ஒருத்தன். தட்ஸ் ஆல்."

"ஐ... ஸீ..."

"ஏதுக்குக் கேட்டே?"

"அக்கறை!"

"என் மேலயா? உனக்கா? நான் நம்பணுமா?"

"உன் மேல எனக்கு அக்கறை இல்லையா?"

"இருந்தா என் விருப்பத்துக்கு மரியாதை கொடுத்திருப்பே"

மதுமிதா படபடப்பாகப் பேசும் இனியை யாவை சில வினாடிகள் கூர்ந்து பார்த்தாள். கைகளைக் கட்டிக்கொண்டாள்.

"சரிம்மா, சொல்லு உன் விருப்பம் என்ன?"

"நிச்சயமா படிப்பு என் விருப்பம் இல்லை!"

"ஏன்?"

"நான் கம்பியூட்டர் இன்ஜினியராகி என்ன கிழிக்கப் போறேன்? எனக்கு என்ன சொத்து இல்லையா? வசதி இல்லையா?"

"அப்படியா? சொத்து இருக்கா உனக்கு?"

"ஏன் இல்லை? இந்த வீடு அம்மா பேர்ல தானே இருக்கு? எனக்கு சரிபாதி உரிமை இருக்கே!"

"வீடு அம்மா பேர்ல இருக்கு. சரி, வீட்டுப்பத்திரம் எங்க இருக்குன்னு தெரியுமா உனக்கு?"

இனியா அதிர்ச்சியாகப் பார்த்தாள்.

"என்னக்கா சொல்றே?"

"போ! போய் அம்மாகிட்டே விபரம் கேட்டுட்டு வா!"

"நீ சொல்லு! இந்த வீடு இப்ப நம்மளோடது இல்லையா?"

"அடமானத்துல இருக்கு"

"ஏன்?"

"கோடிக்கணக்குல ஃபைனான்ஸ் பண்றவன் சும்மா தூக்கிக் கொடுப்பானா இனியா?"

"எதுக்கு அவ்வளவு கடன் வாங்கியிருக்கோம்...?"

"உங்கம்மா சினிமா எடுத்துக்கிட்டிருக்கிறது தெரியாத மாதிரிப் பேசறியே?"

"அதுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் கொண்டாந்து அட்வான்ஸ் கொடுக்க மாட்டாங்களா?"

"இனியா அரைவேக்காட்டுத்தனமா எதையாச்சும் தெரிஞ்சு வச்சுக்கிட்டு ஏதேதோ கற்பனையில் இருக்காதே!"

"சரி.. அது எப்படியோ இருக்கட்டும். உன்னை நான் நேரடியாகவே ஒண்ணு கேட்கட்டுமா?"

"கேளு. அதுக்கு முன்னாடி நீயா கேக்கறியா இல்லை யாராச்சும் சொல்லிக் கொடுத்துக் கேக்கறியான்னு விபரம் சொல்லிடு."

"எனக்கு யார் என்ன சொல்லிக் கொடுக்கணும்?"

"இந்தத் திமிர்தான் வேணாம்னு சொல்றேன். சரி கேளு"

"நான் நடிகையாகணும்னு ஆசைப்படறேன். அதை நீ ஏன் தடுக்கறே?"

"அதைவிட நல்ல வழியை உனக்கு அமைச்சுத் தரணுங்கறது தான் என் ஆசை."

"பொய்! உனக்குப் பயம்! நான் உள்ளே வந்திட்டா உன் மார்க்கெட் அவுட்டாயிடும்னு கவலை! நான் உன்னை முந்திக்கிட்டு மேலே போயிடுவேன்னு பொறாமை. அதானே!?"

"முட்டாள்தனமா பேசாதே!"

"இல்லை, அதான் உண்மை!"

"இப்ப நடிச்சிக்கிட்டிருக்கிற படங்களை முடிச்சிட்டு நான் இந்த இன்டஸ்ட்ரியை விட்டே விலகப்போறேன். அப்படி இருக்கிறப்ப நான் உன்மேல பொறாமைப் படறேன்னு அசட்டுத்தனமா சொல்றியே"

இனியா பேச்சில்லாமல் வெறித்தாள்.



"இன்னிக்கு நீ பேசறது எல்லாமே அதிர்ச்சியா இருக்குக்கா, நிஜமாத்தான் சொல்றியா?"

"ஆமாம். சத்தியம் செஞ்சாத்தான் நம்புவியா? உன் தலைல அடிச்சு சொல்லட்டுமா?"

"வேணாம். நம்பறேன். அப்போ நீ கல்யாணம் பண்ணிக்கப் போறதா பத்திரிகைகள்ல வர்ற விஷயம் பப்ளிசிடிக்காக செஞ்சது இல்லையா? எல்லாமே உண்மையா?"

"ஆமாம் இனியா தள்ளி நின்னு பார்க்கிறப்ப எந்த ஒரு விஷயத்திலயும் உள்ள குறைபாடுகள் தெரியாது. தூரத்திலேர்ந்து செடியைப் பார்த்தா ரோஜா மட்டும்தான் கண்ணுக்குத் தெரியும். அதைப் பறிக்கறப்பதான் முள்ளுகுத்தும். எனக்குச் சரியானபடி வழிநடத்த யாரும் இல்லை. உனக்கு நான் இருக்கேன். முழுக்க முழுக்க அனுபவத்தோட நிக்கிறேன். அப்படியும் அழிச்சாட்டியமா பேசினா எப்படி இனியா? தன் தங்கை நல்லா இருக்கக் கூடாதுன்னு எந்த அக்காவாவது நினைப்பாளா? நான் கண்டிப்பா இருக்கிறதும், பேசறதும் உன் நல்லதுக்குத் தானே ஒழிய, உன்னை அடக்கி வெச்சி வளரவிடாம செய்யறதுக்காக இல்லை."

மௌனமாக இருந்தாள் இனியா.

"சரி, உன்னை எதுக்காக வரச் சொன்னேன் தெரியுமா?"

"சொல்லுக்கா"

"நீ அந்த ஆகாஷோட ஊர் சுத்தறதாகவும், படிப்பில கொஞ்சம்கூட அக்கறை காட்டறதில்லைன்னும் எனக்குத் தகவல் வந்திச்சு. அதனாலதான் எச்சரிக்கை பண்றதுக்கும், எடுத்துச் சொல்றதுக்கும் வரச் சொன்னேன். உனக்கு எதிர்காலத்துக்கு உன் படிப்பு மட்டும் தான் கைகொடுக்கணும். நடிப்புங்கறது இந்தக் குடும்பத்தில என்னோட போகட்டும். புரிஞ்சுதா?"

அமைதியாக நிமிர்ந்து பார்த்தாள் இனியா.

"இனியா, நீ நினைக்கிற மாதிரி ஒரு அம்மா நமக்கு அமையலை. அவங்களை எதிர்த்துத் தான் நான் கல்யாணம் பண்ணிக் கப்போறேன். அதுக்கப்புறம் அம்மா நிச்சயமா உன்னை நடிக்க வைக்கத் தீர்மானிப்பாங்க. அப்ப நீ முட்டாள்தனமா ஒத்துக்கக்கூடாது. எக்காரணம் கொண்டும் நடிக்கிற இந்தத் தொழிலுக்கு நான் வரமாட்டேன்னு நீ எனக்கு வாக்கு கொடுக்கணும். கொடுப்பியா?" என்றாள் மதுமிதா.

(தொடரும்)

---

## அனுபவம் புதுமை புதிய பகுதி

**பிரபலங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட சுவாரசியமான அனுபவங்கள் இப்பகுதியில் தொடர்ந்து இடம்பெறவுள்ளன. இம்முறை கவியரசு கண்ணதாசன் வாழ்க்கையில் ஏற்பட்ட சுவையான அனுபவங்கள். அவரது உதவியாளரான இராம. கண்ணப்பன் எழுதியதில் இருந்து......**

கவிஞரது நாற்பத்து எட்டாவது வயதில் அந்தக் கடிதம் வந்தது. மயிலம் கல்லூரியில் புலவருக்குப் படித்துக் கொண்டிருந்த மாணவி ஒருவர் எழுதியிருந்தார்.

கவிஞரது கவிதைகளில் தனக்கெழுந்த சந்தேகங்கள் குறித்து எழுதியிருந்த அந்த மாணவி, 'இந்த ஆண்டு புதுவை கம்பன் விழா கவியரங்கிற்கு தாங்கள் தலைமை தாங்குவதாக அறிகிறேன். அங்கு வரும் தங்களைச் சந்திக்க விரும்புகிறேன். அனுமதி வேண்டும்,' என்று கடிதத்தை முடித்திருந்தார்.

பெண்கள் எழுதும் கடிதங்களுக்கு பெரும்பாலும் கவிஞர் பதில் எழுதுவதில்லை. அதுபோலவே இந்தக் கடிதத்திற்கும் பதில் எழுதப்படவில்லை.

என்றாலும் இந்தச் சந்திப்பு நிகழ்ந்துவிட்டது.

ஆம்: புதுவை கம்பன் விழாவுக்குச் சென்ற நாங்கள் அரசினர் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தோம்.

தன் தோழி ஒருவரின் துணையோடு அங்கு வந்து கவிஞரைச் சந்தித்தார் அந்த மாணவி.

கவிஞரைச் சந்தித்துப் பேச பெண்கள் வந்தால், அந்த இடத்தில் நான் இருக்கமாட்டேன். அவர் 'இரு' என்று சொன்னாலும் நான் இருக்கமாட்டேன். இது.பெண்களிடம் எனக்கிருந்த கூச்ச சுபாவத்தின் விளைவு.

அன்றும் அவர்கள் இருவரையும் கவிஞரோடு பேச விட்டுவிட்டு நான் எனது அறைக்கு வந்து விட்டேன்.

சுமார் ஒரு மணி நேரம்வரை அவர்களிருவரும் கவிஞரோடு உரையாடி விட்டுப் பிரிந்து சென்றனர்.

அதுவரையிலும் எந்த அந்தரங்கத்தையும் மறைத்தறியாத கவிஞர், இந்த விஷயத்தையும் என்னிடம் மறைக்கவில்லை.

அந்த மாணவியின் அறிவுக் கூர்மையை வியந்தார்: அவரது முகக்களையே மங்கலமானது என்று நயந்தார். 'இப்படி ஒரு பெண்ணை நான் சந்தித்ததே இல்லை' என்று புகழ்ந்தார். 'எதற்கும் கொடுப்பினை வேண்டும்' என்று முடித்தார்.

தன்னைச் சந்திக்க வரும் எந்தக் குடும்பத்துப் பெண்ணையும் கவிஞர் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. அவர்களது வயது கருதி தாயாகவோ, தமக்கையாகவோ, தங்கையாகவோ நினைப்பாரேயன்றி அந்தக் கண்ணியம் மிக்க கனவானின் மனதில் வேறுவிதமான விகற்பங்கள் தோன்றியதாக யாரும் நாக்கில் பல்படக் கூற முடியாது.

எனவே அவரது ஆதங்கமும் மனக்கிடக்கையும் எனக்குப் புரியாது போய்விட்டது.

அப்போதே ஒரு பாடலுக்கான பல்லவி உருவாகி விட்டது என்பதை நான் அறியாது இருந்துவிட்டேன்.

வாரம் இருமுறை அந்த மாணவி தொடர்ந்து கடிதம் எழுதுவார். அதற்கான பதிலை தன் கைப்படவே அவர் எழுதுவார். எதையும் சொல்லி எழுதச் செய்யும் கவிஞரின் இந்தச் செய்கை எனக்கு வியப்பாகவே இருந்தது.

நாளடைவில் சந்தேகம் தலை தூக்கியது. இதை எப்படித் தீர்த்துக் கொள்வது? யாரிடம் கேட்பது? அவரிடமே கேட்பது மரியாதையாகாதே என்றெல்லாம் குழம்பித் தவித்தேன்.

அந்த மாணவியிடமிருந்து வரும் கடிதங்களைக் கொடுக்கும் போதெல்லாம், அவரைப் பற்றி அவர் பேசும்போதெல்லாம் எனது முகம் கோபத்தால் சிவப்பதையும், அவரது பேச்சைக் கவனியாது இருப்பதையும் அவர் கண்டு கொண்டார்.

ஆனாலும், வெளிப்படையாக அது குறித்து எதுவும் சொல்லவில்லை.

அந்த சூழலை, 'ரிஷிமூலம்' படம் ஏற்படுத்திக் கொடுத்தது.

*'ஐம்பதிலும் ஆசை வரும்*
*ஆசையுடன் பாசம் வரும்–*
*இதில்*
*அந்தரங்கம்*
*கிடையாதம்மா*
*நாள் செல்ல நாள்செல்ல*
*சுகம்தானம்மா!'*

எந்த வயதிலும் ஒருவனுக்குக் காதல் வரும். எனக்கு இந்த வயதில் வந்திருக்கிறது? இதில் மறைப்பதற்கோ ஒளிப்பதற்கோ ஒன்றுமில்லை. சுகமே பிரதானம் என்று எனக்கு அறிவுறுத்திவிட்டார். அதுமட்டுமல்ல: பாடலில் இறுதிச் சரணத்தில்,

*'தெய்வத்தால் உருவான*
*பந்தம்*
*விலகாது மகராணியே'*

– என்று தன் முடிவையும் உறுதிப்படுத்திவிட்டார்.



## அவள் இல்லை என்றால் நான் வெறும் கூடு!

இருமனைவியரோடு இல்லறம் நடத்தி, பதினான்கு குழந்தைகளைப் பேறாகப் பெற்று, ஐந்து மகள்களுக்கும், மூன்று மகன்களுக்கும் மணவினைகளை முடித்து, பேரன்- பேத்திகளைக் கண்ட கவிஞர் செய்து கொண்ட மூன்றாவது ஏற்பாடு, குடும்பத்தில் பெரும் கொதிப்பை உண்டாக்கியது.

குடும்பத்தினரின் அன்பைக் குறைவறப் பெற்ற பாக்கியவானாக விளங்கிய கவிஞர், அதை இழப்பதையும் பொருட்படுத்தவில்லை.

மூன்றாவது வீட்டிற்கு முன்பணம் கொடுத்த போது, தனது நிம்மதிக்கு இது அச்சாரம் என்று கருதினாரே தவிர, அதை இழப்பதற்குத் தருகிறோம் என்று கருதவில்லை.

ஆயிரங் குடும்பங்களுக்கு அறிவுரை கூறும் தகுதியுள்ள அந்த அனுபவஞான சூரியனுக்கு, அப்போது தடுத்துரைக்கும் வயதுள்ள நண்பர்கள் யாரும் இல்லை.

அப்படிக்கூறும் தகுதியுள்ள நண்பர்களும் தொலைதூரத்தில் இருந்தார்கள். காரியம் முடிந்து காலங்கடந்த பின்னரே அவர்களால் கவிஞரை அணுகமுடிந்தது.

கவிஞரது பொன்விழா துவக்க விழாவை கோவையிலும், மதுரையிலும், தலைநகரிலும் நண்பர்கள் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்த ஆண்டில், கவிஞர் தன் குடும்பத்தின் விலங்கப் பத்திரமானார். தொல்லைகளுக்கு உயில் எழுதினார்.

அக்காலத்தில் கவிஞரைச் சந்திக்கவரும் நெருங்கிய நண்பர்களும், மற்றவர்களும் அவரது வயதையும் உடல் பலவீனத்தையும் சுட்டிக்காட்டியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களது கூற்றுக்களை கவிஞர் முகம் கோணாது கேட்டுக்கொண்டிருப்பாரே தவிர மறுத்துப்பேச மாட்டார்.

காரணம், அவை ஒரு திரைப்படப் பாடலுக்கான கருவாகி விடும். ஒருவருக்கு மட்டும் சொல்லி விளக்குவதை விட உலகத்திற்கே அதைச் சொல்லி நியாயப்படுத்தி விடலாமல்லவா!

வயதானால் வாலிபம் தொலைந்துவிடும் என்பது பெரும்பான்மையோருக்குப் பொருந்துவதாக இருக்கலாம். ஆனால், கவிஞரைப் போன்ற அதிசயப் பிறவிகளுக்குப் பொருந்துவதில்லை.

வயதால் கவிஞர் பெரியவரானாலும், உள்ளத்தால், உணர்ச்சியால் அவர் என்றும் பதினாறாய் இருந்தார். அவரது கவிதைகளில் பொங்கித் ததும்பும் உணர்ச்சிகள் அவரது உள்ளத்திலும் உடலிலும் குறைவுறாதிருந்தது.

'பாட்டும் பரதமும்' என்றொரு படம். சிவாஜிகணேசன் நடித்தது. சற்று வயதான நாட்டியக் கலைஞர் பாத்திரம். அவரிடம் நாட்டியம் பயில்வதற்காக ஓர் இளம் பெண் வருகிறாள். நாட்டியம் பயில வந்தவள் காதலும் பயில்கிறாள். நாளடைவில் இருவரும் உயிரும், உடலுமாகி விடுகிறார்கள்.

இருவரும் பிரிய நேர்கிறது. கலைஞன் ஆத்ம விசாரணை செய்கிறான்.

இதுதான் பாடலுக்கான சூழ்நிலை என்று நினைவு.

'வயதொரு பலவீனமல்ல' என்ற தன் னுணர்வை வடித்து வைக்க கவிஞருக்குத் தளம் அமைகிறது.

*கற்பனைக்குமேனி தந்து*
*கால் சலங்கை போட்டு*
*விட்டேன்*
*கால்சலங்கை போன இடம்*
*கடவுளுக்கும் தோன்ற*
*வில்லை!*
*தெய்வத்தின்தேரெடுத்து*
*தேவியைத் தேடு*
*தேவிக்குத் தூது சொல்ல*
*தென்றலே ஓடு!*
*ஆவிக்குள் ஆவி ஆனந்த*
*ஏடு*
*–அவளில்லை என்றால்*
*நான் வெறும் கூடு!*
*பார்வைக்குப்போட்டு*
*வைத்தேன்*
*நாளொரு கோடு*
*பாடிப் பறந்ததம்மா*
*இளங்குயில் பேடு!*
*நீர்வற்றிப் போனதென்று*
*நினைவினில் வெடிப்பு*
*நெஞ்சத்தில்*
*தோன்றுதம்மா*
*வசந்தத்தின் துடிப்பு!*
*மாமழை மேகம் இன்று*
*கண்களில் இருப்பு*
*மார்கழிப் பனியன்றோ*
*அவளது சிரிப்பு!*

..............................
..............................
..............................
..............................

*நாயகியே எனது*
*காவிய எல்லை*
*நரை விழுந்தாலும்*
*நெஞ்சில்*
*திரை விழவில்லை!*

இரத்தம் வற்றிப் போனவன் என்று என்னை ஏளனமாய் நினைப்பவர்களே, என் நெஞ்சத்தில் துடிக்கும் வசந்தத்தை அறியமாட்டீர்கள். என்தலையில் நரை வந்து விட்டது என்று கருதுபவர்களே, என் உள்ளத்திலும் உடலிலும் திரை விழவில்லை என்பதை உணரமாட்டீர்கள்!

இரண்டாவது மூன்றாவது சரணங்களில் மூன்றே வரிகளில் தன்னையும், தன் உள்ளக் கிடக்கைகளையும் முத்திரையாக வெளிப்படுத்தினார் கவிஞர். □



படிப்பகம்

www.padippakam.com

# வரவுகளும் செலவுகளும்

**கதைக்கு முன் கொஞ்சம்...**

**இந்நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய வைகள் எத்தனையோ இருந்த பொழுதிலும், ஒவ்வொரு வருடமும் எதுவும் தீர்க்கப்படாமலேயே அடுத்த வருடம் வந்துவிடுகிறது. ஆனாலும் எல்லாம் தீர்க்கப்பட்டதாகவும் யுத்தம் குறைந்ததாகவும் விவாதிக்கப்படுகிறது. தேவையற்ற விவாதங்கள் தொடரும்.**




**அகன் கபிலன்**

## 1993

"சீய்ய்... கையை எடுங்கப்பா... எப்பவும் கையைவைத்துக்கொண்டு... சுத்த மோசமான ஆளப்பா நீங்க.... விடிந்து விட்டது... எழும்பி குளித்துவிட்டு வேலைக்கு போகவேணும்... எழும்புங்க...!"

தீபிகாவின் அதட்டலில் சிறிது பயந்தவனாக கபிலன் சற்றுத் தள்ளிப்படுத்தான். எழும்புவதாய் இல்லை..

"இப்ப எழும்பப் போறீங்களா இல்லையா?" தீபிகா மீண்டும் கோபமாகக்கேட்க,

"இன்னும் கொஞ்ச நேரம் தீபிகா.. நல்லா விடிஞ்சப்பிறகு எழும்புகிறேன்... என் செல்லக் கண்ணா இல்லையா... சிங்கமில்லையா.. வெல்லமில்லையா..."

செல்லமாக கொஞ்சத் தொடங்கினான்...

"வெல்லமுமில்லை... கள்ளமுமில்லை... எழும்புங்க... நீங்க இங்க படுத்திருந்தா சும்மா இருக்கமாட்டீங்க... பிறகு பிள்ளைகள் எழும்பிவிட்டால் எனக்குத்தான் அவமானம்... எழும்புங்க... எழும்புங்க..." படுக்கையில் இருந்து தள்ளிவிட்டாள்...

விழப்போன கபிலன் சுதாரித்து எழுந்து, அவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஏய்... என்ன அப்படிப் பார்க்கிறீங்க... இதுவரைக்கும் என்னைப் பார்க்கவேயில்லையா?.... இரவு முழுக்க ஒரே கூத்துப் போட்டு விட்டு பார்க்கிறீங்க... பகலிலேயுமா... ஐயோ! தாங்காதப்பா.."

தீபிகா விளையாட்டாகச் சொல்லவும் கபிலன் சிரித்துக்கொண்டே "அதற்கில்லை தீபிகா.. உன்னைமாதிரி ஒரு மனைவி கிடைக்க நான் என்ன புண்ணியம் செய்திருக்க வேணும்.... அந்தளவிற்கு ஏதாவது செய்திருப்பேனா... எப்படித் தீபிகா உன்னால் மட்டும் எப்பொழுதும் விளையாட்டாய், அன்பாய் அரவணைப்போடு இருக்கமுடிகிறது. உனக்கு கோபமே வராதா? எப்பொழுதேனும் என்னை எதிர்க்கத் தோன்றாதா? இத்தனை வருட வாழ்க்கையில் எவ்வித பிரச்சனையுமில்லாமல்... உண்மையாக ஒரு முறையேனும் என்னில் வெறுப்பு வரவில்லையா உனக்கு? சும்மாவாச்சேனும் கோபியேன் கண்ணா...!"

செல்லமாய் நாடியைப் பிடித்துக்கேட்டான்.. "காலையிலேயே ஐஸ் அடிச்சது போதும்... போய் குளியுங்க...!"

"ஐஸ் இல்லம்மா... நிஜம்... உன்னை மனைவியாகத் தந்த இறைவனுக்கு நன்றி சொல்லவேண்டும்..."

"இறைவனுக்கு மட்டும் தானா... இல்ல வேறுயாராவது இன்னும் இருக்கிறார்களா?..."

கேலியோடு அவளது கேள்விக்குப் போலியாக யோசனை செய்பவன் போல் பாசாங்கு காட்டிவிட்டு,

"வேற.. ஆங்... சிறந்த ஒரு சிற்பிக்கு நன்றி சொல்லவேண்டும். கண்ணம்மா... என்ன முழிக்கிறாய்... உங்கப்பாதான்.. இந்த அழகான சிற்பத்தை செதுக்கிவிட்டு அமைதியோடு எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் எப்படி இருக்க முடிகிறது... என் அருமை மாமாவே நன்றி மாம்ஸ்ஸ்...."

கூக்குரலில் கத்தினான்...

"போதும்பா... போங்க போய் குளியுங்க..." தீபிகா பிடித்து அவனைத் தள்ளிவிட்டு படுக்கைகளை மடித்து வைக்கத் தொடங்கினாள்..

தீபிகா அழகான அன்பான மனைவி... பெற்றோரால் கபிலனிற்குப் பேசித்தீர்மானிக்கப்பட்ட போதிலும் எதுவித அக்கறையும் அவன் காட்டவில்லை... யார் வந்தால் என்ன? என்ன நடந்தால் என்ன? பெண்ணைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாமல், கல்யாணத்திற்கு அம்மாவின் வேண்டுகோளிற்கு கட்டுப்பட்டு ஒப்புக்கொண்டான்... திருமணம் அமைதியாக நடந்தது... முதலிரவு அறையினுள் தனித்து விடப்பட்டபோதுதான் முகத்தையே பார்த்தான்.. வழமைபோல் அவனால் எதுவுமற்று இருக்கமுடியவில்லை... இதயத்தில் வழமையைவிட இரத்தம் அதிகமாக ஏற்றப்பட்டது... துடிப்பு வேகமாகக் கேட்டது... என்ன பேசுவது? தெரியவில்லை... ஏதாவது பேசவேண்டுமே.. தமிழ் சினிமாவின் வழமையான வசனத்தையே யோசித்து கேட்டான்..

"உனக்கு என்ன பிடிக்கும்...?"

"எனக்கு புல்லின் நுனியில இருந்து விழப்போகிற இந்தப் பனித்துளியோட கடைசிநேர சோகம்... சினிமாக்கள்லவாற காதல் தோல்வி... அதிகாலையில கேட்கிற சஷ்டி கவசம்... அப்புறம் தண்டவாளத்தில தலை சாய்த்துப் பூத்திருக்கிற ஒற்றைப் பூ.. இப்படி நிறைய முன்பு பிடித்திருந்தது... இப்ப... நீ... நீங்கதான் நிறையப் பிடிக்கும்..."

"காதல் விசயத்தில் பெண்கள் துணிந்தவர்கள்... ஆண்கள் பயந்தவர்கள்... ஆனாலும் இரண்டும் ஒன்றை ஒன்று கவரும் சக்தி கொண்டது..." என்று ஆங்கில கவிஞனின் கற்பனையில் வெட்கத்தோடு அவள் பேசியது பிடித்திருந்தது.... தன்னுடைய எண்ணங்களை தயங்காமல் வெளிப்படுத்தியது பிடித்திருந்தது. நீங்கள்தான் பிடிக்கும் என்று பெண்ணால் புகழப்படுவது பிடித்திருந்தது..

அவளை உற்றுப் பார்த்தான்.. ஆண்கள் தாம் காதலிக்கும் பெண்களிடம் அதிகமாய்ப் பயப்படுவார்கள்... கபிலன் பயப்பட்டான்.. அதனால் அவளைக் காதலிப்பது புரிந்தது... பிறந்த காதல் எப்பொழுதும் அவளைக் காத்து தன் கூட்டிற்குள்ளேயே தாங்கிக் கொள்ளத் தூண்டியது... உயிர் கொடுத்தும் காப்பேனடி சகி...

## 1997

தீபிகாவின் முகத்தில் கவலையின் ரேகைகள் அதிகமாய்ப் படர்ந்திருந்தன. குழந்தையின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். அனலாய்க் கொதித்தது. இன்று ஐந்தாவது நாளாக உடல்நிலை சரியில்லை. அரச வைத்தியசாலையில் மருந்து எடுத்தும் மாறவில்லை. குழந்தைக்குச் சத்தான உணவுகள் கொடுங்கள் என்ற வைத்தியரின் ஆலோசனைக்கு வாங்கிக் கொடுக்க கையில் பணம் இல்லை. அவருக்கென்ன? சொல்வது இலகு. ஏதாவது இருந்தால்தானே வாங்கிக் கொடுக்க... யாழ்ப்பாணத்தில் என்றால் எப்படி வாழ்ந்தோம்.. இந்த யுத்தம் வந்து இடம் பெயர்ந்ததால்தான் இவ்வளவும்... எதற்காக இவ்வளவு காலம் நீடிக்கிறது.... நியாயமானவற்றைக் கொடுத்து அல்லது பெற்று தீர்க்க முடியாதா? எங்களின் தேவைகள் வேதனைகள் புரியப்படாதா? ஆற்றாமையின் வேகம் அழுகை வந்தது... எத்தனை காலம் இன்னும் இந்த அகதிமுகாமில் அடைபட்டு அவதிப்பட வேண்டுமோ?...

கோயில் குளம் எல்லாம் ஒழுங்காக தானே சென்றோம்... நல்லூர் கந்தன் திருவிழாவுக்கு கபிலன் காவடிகூட எடுப்பாரே...? ஏன் இறைவா இப்படி சோதிக்கிறாய்...? உனக்கென்ன பக்தர்களுக்கா குறைச்சல்...? தமிழர் போனால் அங்குள்ள சிங்கள மனிதர்கள்... பிறகேன் எம்மீது அக்கறை... விளையாடு!!!... விரக்தி மனதில் வேதனை கிளப்பியது. யோசித்தவளின் குறுக்கே குழந்தையின் முனகல் அழைத்தது. "கொஞ்சம் பொறுத்துக்கொள் கண்ணா...! அப்பா வந்ததும் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டு விட்டு போய் மருந்தெடுப்போம்..." குழந்தையை ஆறுதல் படுத்தினாள்.. 'இறைவா இன்றாவது அவருக்கு ஏதாவது கூலி வேலை கிடைத்திட வேண்டும்... அந்த காசை வைத்துதான்.. சமாளிக்க முடியும்... இரண்டு நாளா ஒழுங்கான சாப்பாடும் இல்லை...' யோசித்தவள் தூரத்தில் கபிலன் வர, மனது விம்மியது... எப்படி இருந்தவர்... எத்தனை கனவுகள் வைத்திருந்திருப்பார்... ஒவ்வொரு பேச்சிலும் என்மீது, குழந்தைகளின் மீதுள்ள நேசிப்பு தெரியுமே... இப்பொழுது வாடி களைத்து எப்படியெல்லாம் ஒடுங்கிவிட்டார்.. எதிர்பார்ப்புக்கள் வைத்திருப்பவன் தோல்வியைச் சந்திக்கையில் எவ்வளவு வேதனை அடைவான்... உன்னைத் தட்டிக்கொடுக்க கூட என்னால் முடியவில்லையே... நீ நிறையவும் உடைந்து போய்விட்டாயா? வேதனைகளைத் தாங்குவாயா... கண்ணா?

"என்ன தீபிகா... குழந்தை எப்படி சுகமாக இருக்கிறானா?.. வருத்தம் குறைந்த மாதிரி ஏதாவது..."

"இல்லப்பா... இன்னும் அதிகமாகத் தான் இருக்கு.. இன்றைக்காவது மாப்பேணி ஏதாவது வாங்கிக்கொடுக்க முடியுமா? ஏதாவது வேலை கிடைத்ததா?"

"இல்லம்மா... எல்லா இடத்திலேயும் அலைஞ்சு பார்த்தாச்சு... எல்லாரும் வேலை இல்லையென்றுதான் சொல்கினம்... அதுவும் இப்படி மழை பெய்கின்றபொழுது யார் வேலைசெய்வினம்... மழையாவது ஓய்ந்து போய்விட்டால் பிறகு பார்க்கலாம்... அதுவுமில்லை..." இயலாமை வார்த்தைகளில் தெரிந்தது...

"சரியப்பா ஏதாவது கடைகளில்... இல்லாட்டி யாரிடமாவது கடனாவது வாங்கி இன்றைக்கு ஏதாவது வாங்கிவர முடியுமா?..."

"எங்க தீபிகா வாங்குவது... ஏற்கனவே எல்லாரிடமும் கடன். இதில இனிமேலும் யார் தரப்போகினம்... எப்படி போய் கேட்பது... முடியாது தீபிகா...."

"இல்லப்பா... ஏதாவது சொல்லி என்றாலும் வாங்கிக்கொண்டு வரமுடியுமா என்று பாருங்கோ..." அவளின் கெஞ்சல் அவனை உருக்கியது... அவனின் கண்கள் கலங்குவது அவனையறியாமலேயே அவளுக்குத் தெரிந்தது... கட்டுப்படுத்திக் கொண்டான்.. இலேசாக தன் நிலமையை நினைத்து சிரித்து விட்டு கடன் கேட்க விரக்தியோடு வெளியேறினான்...

அலைந்த அலைச்சலில் கால் உளைந்தது... அகதிமுகாம் செல்லவும் மனம் இடந்தரவில்லை... எப்படி வெறுங்கையோடு திரும்புவது... ச்சேய்... என்ன வாழ்க்கை... எல்லாரிடமும் கேட்டாகிவிட்டது.... இனியாராவது மீதம் இருக்கப்போகிறார்களா? இருக்க மாட்டார்கள்... கடன் கேட்டதில் எல்லாரும் தந்த கடனைத்தான் திருப்பிக் கேட்டார்கள்.... பாவம் எல்லாரும் வறுமையில்தான் இருக்கிறார்கள்... கடைக்கார மணியண்ணையாவது பனடோல் தந்தார்.. அவருக்கும் நிறைய கடன் காசு கொடுக்க வேண்டும். மனதில் யோசித்தபடியே அம்மன் கோவிலுக்குப் போனான்... சோதனையான நேரங்களில் அம்மாதான் தீர்வு... தாய்மை தாய்மைதான்... அம்மா இன்றாவது ஏதும் வழி காட்டக்கூடாதா?...

கவலைகள் மனதில் அழுகையை ஏற்படுத்தியது... 'எப்படி எல்லாம் கனவு கண்டேன் தீபிகா.... உன்னை எப்படி எல்லாம் வைத்திருக்க ஆசைப்பட்டேன். இப்பொழுது என்னால் ஒன்றும் முடியவில்லையே... ஏன் எனக்கு மனைவியாக வந்துவாய்த்தாய்... வேறு யாருக்காவது வாழ்க்கையாக அமைந்திருந்தாலும் நன்றாக வாழ்ந்திருப்பாயே... என்ன பாவம் செய்தாய்... அழுதான்... வேதனையோடு அழுதான்... வெறுங்கையோடு அழுதான்... இயலாமையால் தன் உறுதி எல்லாம் மறந்து அழுதான்... ஆண் அழக்கூடாது... பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டிய ஆண் அழுதால் பின்னெப்படி பிரச்சனைத் தீர்ப்பது....? ஆனாலும் முடியவில்லை... கபிலனால் அழாமல் இருக்க முடியவில்லை... இதற்கு என்ன தீர்வு... வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கபிலனின் கண்ணில் தூரத்தில் அரளி மரம்தான் தெரிந்தது... மனதில் இலேசாக வெறி கிளம்பி வாழ்க்கை வெறுத்தது... வெறுப்பின் விளிம்பு அவனை உசுப்பேற்றிவிட வேதனைக்குத் தீர்வு புரிபடத் தொடங்கியது... மெதுவாக எழுந்து அதைநோக்கி நடந்தான்...

★★★

"அம்மா... அப்பா இன்னும் வரவில்லையா? பசிக்குதம்மா...." குழந்தையின் குரல் கேட்டு கலைந்தாள் தீபிகா... 'இன்னும் கபிலனைக் காணவில்லையே... ஏன் இவ்வளவு நேரம்...?'

"அம்மா... பசிக்குதம்மா..." மீண்டும் குழந்தை கேட்க....

"கொஞ்சம் பொறுப்பா... அப்பா இதோ இப்ப வந்திடுவார்...." குழந்தைக்கு ஆறுதல் சொல்லிவிட்டு கண்ணுக்குள் சோகம் நிரப்பி, இனிமேல் எப்பொழுதுமே வரமுடியாத கபிலனிற்காக காத்திருந்தாள்.... காத்துக் கொண்டிருக்கிறாள்... தீபிகா குழந்தைகளுடன்...

**சிறுகதைக்கு பின் கொஞ்சம்...**

**"ஏழை மக்களுக்காகவே இந்த வரவுசெலவுத் திட்டம் தயாரானது. அடுத்த வருடத்தின் நடுப்பகுதிக்குள் இனப்பிரச்சனையும், வறுமையும் முடிவுக்கு கொண்டுவரப்படும்." நான்காவது வருடமாக வழமையான தோத்திரத்தைச் சொன்னபடி நிதியமைச்சர் வரவுசெலவுத்திட்ட உரை நிகழ்த்திக் கொண்டிருக்க, எங்கோ ஒரு கோயிலின் மூலையில் வறுமையிலும் இனப் பிரச்சனையின் கொடுமையிலும் இறந்து போய் அனாதையாய்க் கிடக்கும் ஒருவனுக்காய் காத்திருந்த அவர்களைப் பற்றி அறியாமலே, எல்லாரும் நிதியமைச்சரையே கவனித்துக் கொண்டிருந்தார்கள் எதை விவாதிக்கலாமென்று.**

# தயக்கம்

**கோ. பாரதி**

'உனக்கு வெட்கமாக இல்லை? படித்திருந்தும் உனக்கு புத்தி ஏன் இப்படிப் போகிறது? என் உள்மனம் என்னை ஏளனம் செய்தது.

அசிங்கம்தான். என்ன செய்வது? எனக்கு இப்படியொரு எண்ணம் வந்ததே தவறுதான். அதுவும் என் மனைவி பிரசவத்திற்காக பிறந்த வீட்டிற்கு போயிருக்கும் இச்சமயத்தில், நான் இப்படி நடந்து கொள்வது சரியில்லைதான் ஆனாலும், கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பை நழுவவிட மனம் தயாராக இல்லையே.

எங்கள் வீட்டில் வேலைசெய்யும் வசந்திக்கு, என் மனைவி மீனாவைவிட நான்கு வயது அதிகம்தான். இருந்தாலும், நல்ல தக்காளி சிவப்பில் மொழு மொழுவென்று இருப்பாள். எப்போதும் சுறுசுறுப்பு. கூடவே சுத்தமாக, பார்ப்பதற்கு 'பளிச்'சென்று இருப்பாள்.

சமையற்கட்டில் வசந்தி எனக்கு சாப்பாடு தயாரித்துக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. இதோ பதினைந்தடி தூரத்தில் தான் அவள் இருக்கிறாள். வீட்டிலும் வேறு யாருமில்லை. இதுவே மிகச்சரியான தருணம். துணிந்து கேட்டுவிட வேண்டியதுதான்.

இவள் கடந்த மூன்று வருடங்களாக இங்கு வேலை செய்து கொண்டிருக்கிறாள். இன்றுவரை நான் நேருக்கு நேர் பார்த்ததில்லை. பேசியது கூட மிகவும் அத்தியாவசியமான இரண்டொரு வார்த்தைகள்தான். இதனாலேயே அவள் என்மீது, அதிகமதிப்பு வைத்து இருக்கிறாள்.

ஒரு புதிய உத்வேகத்துடன் எழுந்து சமையற்கட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். அந்த ஹாலைக் கடப்பதற்குள் என் கால்கள் ஓய்ந்தன. முகம் கழுத்தெல்லாம் குப்பென்று வியர்த்தது. இதயம் 'பக்... பக்...' என்று அடித்துக் கொண்டது. பல்லைக் கடித்துக் கொண்டு வசந்தியின் எதிரில் வந்து நின்றேன்.

அவள் என்னை இவ்வளவு அருகாமையில் இதற்கு முன் பார்த்ததில்லை. ஆகவே,



பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானவளாய், கொஞ்சம் இசகு பிசகாக இருந்த புடவையைச் சட்டென்று சரி செய்து கொண்டு கேள்வி முடிச்சுக்களோடு என்னை நோக்கினாள்.

"வசந்தி.. உங்கிட்ட ஒண்ணு கேட்டா தப்பா நெனைச்சுக்க மாட்டியே?"

அவள் பதிலேதும் பேசாமல் என்னையே பார்த்துக் கொண்டிருக்க, நான் தட்டுத் தடுமாறி வார்த்தைகளை கொட்டினேன்.

"ஊரில இருந்து மீனா லெட்டர் போட்டிருக்கா.. ஹொஸ்பிடல் செலவுக்கு, பணம் கொஞ்சம் அதிகமாகவே கொண்டுட்டு வாங்கன்னு... நீதான் வீட்டுவேலை செஞ்சே நிறைய பணம் சேர்த்து வச்சிருக்கியே... அதில ஒரு ஆயிரம் ரூபாய் கொடு... அடுத்த மாச சம்பளத்திலே கொடுத்திர்றேன்," என்றேன் பரிதாபமாக.

# ஈசியாய் ஒரு கொலை!

**ஐ.ரதி**

கொலை வெறியுடன் வீட்டின் உள்ளே நுழைந்தான் ரத்தன். கதவைச் சாத்தி பூட்டினான். சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. மெதுவாக நடந்தான். அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் அவனுக்கே அச்சம்.

எங்கே அவள்?

இன்றைக்கு அவளைக் கொல்லாமல் விடப் போவதில்லை! கண்களை சுழல விட்டான். பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அது இருந்தது.

'பளபள'வென்று சாணை தீட்டப்பட்ட கத்தி!

உள்ளறைக் கதவை மெதுவாக தள்ளினான். ''ஆ' என்று வாய் திறந்தது பூட்டப்படாத கதவு. அங்கே....

ஃபோம் மெத்தையில் ஒய்யாரமாக சாய்ந்து கொண்டு, ரீடிங் லைட் வெளிச்சத்தில் மாத நாவல் ஒன்றில் மூழ்கி இருந்தாள் அவள்.

மங்கிய ஒளி வெள்ளம். ஆஜானுபாகுவான கரிய உருவம். மெல்ல நடந்து அவள் கட்டிலை நெருங்கியது. க்ரைம் நாவலில் மூழ்கியிருந்த அந்த இளம் பெண், வந்திருக்கும் ஆபத்தை உணரவில்லை. அந்த ராட்சசன் கத்தியை உருவினான். 'சதக்' என்று அவள் எதிர்பாராத நேரத்தில் நெஞ்சில் பாய்ச்சினான்...!

அவள் படிப்பதை நிறுத்தினாள். அவள் இதயம் 'டிக் டிக்' என்று வேகமாக அடித்துக் கொண்டது. நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டாள்.

"சண்டாளி!"

அகால நேரத்தில் மிக அருகில் கேட்ட ஆக்ரோஷமான குரல் அவளைத் திடுக்கிட வைத்தது. மாத நாவல் கை நழுவியது.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

கொலை வெறி கண்ணில் மின்னலடிக்க, கையில் வலுவாகப் பற்றிய கத்தியுடன் ரத்தன்!

"ரத்தன்... வேண்டாம்...!"

"கட்டின கணவனுக்குத் துரோகம்! உன்னை...."

"ரத்தன்.. இனிமேல்... துரோகம் செய்ய மாட்டேன்..."

"உன்னால முடியாது! இந்தா... கத்தியை நெஞ்சில் வாங்கிக் கொள்!"

ஓங்கி அவள் நெஞ்சில் குத்தினான் ரத்தன். அவள் 'ஓ'வென்று அலறினாள். துடித்தாள். சற்று நேரத்தில் துவண்டாள். அடங்கினாள்!

கொக்கரிப்புடன் நிமிர்ந்தான் ரத்தன்.

எதிர் வீட்டு ஜன்னலில் இரண்டு விழிகள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தன.

உறைந்தான் ரத்தன்!



அந்த விழிகளுக்குச் சொந்தக்காரி அமிர்தா.

கோலிங் பெல் சத்தம்!

அமிர்தா நடுங்கினாள்.

பதினொரு மணி இரவு. இந்த நேரத்தில் யார்?

அம்மா அண்ணன் வீட்டுக்குப் போயிருக்கிறாள். நாளைதான் வருவேன் என்று சொல்லிச் சென்றாள்.

கோலிங் பெல் விடாமல் ஒலித்தது.

அமிர்தாவால் யோசிக்க முடியவில்லை.

"யார் அது?"

தட்டுத் தடுமாறி நடந்தாள். வழியில் இருந்த நாற்காலியில் மோதினாள். 'அய்யோ அம்மா.' முழங்கால் வலித்தது.

கதவை அணுகினாள்.

"யார் அது?" கேட்டுக்கொண்டே கதவைத் திறந்தாள். கைகள் இரண்டையும் முன்னால் நீட்டித் துழாவினாள்.

ரத்தன் அங்கே வெறித்தனத்தோடு நின்று கொண்டிருந்தான்.

"பெல் அடிச்சது யாரு?"

அமிர்தாவின் விழிகள் படபடத்தன. ரத்தன் அவளை இரண்டடி தூரத்தில் நின்று கொண்டு உற்றுப் பார்த்தான். அவள் செயற்பாடுகள் அவனுக்கு நகைப்பு உண்டாக்கியது.

"ப்பூ! குருடி!"

அந்த வீட்டில் பொலிஸ் பட்டாளம் 'திமு திமு' என்று நுழைந்தது.

"வாங்க இன்ஸ்பெக்டர்!"

ரத்தன் முகத்தில் அச்சம் காட்டினான்.

"அமிர்தா...?"

"நான்தான் இன்ஸ்பெக்டர்! இதோ இவன்தான் அந்த கொலைகாரன்!"

'இவள் குருடு இல்லையா? நிஜமான குருடி என்று நம்ப வைத்துவிட்டாளே!'

"கொலை எங்கேம்மா நடந்தது?"

"எதிர் வீட்டில்!"

"கொலையா? எப்போது?"

"மிஸ்டர்! நடங்க எதிர் வீட்டுக்கு!"

ரத்தன் முன்னே நடக்க, அமிர்தா அவனைத் தொடர, பொலிஸ் படை அவனை பின்பற்றியது.

வீட்டின் அறைக்குள் புத்தகம் படித்துக் கொண்டிருந்தவள் சற்று நேரத்திற்கு முன் செத்துப்போன ரத்தனின் காதலி!

அமிர்தா முகத்தில் ரத்தம் சுண்டினாள். உணர்ச்சிகளற்ற மரமாக நின்றாள்.

"சார்! இவள் என் காதலி. நாடக ரிகர்சல் பார்த்துக்கிட்டிருந்தோம். நான் கத்தியால் குத்துவது போன்ற உச்சகட்ட காட்சியை எதிர்வீட்டு ஜன்னலில் இருந்து இவங்க பார்த்துட்டதை கவனிச்சேன். இந்த கொலையை நிஜம்தான்னு நம்பி, இவங்க ஹார்ட் பலவீனமா இருந்து, ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடக் கூடாதேன்னு உண்மையை சொல்றதுக்கு இந்த வீட்டுக்கு வந்தேன்... ஆனால், இவங்க கண்ணு தெரியாதவங்களா நடிச்சி..."

தன்னிலைக்கு வந்தாள் அமிர்தா.

"இன்ஸ்பெக்டர்! இவர் கத்தியால் குத்தியதும் நான் உங்களுக்கு போன் செய்துட்டேன்– நிஜமான கொலைன்னு நம்பி. அதன் பிறகு என்ன நடக்குதுன்னு ஜன்னலருகில் நின்னு பார்த்தேன். இவர் என்னைப் பார்த்துட்டார். அடுத்த இலக்கு நான்தான்னு முடிவு செஞ்சுட்டேன். கொலையைப் பார்த்த 'ஐ விட்னசை' உயிரோட விட எந்த கொலைகாரனுக்கும் பொறுக்காது. கோலிங் பெல் அடிச்சது. இந்த மாதிரி ஏதாவது கொலை கேசை கண்டு பிடிக்கணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசை இன்ஸ்பெக்டர். அதான் சட்டுன்னு யோசிச்சு முடிவு செஞ்சேன். குருடியா நடிச்சிட்டேன்!"

"சொறி பார் த ட்ரபிள் இன்ஸ்பெக்டர்!"

பொலிஸ் பட்டாளம் பின் வாங்கியது.

"அமிர்தா! எங்க நாடகத்தில் உங்களுக்கு மெயின் ரோல். அவசியம் நீங்க நடிக்கணும்!"

"வித் ப்ளஷ் ரத்தன்"



படிப்பகம்

www.padippakam.com

# வகை ஐந்து



## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

கடும் பகை ஒடித்துப்போட்டு
கொடும் போரில் வாகை சூடி
திடும் எனவே வந்து நின்றான் காளை!

"வாளினிலே காயவில்லை இரத்தம்
தோளினிலே ஆறவில்லை காயம்
பூவினிலே தேன் எடுக்க வந்தேன்"

"இத்தனை நாள் எங்கிருந்தீர்,
இன்று மட்டும் ஏன் துடிப்பு?"

செவ்விதழாள் தொடுத்துவிட்டாள்
கேள்வி.

"விழுங்க வந்த பகை விரட்ட
கலக்கமில்லா வீரன்,
எங்கிருக்க வேண்டுமோ
அங்கிருந்தேன் நானும்!"

"தனிமை என்னும் பகை சூழ
தனித்திருந்தேன் நானும்!
துயரமென்னும் அம்பு பட்டு
துடித்திருந்தேன் நாளும்!"

என்று உரைத்தாள்
ஏந்திழையாள் அவளும்!

"பழம் கசக்கும், பால் புளிக்கும்
பசும் தளிரும் பாம்பாய் தெரியும்
பூ மணமும் வெறுப்பாகும்
நலம் இன்றி மனம் இருக்கும்
நான் அறிந்த துயரும் அது
நாம் ஒருவர் உண்மை இது!"

அவன் சொல்லி முடித்ததும்
அவள் தொடர்ந்தாள்;

"கிளி மொழியும் இரசிக்கவில்லை
குயில் பாட்டும் சகிக்கவில்லை
துளிகூட மகிழ்ச்சி இல்லை
துயில் கொள்ளப் பெரும் தொல்லை!"

எனக்காக இத்தனை தவிப்பா?
அவன் மனம்
இன்பத்தில் ஆடியது ஒரு புறம்;

சித்திர விழிக்காரி
நித்திரையின்றி தவித்தாளே,
அவன் மனம்
துன்பத்தில் வாடியது மறுபுறம்!

"நெய் இல்லாத
விளக்கிருந்து என்ன பயன்?
நீர் இல்லாத
ஆறிருந்து என்ன பயன்?
மெய் இல்லாத
வாய் இருந்து என்ன பயன்?
நீர் இல்லாத
நான் இருந்து என்ன பயன்?"

அடுக்கடுக்காய்
வினாச் சரம் தொடுத்தாள்!
அவனும் விடாது பதில் சொன்னான்.

"நீரைப் பிரிந்த
மீன் உண்டா?
கடலைப் பிரிந்த
அலை உண்டா?
வேரைப் பிரிந்த
மரம் உண்டா?
பூவைப் பிரிந்த
மணம் உண்டா?
கண்ணே பெண்ணே
கலங்காதே!
உன்னில் நானும்
என்னில் நீயும்
சரிபாதி!"

கரும்பிலும் இனிய
இன்சொல்லால்
காதலி மனதை
இனிக்க வைத்தான்!

ஒட்டிக் கொண்டது
உள்ளம்!
எட்டி நிற்பதோ
உடல்கள்?
கட்டிக் கொண்டன
கரங்கள்!

கையினை கை பற்ற
கண்ணினைக் கண் கவ்வ
காலினைக் கால் தழுவ
தோளினை தோள் தாங்க
பூவினை வண்டறியும்!

புன்னகையும் போதை தரும்
கண்ணிமைகள் தாளமிடும்
கை விரலகள் கதை கூறும்
பூவிதழ்கள் ஜாலமிடும்

பூவுக்குள் தீ எரிய
பொன்வண்டு தீயணைக்கும்!
சிந்தைக்குள் தேன்சொரிய
சொர்க்கம் அங்கே நேரில் வரும்!

மார்பணைதான் தலையணையாய்
மலர்மேனி பஞ்சணையாய்
அவன் பள்ளி கொள்கையிலே
கார்காலம் போல் மனம் குளிரும்!

"பாலும் பழமும் என
தேனும் சுவையும் என
கூடிக் கலந்த சுகம்
கோடி யுகமானாலும்
ஓடிப்போகாது எம்மை விட்டு!"

முத்தெடுத்தவன் அப்படி
முன்மொழிய
சத்தெடுத்தவள் அதனை
ஆமோதித்தாள்!

"வெட்கத்தில்
கண்கள் போராட
விரகத்தில்
கால்கள் தள்ளாட
விரதத்தை
முடித்து வைக்க விருந்தொன்று
நான்கேட்க,
விருந்தோடு
மருந்தும் தந்தாய்!

கண்டால் உன்னை
மனதில் கள்ளூறும்!
உன் குரல் கேட்டால்
செவியில் தேன் பாயும்!
கனி இதழ் உண்டால்
இன்பப் பசியாறும்!
முகர்ந்தால்
மோகம் தலைக்கேறும்!
பார்த்தால்- பார்த்தால்
இதயம் உன்னிடம் சரணாகும்!"

கண்டு உணர்ந்த
அனுபவம்
கவிதையாய் வெடித்தது!

நங்கை
சுட்டும் விழிகளால்
சுட்டாள்!

"புலவர்கள் பொய்யர்கள்தான்
ஆனால் நீங்களுமா?" என்றாள்.

"எது பொய்?
ஏன் பொய்?"
கேட்டான் காளை!

"ஐம்புலனுக்கும்
ஐந்து வகை இன்பம்
யாவையுமே
உன்னிடத்தில் கண்டேன்
பொய்யில்லை, புகழ்ச்சியில்லை
மெய்தான்!
திருவள்ளுவரும் சொன்னார்
அந்தப் பொருள்தான்!"

அடித்துச் சொன்ன காளை
எடுத்து விட்டான் குறளை;

**"கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும்
–ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"**
குறம்-1101, அதிகாரம்-111.

ஸ்போர்ட்ஸ்

## கங்குலியின் பங்களிப்பு



இந்திய கிரிக்கெட் அணியில் கபில்தேவுக்குப் பின்னர் ஒரு சகலதுறை ஆட்டக்காரர் இல்லையே என்ற பெருங்கவலை நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

அந்தக் குறையை மனோஜ் பிரபாகர் ஓரளவு நிவர்த்தி செய்து வந்தார். ஆனால் அணியில் இருந்து அவர் நீக்கப்பட்ட பின்னர், சகலதுறை ஆட்டக்காரர் என்னுமிடத்தில் மீண்டும் ஒரு வெற்றிடம் வீழ்ந்தது.

இப்போது அந்த இடத்தை கொஞ்சம் கொஞ்சமாக நிரப்பி வருகிறார் வங்கப்புயல் சௌரவ் கங்குலி.

கடந்த வருடம் இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்த இந்திய அணியில் இடம் பெற்று, தனது கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கிய கங்குலி, முதல் டெஸ்ட்டிலேயே சதம் அடித்தார். அத்துடன் அவர் வீசிய முதல் ஓவரிலேயே முதல் விக்கெட்டையும் வீழ்த்தினார்.

மித வேகப்பந்து வீச்சாளரான அவரை ஒரு பந்துவீச்சாளராக இந்திய அணி பயன்படுத்திக் கொண்டாலும், ஒரு சில ஓவர்கள் கொடுப்பதுடன் முடித்து விடுவார்கள்.

அண்மையில் கனடாவில், பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த சஹாரா கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்திய அணி 4-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. அதன் பின் பாகிஸ்தானில் நடந்த ஒருநாள் போட்டித் தொடரில் இந்திய அணி 1-2 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது. எனினும் இந்த இரண்டு ஒருநாள் போட்டித் தொடர்களிலும் கங்குலி அபாரமாக விளையாடினார். இந்த இரு தொடர்களிலும் நடைபெற்ற 8 போட்டிகளில் கங்குலி 5 முறை ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ரன் குவிப்பில் மட்டுமல்லாது பந்து வீச்சிலும் நன்கு பிரகாசிக்கும் கங்குலி கனடாவில் நடைபெற்ற சஹாரா போட்டித் தொடரில், 5 போட்டிகளில் 13 விக்கெட்டுக்களை வீழ்த்தி, அத்தொடரில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

சௌரவ் கங்குலியின் பேட்டிங் மற்றும் பந்துவீச்சுத் திறன், இங்கிலாந்தின் முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரர் ஜெஃப்போய கொட்டை மிகவும் கவர்ந்துள்ளது. சஹாரா கோப்பைப் போட்டியின்போது, கங்குலியை அழைத்து மனதாரப் பாராட்டியதோடு, பல நுணுக்கங்களையும் சொல்லிக் கொடுத்தார் போய்கொட்.

பொதுவாக இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் மற்ற நாட்டு வீரர்களை வாய்விட்டுப் பாராட்டுவது அபூர்வம். அந்த அபூர்வமான பாராட்டு கங்குலிக்குக் கிடைத்துள்ளது.

தான் நீண்ட காலமாகக் காதலித்து வந்த டோனா ராயை இந்த வருடம் திருமணம் செய்து கொண்டார் கங்குலி. மனைவி வந்த நேரமோ என்னவோ இந்த ஆண்டு 30 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1000 ஓட்டங்களுக்கு மேல் குவித்து உலக பேட்ஸ்மன்கள் வரிசையில் 3வது இடத்தில் இருக்கிறார்.

அது மட்டுமன்றி 15 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1000 ஓட்டங்களையும் தாண்டியுள்ளார் கங்குலி.

"கபில்தேவ் போலவோ, இயன்பொத்தம் போலவோ நான் ஒரு சகலதுறை ஆட்டக்காரர் அல்ல. அவுஸ்திரேலியாவின் சகலதுறை ஆட்டக்காரர் ஸ்டீவ் வோவ் மாதிரி பேட் செய்வதிலும், பந்து வீசுவதிலும் இருந்தால் போதும் என்று நினைக்கிறேன்," என்று கூறும் கங்குலி,

"முதலில் நான் ஒரு பேட்ஸ்மன். அப்புறம்தான் பந்து வீச்சாளன். அணிக்காக ரன் சேர்ப்பதே என் குறிக்கோள்," என்று மேலும் தெரிவித்துள்ளார்.

## இவர்கள்தான் அவர்கள்



வி.கே.ராமசாமி



மணிவண்ணன்



ஊர்வசி

## சிந்தியா

**★ இந்திய-இலங்கை டெஸ்ட் போட்டியில் ஸ்ரீநாத்தின் பந்துவீச்சு எப்படி?**
க.மோகனதாஸ், கொழும்பு-13.

*ஓய்வு அவரை உருவேற்றியிருக்கிறது! டெஸ்ட் போட்டியில் அவரது 100வது விக்கெட்தான் தன்னம்பிக்கைக்கு முதல் பரிசு!*

♣ ♠

**★ இலங்கை அணியின் வெற்றிக்கு சத்ய சாயிபாபாதான் காரணம் என்று அர்ஜுன ரணதுங்கா 'கல்கி' இதழுக்கு பேட்டி கொடுத்துள்ளாரே? அப்படியானால் சமீபத்திய தோல்விகளுக்கு யார் காரணமாம்? பேட்டி கொடுத்த சூட்டோடு தோல்வி வந்துவிட்டதே?**
ஏ.உருத்திரகுமார், நீர்கொழும்பு.

*அதுதானே!*

♣ ♠

**★ பிரபுவின் 'தேடினேன் வந்தது' பார்த்தீர்களா? ஏன் அதுபற்றி ஒன்றும் சொல்லவில்லை?**
வ.விஜயகுமார் (பிரபு விசிறி), திருகோணமலை

*சும்மா ஒரு மரியாதைக்காக பிரபுதான் ஹீரோ என்று சொல்லலாம், உண்மையான ஹீரோ கவுண்டமணிதான்! ஆரம்பம் முதல் இறுதிவரை அந்தக் கால படவிளம்பரப் பாணியில் சொல்வதானால் வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் சித்திரம்! அத்தோடு மேலதிக இணைப்பாக மந்த்ராவின் குலுக்கலும் உண்டு!*

♣ ♠

**★ சிந்தியா! அசட்டுத்தனம் என்றால் என்ன?**
செல்வி. இ.ரஞ்சிதமலர், மட்டக்களப்பு.

*ஒரு பெண்மணிக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்தன.*

*அப் பெண்மணியை பார்வையிடச் சென்ற பக்கத்துவீட்டுக்காரி: "அடேயப்பா! மூன்று குழந்தைகளா? ஆச்சரியம், ஆச்சரியம்!" என்றாள்.*

*குழந்தைகளின் தாய் பெருமைப் பூரிப்புடன், "5, 6 3 பிரசவத்துக்கு ஒரு முறைதான் இப்படி மூன்று குழந்தைகள் பிறக்கின்றன தெரியுமா?" என்று கூறினாள்.*

*பக்கத்து வீட்டுக்காரி அப்படியே திகைத்துப்போய்விட்டாள். "அப்படியானால், வீட்டுக் காரியங்களைக் கவனிக்க உனக்கு நேரமே இருக்காதே! என்ன செய்கிறாய்?" என்று கேட்டாள்.*

♣ ♠

**★ டியர் சிந்தியா! யானைக்கும் அடி சறுக்கும், உதாரணத்துடன் கதை சொல்லாவிட்டால் உமது மண்டை வெடித்துவிடும்?**
கே.ஜவாஹிர், கந்தளாய்.

*ஒரு பத்திரிகை நிருபர் இருந்தார். எங்கு வேண்டுமானாலும் புகுந்து செய்தி திரட்டிக்கொண்டு வந்துவிடுவார்.*

*ஒருமுறை தெருவிலே ஒரு கார் விபத்து. பெருங்கூட்டம் கூடி நின்றது. நிருபர் அங்கு போனார். கூட்டத்துக்குள் புக முடியவில்லை. உடனே ஒரு தந்திரம் செய்தார்.*

*"வழிவிடுங்கள், வழி விடுங்கள், அடிபட்டவருடைய பிள்ளை நான்!" என்று கெஞ்சினார். கூட்டம் வழிவிட்டது.*

*காரில் அடிபட்டுக் கிடந்தது ஒரு கழுதை!*

♣ ♠

**★ திரையுலகில் இருந்து ரஜினி ஒதுங்கப் போகிறார் என்பது உண்மையா?**
பி.பாலச்சந்திரன், வவுனியா.

*சேச்சே... 'மெல்ல மெல்ல இந்த நடிப்புப் போதையில் இருந்து விலகுவேன்' என்றுதான் ஒரு பேச்சுக்குச் சொல்லியிருக்கிறார்! ஒரு தகவல் சொல்கிறேன்: முன்னர் ஒரு தடவை முற்றாக விலக முடிவு செய்தார்! இமயமலைப் பக்கம் போய்விட்டார்! பின்னர் திரும்பவந்து நடிக்க ஆரம்பித்தார். (இது பாலச்சந்தர் சொன்ன தகவல்) விரைவில் ரஜினியின் அடுத்தபட அறிவிப்பு வரும். நம்புங்கள்!*

♣ ♠

**★ ஓட்ட வீராங்கனை சுசந்திகா விவகாரத்தில் தனது பேச்சை திரித்து வெளியிட்டதாக பத்திரிகைகள்மீது அமைச்சர் மங்களா குற்றம் சாட்டியுள்ளாரே?**
தி.உதயன், பசறை.

*அப்படிப் பேசியதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தபோது, உடனே ஏன் மறுக்காமல் இருந்தார்? பின்னர் அப் பேச்சுக்கு எதிர்ப்புகள் கிளம்பியதால்தானே மறுத்திருக்கிறார்.*

♣ ♠

**★ நம் நாட்டுக்கு தங்கம் பெற்றுத் தந்த தங்க மங்கையின் இன்றைய நிலை என்ன?**
தா.அலோசியஸ், ஹெந்தளை.

*வார்த்தைகளால் பங்க மங்கையாக்கி விட்டனர்!*

♣ ♠

**★ மறுபடியும் இந்தியாவில் இருந்து உலக அழகி தெரிவாகியுள்ளாரே?**
சா.அசோக்குமார், கண்டி.

*பிரபஞ்ச அழகிகளின் உற்பத்திப் பிரதேசம் என்று விருது கொடுக்கலாம்! எத்தனை அழகிகள் தோன்றி என்ன? இந்திரா பிறந்த மண் என்பதில் உள்ள பெருமை, இந்தப் பிரபஞ்ச அழகி பிறந்த மண் என்பதில் இல்லையே!*

♣ ♠



'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் மீனா-பிரபுதேவா-மகேஸ்வரி

**★ 'நாம் இருவர் நமக்கு இருவர்'ரில் ரம்பாவின் இடத்தை சிம்ரான் பிடித்தது நியாயமா?**
சி.யோகநாதன், கொழும்பு-06.

*இப்போது சிம்ரான் இடத்தை மீனா பிடித்துவிட்டார். சிம்ரானுக்கும் டாட்டா காட்டிவிட்டார் இயக்குநர் சுந்தர்.*

♣ ♠

**★ தங்களைக் கவர்ந்த அரசியல்வாதி யார் சிந்தியா?**
இ.பிரவீன், அப்புத்தளை.

*கியூபாவில் அமைச்சர் பதவியில், தாமரை இலைத் தண்ணீர் போல அமர்ந்திருந்துவிட்டு, உரிய நேரத்தில் அந்தப் பதவியை உதறிவிட்டுப் போன சேகுவேரா!*

**★ ஜெயின் கமிஷன் அறிக்கையால் தமிழக அரசுக்கு ஆபத்து ஏற்படுமா?**
ஜி.கஜேந்திரன், கொழும்பு-11.

*ஏற்படாது! அப்படி நடந்தால் நன்றாக இருக்குமே என்னும் நப்பாசை செல்விக்கு இருக்கிறது!*

♣ ♠

**★ சிந்தியா! புலிகள் தமிழ்நாட்டில் சுதந்திரமாக நடமாட கருணாநிதிதான் அனுமதித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளதே? உண்மையா?**
சி.ராகவன், மாத்தளை.

*கருணாநிதி மட்டும்தான் அனுமதித்தார் என்று ஜெயின் கூறியிருப்பது கலப்படமில்லாத அபத்தம்! கருணாநிதியும் அனுமதித்தார் என்பதே சரி! வடநாட்டவரான ஜெயினுக்கு, தமிழ்நாட்டுக்கும் இலங்கைத் தமிழருக்கும் இடையே இருக்கும் பிணைப்புத் தெரிய நியாயமில்லைத்தான்! ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை முழுவதுமே ஒரு பாரபட்சமான கண்ணோட்டம் ஆக்கிரமித்திருக்கிறது என்பேன்.*

♣ ♠

**★ ஈராக் விவகாரத்தில் அமெரிக்கா பின்வாங்கி விட்டதே, கவனித்தீரா?**
பா.நாசர், கொழும்பு-09.

*ஈராக்குக்கும் குவைத்துக்கும் பிரச்சனை. குவைத்தை ஆக்கிரமித்தது ஈராக். அதைச் சாக்காக வைத்துத்தான் வளைகுடா யுத்தமே நடந்தது. இம்முறை அந்தக் குவைத்கூட அமெரிக்காவின் போர் வெறியை ஆதரிக்கவில்லை. அமெரிக்காவின் நேசநாடுகள் பலவும் ஒத்துழைக்க முன்வரவில்லை. சகுனம் சரியாக இல்லாததால், விட்டுக் கொடுப்பு நாடகம் ஆடியுள்ளார் கிளின்டன்.*

♣ ♠

**★ விலைவாசிகள் இப்படியே ஏறிக்கொண்டிருந்தால் நாம் என்ன செய்வது?**
திருமதி செண்பகா ராமதாஸ், கொழும்பு-05.

*பாண் கடை மூடப்போகிற சமயம். ஒரு பெண் அங்கே பாண் வாங்க வந்தாள். அவள் திடீரென்று "ஐயோ" என்று கத்தினாள்.*

*அப்போது ஒரு ஆள் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடினான். அதனைக்கண்ட பொலிஸ்காரர் அந்த ஆளைத் துரத்திப் பிடித்தார். அவன் ஒரு பெரிய திருடன் என்று தெரிந்தது.*

*பாண் கடைக்காரன் அந்தப் பெண்ணிடம் நன்றி உணர்வோடு: "அம்மா! நல்ல வேளையாக நீ கத்தினாய். இல்லாவிட்டால் என் கடையில் திருட்டுப் போயிருக்கும். அது சரி, அவன் திருடன் என்று எப்படிக் "கண்டுபிடித்தாய்?" என்று கேட்டான்.*

*அதற்கு அந்தப் பெண் சொன்னாள்: அவனைக் கண்டா நான் கத்தினேன்? நீ சொன்ன விலையைக் கேட்டல்லவா கத்தினேன்!"*

♣ ♠



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 110

## இலங்கேஸ்வரனின் இணையற்ற படை அணிகள்

இராமபிரான் விபீடணரை தன் அருகே அழைத்தார். அவருடைய கண்களிலிருந்து பெருக்கெடுத்து ஓடிய கண்ணீரைத் தன் வலது கையால் துடைத்தார். வாஞ்சையுடன் இறுக அணைத்து விபீடணரின் முதுகைத் தடவி விட்டார்.

"அன்புச் சகோதரா! உம்முடைய உடன் பிறப்பின் அருமைக்குரிய மகன் இந்திரஜித்து உமக்கும் ஒரு மகன்தான் என்பதை நானும் உணர்வேன். உமது அன்புக்குப் பாத்திரமான அந்த இளைஞன், மாண்டு போனது உம்க்கு ஆற்றொணாத் துயரம்தான். அப்பேற்பட்ட ஒரு வீரன் கொலை செய்யப்பட்டதனால் நாமும் துயரடைகிறோம். இந்திரஜித்துவை வெற்றி கண்டுவிட்டோம் என்பதற்காக பலர் மகிழ்ச்சி அடைந்தாலும் இத்தகைய கொலைகள் விரும்பத்தக்கது அல்ல.

உமது அண்ணன் இராவணன் அதர்மத்திற்கு அடிமையாகி அனர்த்தங்களை விளைவித்தமையால் உண்டான பயன் இது. அதர்மம் எந்த உருவத்தில் தோன்றினாலும் அது அழிக்கப்பட்டே ஆக வேண்டும்! இந்திரஜித்துவும் அதர்மத்துக்குத் துணை போனவன். அதனால் தான் இந்த இளம் பிராயத்திலே அவன் மரணமானான். அவனுடைய தலைவிதி இது. ஆகவே கவலையை விடுத்து நமக்குரிய கடமையைச் செய்ய ஆயத்தமாவோம்."

இராமபிரான் இவ்வாறு கூறியதும் விபீடணர் அவருடைய கால்களில் வீழ்ந்து வணங்கி எழுந்தார்.

இராமபிரானை நோக்கிய விபீடணர், "அண்ணலே! உண்மையில் பந்த பாசம் என்பது பெரும் மாயைதான். இந்திரஜித்து எனது அண்ணன் மகன் தான்! இருப்பினும் அவன் எமது எதிரி! அவன் இறந்தமையினால் முதலில் துயரம் தாக்கியது. ஆனால் அதனை- என் கண்ணீரைத் துடைத்தே களைந்து விட்டீர்கள். உணர்வுகளை அடக்க முடியாமற் போய்விட்டமைக்காக என்னை மன்னியுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்.



### "பழிதேட வேண்டாம்!"

இராவணன், சீதையைக் கொன்றுவிட வேண்டுமென்று வெங்கோபங்கொண்டு புறப்பட்டதும் சுற்றி நின்றவர்கள் அனைவரும் அச்சங்கொண்டு நடு நடுங்கினர். செய்வதறியாது தவித்து நின்ற பலருள் மகோதரன் ஓடி வந்து முன்பாய்ந்து, இராவணனை அசையவிடாமல் அவன் கால்களைக் கட்டிக் கொண்டான். இராவணன் மகோதரனிடமிருந்து விலக முடியாமல் தடுமாறினான்.

"ஐயனே! தாங்கள் பெரும் பழியினைத் தேடக்கூடாது! ஈரேழு பதினான்கு உலகிலும் தங்களை ஓர் ஒப்பற்ற மாவீரன் என்று போற்றுகின்றன. அப்பேற்பட்ட பெருமைக்குரிய தாங்கள், ஒரு பெண்ணைக் கொல்வதனால் தங்கள் வீரத்துக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொள்வது தகுமா? சீதைமீது தங்கள் சினத்தைக் காட்டுவதை விடுத்து, இராம-இலக்குமணரைப் போர்க்களத்தில் வெற்றி கொள்வதே உகந்த செயல். கொலை வாளினை அதன் உறையுள் செருகிவிட்டு தங்கள் வில்லினை எடுத்துக் கொண்டு போர்க்களம் புறப்படுங்கள்!"

மகோதரன் இவ்வாறு கூறியதும் இராவணன் சிந்திக்கலானான். தனது சினத்தைச் சீதைமீது பிரயோகிப்பதை விடுத்து போர்க்களத்தில் தனது எதிரிகள்மீது காட்டுவதென முடிவெடுத்தான். அப்போது மகன் இந்திரஜித்துவின் நினைவு மேலெழுந்தது. ஓவெனக் கதறிக் கொண்டு மகனைக் கிடத்தியிருந்த இடத்தில் போய், உடலைக் கட்டிக் கொண்டு கதறினான். "மகனே! உன்னுடைய தலையைக் கொய்தவர்களின் தலைகளை நான் கொய்யாமல்விடமாட்டேனடா!" என்று பலமாகச் சப்தமிட்டான். அருகில் நின்றவர்களிடம், இந்திரஜித்துவின் சடலத்தை, பழைய மரபுப்படி தைலக் கொப்பரையிலிட்டுப் பாதுகாக்கும்படி கட்டளையிட்டான்.

தாமதிக்காமல் தானே நேரில் சென்று போர்க்களத்தில் நிற்கும் இராம-இலக்குவனையும் அவர்களுக்குத் துணையாக வந்துள்ள வானரப் படைகளையும் வதம் செய்தே தீருவதெனக் கறுவிய இராவணன் படைத் தளபதிகளை ஒன்று கூடுமாறு பணித்தான்; அவர்கள் வந்து சேர்ந்ததும், அரக்கர் படையினர் எங்கிருந்தாலும் அவர்களை உடனடியாக இலங்காபுரிக்கு வந்து சேர ஏற்பாடு செய்யுமாறு சொன்னான்.

இராவணனுடைய அதிகாரத்துக்குட்பட்ட பல்வேறு நாடுகளிலும் அரக்கர் சேனைகள் இருந்தன. அவைதவிர, மிக்க வல்லமை பொருந்திய மூலபலப் படையினையும் உடனடியாகப் புறப்பட்டு வருவதற்கு ஏற்பாடு செய்யுமாறு இலங்கேஸ்வரன் பணித்தான்.

இராஜகுமாரன்

### மூலபலப் படை

திக்கெட்டும் முரசறைந்து தகவல் அறிவிக்கும் தகவலாளர்கள் யானைகள்மீது ஏறிச் சென்று படைகளைத் திரளுமாறு அறிவித்தார்கள். தகவல் கிடைத்ததும் தாமதமின்றி படைகள் திரண்டன.

மூலபல சேனையைப் பற்றி கவிஞர் பெருமான் இவ்வாறு கூறுகிறார்:

அறத்தைத் தின்று அருங் கருணையைப்
பருகி வேறு அமைந்த
மறத்தைப் பூண்டு வெம் பாவத்தை
மணம் புணர் மணாளர்
நிறத்துக் கார் அன்ன நெஞ்சினர்
நெருப்புக்கு நெருப்பாய்
புறத்தும் பொங்கிய பங்கியர்
காலனும் புகழ்வார்.

(யுத்த காண்டம்-3243)

**பொருள்:**

***அறத்தை உணவாக உட்கொண்டு, கருணையை நீராகப் பருகி, அறத்துக்கு மாறாக விளங்கும் கொடிய செயல்களை ஆடை அணியாகப் பூண்டு, கொடிய பாவத்தைத் தம் மனைவியாகக் கொண்ட மூலபலப் படைவீரர்கள், நிறத்திலே கரிய மேகங்களை ஒத்தவர்கள். அதேபோன்று அவர்களுடைய நெஞ்சமும் கருமை சூழ்ந்தது. நெருப்புக்கு நெருப்புப் போன்ற கடும் கோபக்காரர்கள். உள்ளத்திலே உள்ள அனலின் தன்மையினால் வெளிப்புறத்தே காணப்படும் மயிரும் வெப்பத்தால் செம்மை தோய்ந்து காணப்படுபவர்கள். இவர்கள் எக் கொடிய செயலுக்கும் அஞ்சாதவர்கள் என்பதனால், எமனாலும் புகழப்படுபவர்களாவர்.***

இத்தகைய வீரர்கள் பெரும் சமுத்திரம் போல் இலங்காபுரியில் வந்து குவிந்து விட்டனர். தனக்கு உதவியாக நின்று போரிட இத்தனை பெரும் படை வந்து சேர்ந்து விட்டதைக் கண்ட இலங்கையர்கோனின் தோள்கள் இருபதும் பூரிப்படைந்தன. தனது முகங்களிலுள்ள மீசைகளைத் தடவி முறுக்கி விட்ட வண்ணம் கோட்டை மதிலின்மீது இருந்த உயர்ந்த கோபுரம் மீது தாவி ஏறினான். நாலாபுறமும் திரண்டு நின்ற அரக்கர் படை வீரர்களைப் பார்த்துப் பூரித்தான். அங்கிருந்து வடதிசை வாயிலுக்கு அப்பால் அணிதிரண்டு நின்ற வானர சைனியத்தையும் அவனால் பார்க்க முடிந்தது. சமுத்திரத்தைவிடப் பரந்து நின்ற தனது படைகளையும், ஒரு சிறு குளம்போல் தெரிந்த வானர வீரர்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பதே பொருந்தாது என்று கருதியவனாய், 'வெற்றி என்னை நாடி வருவது உறுதியாகிவிட்டது' என்று கருதிக் களிப்படைந்தவனாக ஏனைய கருமங்களைக் கவனிப்பதற்காக தனது அரண்மனையை அடைந்தான்.

மூர்க்கத்தனம் மிக்க மூலபலப் படை திரண்டதைக் கண்ட தேவர்கள் நடு நடுங்கினர். இத்தகைய கொடியவர்களை, மிகச் சிறிய அளவிலுள்ள வானர சேனையால் எப்படி வெற்றி கொள்ள முடியும்? என்று அவர்கள் அஞ்சினர். திருக்கைலையிலுறையும் சிவபிரானிடம் சென்று முறையிட்டனர். "பிரபு! இராமபிரான் திருமாலின் அவதாரம்; அரக்கர்களை வதம் செய்யவே அவதரித்தவர் என்று இதுவரை கருதியிருந்தோம். ஆனால், திரண்டு நிற்கும் அரக்கர் படையைப் பார்த்தால், இராமபிரான் வெற்றியீட்டுவார்; தேவர்களாகிய எங்களுக்கெல்லாம் விடிவுகிட்டும் என்று கருத முடியாதிருக்கிறதே!" என்று கலக்கமுடன் கூறினர்.

சிவபிரான் புன்முறுவல் பூத்தவராக, "அஞ்சவேண்டாம்! அரக்கர் இத்தனை பேரும் ஒன்று கூடி இருப்பது, அவர்கள் ஒன்றாகவே இராமரால் அழித்தொழிக்கப்படுவதற்காகவே! ஆகவே தைரியமாக இருந்து பூவுலகில் நடைபெறவிருக்கும் புதுமைகளைக் கவனியுங்கள்!" என்றுரைத்தார்.

சிவபிரானின் ஆறுதல் வார்த்தைகளால் தேவர்கள் அமைதியடைந்தனர்; எனினும் போர்க்களத்தில் திரண்டு நின்ற வானர வீரர்களால், அரக்கர் படையின் எண்ணிக்கையையும் மூலபலப் படை அணியின் கோலத்தையும் பார்த்த மாத்திரத்தில் அச்சங் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அணி அணியாக பின் நோக்கி ஓடத் தொடங்கினர். இத்தனைக்கும் போர் தொடங்கவில்லை. அலையலையாக அரக்கர் படை எங்கும் பரந்து அணி வகுக்க ஆரம்பித்திருந்தனர்.

### இராமபிரானின் படைக்கலங்கள்

அரக்கர் படை அணிதிரள்வதையும், அதனைக் கண்ட வானர வீரர்கள் பயந்து ஓடுவதையும் கண்ட விபீடணர் இராமபிரானை அணுகினார். அவரும் போர்க்களம் புகுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். இலக்குவனும் ஆஞ்சநேயரும் இராமபிரானுக்கு அருகிலிருந்து உதவிக் கொண்டிருந்தனர். விபீடணர் இராமபிரானைப் பார்த்து "பிரபு! இராவணன் ஒப்பற்ற வீரன். ஆனால் அதர்மத்தின் ஓர் அம்சம். அவன் அழிவது தங்கள் கையால் என்பது உறுதி. இருப்பினும் நால்வகைப் படையுடன் வேகமும் விவேகமும் ஒருங்கே அமையப் பெற்ற தேர்மீது ஏறி அவன் போர் முனை வருகிறான். இவ்வாறிருக்கையில் தாங்கள் தேரேதுமின்றி, மார்பில் கவசமுமில்லாமல் போர்முனை செல்வது நல்லதல்லவே!" என்று வேதனையுடன் கூறினர்.

இதனைக் கேட்ட இராமபிரான் புன்சிரிப்போடு இவ்வாறு கூறினார்:

"விபீடணா! தன்னம்பிக்கையே எனது இரதம்; எனது தைரியமும் அமைதியும் தேரின் சக்கரங்கள்; உண்மையும் நேர்மைப் பண்பும் எனது கொடியாகும்; எனது பலம், அறிவாற்றல், தன்னடக்கம் மற்றும் நல்லெண்ணம் ஆகிய நான்கும் எனது தேரின் குதிரைகளாகும்; மன்னிப்பும் சீரான நடத்தையுமே குதிரைகளின் கடிவாளம்; ஆண்டவன் மீதுள்ள பக்தியே எனது தேர்ப்பாகன்; மனத் திருப்தியும் தர்மமும் எனது வாளும் கோடரியுமாகும்; எனது இலட்சியங்களே எனது கணைகள். இவ்வாறிருக்கும் எனக்கு வேறு என்ன தேவை இருக்கிறது?"

இராமபிரான் கூறியவற்றின் உட்பொருளை விபீடணர் மட்டுமல்லாமல் அங்கு நின்றிருந்த அனைவருமே புரிந்து கொண்டு திருப்தியடைந்தனர். (தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 108

**சரியானவிடை:- நாராயணாஸ்திரம்**

1. செல்வி ராமமூர்த்தி கமலினி, ஏவா பென் ஹெட் எஸ்டேட், (ஏ.பீ.சீ), வெலிமட.
2. மா. அருந்தவம், 7ம் வட்டாரம்,துறைநீலாவணை, மட்டக்களப்பு.
3. தி. சுதாகரன், 47வது ஒழுங்கை, வள்ளவத்தை, கொழும்பு-06.
4. எம். மதனி சபீக், 11/2 ஐயரட்ன ரோட், நீர்கொழும்பு.
5. திருமதி அரியமலர் அருணாசலம், இல 262/15,அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15.

**போட்டி இல. 110** கேள்வி:- சீதாப் பிராட்டியாரைக் கொலை செய்யப் புறப்பட்ட இராவணனைத் தடுத்தவன் யார்?

டிசம்பர் 06 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி– இல.110, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

## காதிலை பூ கந்தசாமி

**பில் கிளின்ரன்:** நீர்தான் சதாம் உசேன் என்பவரோ?
**சதாம் உசேன்:** நீர்தான் பில் கிளின்ரன் என்பவரோ?
**பி.கி:** கர்வமா?
**சதாம்.உ:** இதன் பெயர் கௌரவம்!
**பி.கி:** ஏற்கனவே வாங்கிய அடி போதாதா?
**சதாம்.உ:** அடி வாங்கித்தான் இரும்பு ஈட்டியாகிறது. உமக்குத் தெரியாதா?
**பி.கி:** மிஸ்டர் சதாம்! எங்கள் ஆயுதபலம் தெரியாமல் பேசுகிறீர்!
**சதாம்.உ:** மிஸ்டர் கிளின்ரன், எங்கள் ஆத்ம பலம் தெரியாமல் பேசுகிறீர்!
**பி.கி:** ஆயுதபலம் முன்னால் ஆத்ம பலம் என்னாகும்?
**சதாம்.உ:** வியட்நாமில் வீழ்ந்து போய் துண்டைக் காணோம், துப்பாக்கிக் குண்டைக் காணோம் என்று ஓடிவந்த உங்கள் ஆட்களிடம் கேட்டுப்பாரும்! எத்தனையோ தடைபோட்டும் எழுந்து நிற்கும் கியூபா முன்னால் தோற்றுப் போய் நிற்கும் உமது சி.ஐ.ஏ ஆட்களிடம் கேட்டுப்பாரும்! உலகெங்கும் போராடும் மக்களிடம் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கும் உமது நட்பு நாடுகளிடம் கேட்டுப்பாரும்! ஆயுத பலமா? ஆத்ம பலமா? எது பெரிது என்று உமக்கு பதில் சொல்வார்கள்!
**பி.கி:** கழுகுக்கு கோபம் வந்தால் என்னாகும் தெரியுமா?
**சதாம்.உ:** ஆக்கிரமிக்கும் ஆசை வரும்! உலகை அடக்கியாளும் திமிரும் வரும்! வட்டமிடும் கழுகை சுட்டுவிடும் துணிச்சல் எமக்கு இருப்பதால், அந்த ஆசைக்கும், திமிருக்கும் அழிவும் வரும்!
**பி.கி:** நாங்கள் நினைத்தால் ஒரு நொடிக்குள் உங்கள் ஆட்டம் முடிந்துவிடும்!



**சதாம்.உ:** நொடிக்குள் முடிக்க முடிந்தால், ஏன் கூட்டாளி நாடுகளையும் கூட்டிக் கொண்டு வந்து மோதினீர்கள்? தனித்து மோதி பார்த்திருக்கலாமே? உடைபடுவது யார் மூக்கு என்று பார்த்திருக்கலாமே?
**பி.கி:** மிஸ்டர் சதாம் உசேன், ஒண்டிக்கு ஒண்டி சண்டைபோட இதென்ன தெருச் சண்டையா? பெரும் சண்டை மேன், பிக் ஃபைட்! யெஸ் பிக் ஃபைட்!
**சதாம்.உ:** பிக் ஃபைட் அல்ல, குக் ஃபைட்!
**பி.கி:** வட் டு யூ மீன்? வட் குக், வட் ஃபைட்?
**சதாம்.உ:** உலகை ஏமாற்ற நீங்கள் 'குக்' பண்ணிய காரணங்களை வைத்து நடத்தும் சண்டை! வெள்ளை மாளிகை என்ற சமையல் அறையில் இருந்து கமகமக்க தாளித்துப் போடுகிறீர்கள் பொய்களை! இது தான் 'குக்' ஃபைட்!
**பி.கி:** போதும் நிறுத்தும்! உம்மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏராளம்!
**சதாம்.உ:** என்ன குற்றச்சாட்டுக்கள்? எடுத்துவிடும் பார்க்கலாம்?
**பி.கி:** ஆயுதம் செய்வது, காகிதம் செய்வது, போருக்கு ஆயத்தம் செய்வது... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்!
**சதாம்.உ:** ஆயுதம் செய்வது பாதுகாப்புக்காக! ஆயத்தமாக இருப்பது தற்பாதுகாப்புக்காக!
**பி.கி:** அணு ஆயுதம் செய்கிறீர்!
**சதாம்.உ:** அதனை நீரும்தான் செய்கிறீர்!
**பி.கி:** நாங்கள் வல்லரசு!
**சதாம்.உ:** நாங்கள் வல்லரசுகளால் விழுங்கப்படாமல் வாழ விரும்பும் அரசு!
**பி.கி:** இந்த சமாதானங்கள் எல்லாம் இங்கே தேவையில்லை. அணு ஆயுதம் செய்வதை நிறுத்தும்! எங்கே வைத்திருக்கிறீர்? எத்தனை வைத்திருக்கிறீர்? விபரங்களைக் கூறும்?

## சாத்தானும் சதாம் உசேனும்

**சதாம்.உ:** அணு ஆயுதம் செய்வதை முதலில் நீர் நிறுத்தும், பின்னர் நான் நிறுத்துகிறேன்! அணுக் குண்டுகளையும், நியூத்திரன் குண்டுகளையும் நீர் எங்கே வைத்திருக்கிறீர்? எத்தனை வைத்திருக்கிறீர்? என்ற விபரங்களைக் கூறும், பின்னர் நான் கூறுகிறேன்!
**பி.கி:** ஐயக்கியநாடுகள் சபை கேட்கிறது, அதற்கு என்ன பதில் கூறுகிறீர்?
**சதாம். உ:** வல்லரசுகளின் வாத்தியக் கருவிதானே ஐ.நா.சபை!
**பி.கி:** உலக நாடுகள் எல்லாம் அங்கம் வகிக்கும் சபையை கேலி செய்கிறீர்?
**சதாம்.உ:** அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு பங்கம் வந்தால்கூட, வல்லரசுகளின் பக்கம் நிற்பதுதானே ஐ.நா.சபை! வீட்டோ பவரும் உங்களிடம்! ஐ.நா. செயலாளருக்கு ரூட் போட்டுக் காட்டும் திமிரும் உங்களிடம்! அந்தச் சபையில் எங்களுக்கு எப்படி கிடைக்கும் நியாயம்?
**பி.கி:** மக்களைக் கேடயமாக நிறுத்தியுள்ளீர் என்கிறது ஐ.நா.சபை! நீர் என்ன சொல்கிறீர்?
**சதாம்.உ:** ஐ.நா.சபை வல்லரசுகளின் கேடயமாகிவிட்டது என்று நான் சொல்கிறேன்!
**பி.கி:** மக்கள் உயிர்களுடன் விளையாடுவதைக் கண்டிக்கக் கூடாது என்கிறீரா?
**சதாம்.உ:** எத்தனையோ நாடுகளில் மனித உயிர்கள் தினம் மடிந்தும், அங்கெல்லாம் ஏன் எட்டிப் பார்க்கவில்லை இந்த ஐ.நா.சபை? போர் செய்யும் நாடுகளுக்கு நீர் பொருள் கொடுக்கிறீர்! போர் ஆயுதம் கொடுக்கிறீர்! அதனையெல்லாம் ஏன் தட்டிக் கேட்கவில்லை இந்த ஐ.நா.சபை? எத்தனையோ நாடுகள் உட்பூசலால் பற்றி எரிந்துகொண்டிருக்க, ஐ.நா செயலாளர் உமக்கு பக்கவாத்தியம் வாசித்துக் கொண்டிருப்பது ஏன் என்று கேட்கிறேன்! ஒருதலைப்பட்சமான நீதி! ஒடுக்கப்படும் மக்களிடம் பாராமுகம்! வாலாட்டும் வல்லரசுக்கு ஆலவட்டம்! இன்று இதுதானே ஐ.நா.சபை!
**பி.கி:** நிறுத்தும்! இறுதியாக என்ன கூறுகிறீர்?
**சதாம்.உ:** வாழு! வாழவிடு!
**பி.கி:** நீர் ஒரு பயங்கரவாதி, மனிதனே அல்ல என்று எங்கள் அமெரிக்கா அறிவித்துவிடும் ஜாக்கிரதை!
**சதாம்.உ:** ஹா ஹா ஹா... நான் யார் தெரியுமா? (பாடுகிறார்)

மனிதன்! மனிதன்!
எவன்தான் மனிதன்?
வாழும்போதும் செத்துச் செத்துப்
பிழைப்பவன் மனிதனா?
வாழ்ந்த பின்னும் பேரை நாட்டி
நிலைப்பவன் மனிதனா?



**பி.கி:** அநியாயமாக அழியப்போகிறீர் மிஸ்டர் உசேன்! நாங்கள் இரக்கம் காட்டுவோம், சரணடைந்துவிடும்!
**சதாம்.உ:** (பாடுகிறார்)

கொடுமை கண்டும் கண்ணை மூடிக்
கிடப்பவன் மனிதனா
கோபம் கொண்டு நியாயம் கேட்டுக்
கொதிப்பவன் மனிதனா?

**பி.கி:** உலக சமாதானத்திற்காக நாங்கள் என்ன பாடு படுகிறோம் தெரியுமா? நீர் ஏன் கொதிக்கிறீர்? குதிக்கிறீர்? அமைதிக்கு வேட்டு வைக்கிறீர்? இதுதான் மேன் பயங்கரவாதம்!
**சதாம்.உ:** யாரிடம் அப்பனே சொல்கிறாய் கதை? உலகில் சமாதானம் வந்தால் ஆயுதம் எங்கே விற்பாய்? அடுக்கிவைத்திருக்கிற ஏவுகணைகளை எங்கே எறிவாய்? எங்கள் கைகளையெல்லாம் கட்டிப்போட்டுவிட்டு தட்டிக்கேட்க ஆளில்லாத சண்டப் பிரசண்டனாகும் உன் திட்டம் நமக்கா தெரியாது? நாடகம் ஆடாதே அப்பனே!
ஏமாற்றாதே ஏமாற்றாதே
ஏமாறாதே ஏமாறாதே
போடா டேய் உங்கள் உபதேசமும் நீங்களும்! துடிக்கிறது மீசை, தடுக்கிறது பேச்சு நடத்தவந்த மேசை!
(எழுந்து நின்று சொல்கிறார்)
மிஸ்டர் கிளின்ரன்! என்னை அழிக்கலாம், எங்களை அழிக்க முடியாது! எழுவோம்! விழ விழ எழுவோம்! நீயொரு குப்பை! இப்போது நான் சொல்வது குட்பை!
(சதாம் ஏறுநடை போட்டு செல்ல; பில் கிளின்ரன் சிலையாக நிற்கிறார்.)



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)

www.padippakam.com




# அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

430331


# நகல் ஜப்பான்



பணத்தைக் கொட்டி வெளிநாடுகளுக்கு சென்று படப்பிடிப்பு நடத்தும் அவசியமில்லை. செலவைக் குறைக்க ஒரு சிக்கன வழி கண்டுபிடித்துள்ளார்கள். வெளிநாடுகளில் உள்ள முக்கியமான கலை அழகுமிக்க கட்டடங்களைக் கொண்ட சினிமா நகர்களை உருவாக்கியுள்ளனர். ஆந்திர மாநிலத்தில் ஹைதராபாத்தில் உள்ள சினிமா நகரின் ஒரு பகுதிதான் இது. ஜப்பானில் உள்ளதைப் போன்ற நகல் வடிவம் இது. அப்படியே உரித்து வைத்ததுபோல செய்துள்ளனர்.

ஏற்கனவே தமிழ்நாட்டிலும் ஜெயலலிதா ஆட்சியில் சினிமா நகர் உருவாக்கப்பட்டது. அதனைவிட இது பெரியது. விமானச் செலவு கிடையாது. தங்கும் செலவு கிடையாது. வாடகை மட்டும் கொடுத்துவிட்டு ஹைதராபாத்திலே நின்று, ஜப்பானில் 'டூயட்' பாடுவது போல படம் எடுக்கலாம்.

# ஆயுள் கெட்டி




படத்தில் உள்ள ஆச்சிக்குப் பெயர் மேரி விபிகி. பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் ஆதாரத்துடன் நோக்கும்போது இன்றைய உலகில் வாழும் முத்த குடிமகள் இவர்தானாம். கனடாவில் ஒன்ராறியோ மாநிலத்தைச் சேர்ந்தவர். 117. நொட் அவுட்.

பிறந்தநாள் நிகழ்ச்சியில் மகனும், மகளும் குடுகுடுவென்று வந்து கலந்து கொண்டனர். மகன் ஏவிக்கு 81 வயது. மகள் ஹிட்டாவுக்கு 72 வயது.

உலகில் மிகப் பிரமாண்டமான அளவில் வாழ்ந்துவிட்டு அழிந்து போன மிருகம் டைனோசர். இதனைப் பற்றிய ஆராய்ச்சிகள் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டன. ஆனாலும் டைனோசர் பற்றிய கதையான 'ஜுராசிக் பார்க்' படத்திற்கு பின்னர்தான் டைனோசர் பற்றிய ஆராய்சிகளுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது.

டைனோசரின் முட்டைகள், டைனோசரின் எலும்புகள், டைனோசரின் பற்கள் என்று ஏராளமான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.




# ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# கொண்டாட்டம்




தலைநகருக்கு புலிகள்தான் வரக்கூடாது. மின்னும் நட்சத்திரங்கள் வரலாம். பாஸ் முறை இல்லாமல், சோதனை மற்றும் சந்தேகப் பார்வைகள் இல்லாமல், சந்தோசப் பார்வைகளால் வருடப்படும் பாக்கியம் பெற்றவர்கள் சினிமா நடிகைகள், நடிகர்கள் மட்டும்தான்.

குண்டு வெடிப்புக்கள், நூறு நூறாக களத்தில் பலியாகும் உயிர்கள் பற்றிய செய்திகள் எல்லாம் புளித்துப் போய் விட்டன. குண்டுவெடிப்பின் மறு நாளே ஜெயசூர்யா அடிக்கும் சிக்ஸருக்கு கைதட்டவும், சுகததாசா அரங்கில் ஆடும் நடிகைகளின் நடனத்தில் லயிக்கவும் தலைநகரவாசிகள் பழக்கப்பட்டு விட்டனர். தமிழ்ப்பட நடிகைகள் மட்டுமல்ல ஹிந்தி நடிகைகளும் கலைச் சேவைக்காக(?) இங்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

அந்தப் பட்டியலில் கரிஷ்மா கபூருக்கு அடுத்ததாக ஜுகி சாவ்லா வருகிறார். பின்னர் கஜோல் வரக்கூடும்.

# தடயம்



படத்தில் இருப்பது டைனோசரின் எலும்புக்கூடு. இலண்டன் தேசிய வரலாற்று நூதன சாலையில் இரண்டு டைனோசர்களின் எலும்புக் கூடுகள் வைக்கப்பட்டுள்ளன. ஒன்று மகா பெரிசு. மற்றையது சிறிசு. பெரிசின் எலும்புக் கூட்டு நீளம் 26.7 மீட்டர். (87 அடி 6அங்) டைனோசரிலேயே மிக நீளமான இனத்தைச் சேர்ந்தது இது. இந்த இனத்தின் பெயர் 'டிப்ளோ டோகஸ் கார்னேஜி'.

டைனோசரில் பல இனங்கள் உள்ளன. பயங்கரமாக இருந்தாலும் படு சாதுவானவையும் உள்ளன. கொடூரமானவையும் உள்ளன. (அகத்தின் அழகு உருவத்திலும் தெரியாதோ?)

நூதன சாலையில் இந்த எலும்புக்கூட்டை முதலில் யாரும் கணக்கெடுப்பதில்லையாம். 'ஜுராசிக் பார்க்' வெளியான பின்னர்தான் பயங்கரமான கிராக்கி.

# மறுபடியும்



அவர் வருவாரா? சரிந்து போன அணியை தூக்கி நிறுத்த மீண்டும் அவர் வருவாரா? ஸ்ரீநாத் பற்றி இந்திய கிரிக்கெட் அணியின் இரசிக மகாஜனங்கள் எழுப்பிய கேள்விதான் அது.

தோள்பட்டை தசை பயங்கரமாக கிழிந்திருப்பதால் ஸ்ரீநாத்தின் எதிர்காலம் இருண்டு விட்டது என்றுதான் நம்பப்பட்டது. ஆவேசமாகப் பந்து வீசி எதிராளிகளை 'கிளீன் போல்ட்'டாக்கும் ஸ்ரீநாத், அப்படி பந்து வீசி வீசியே கிளீன் போல்ட்டாகிவிட்டாரே என்று வருத்தமாக இருந்தது. ஆனால் ஸ்ரீநாத் மனம் தளரவில்லை. உறுதியுடன் சவாலை எதிர்கொண்டார். தீவிரமான பயிற்சி, சிகிச்சை என்று தோள்பட்டை காயத்தை ஆற்றினார்.

பந்துவீச்சில் போதியபலம் இல்லாமல் திணறிய இந்திய அணிக்கு ஸ்ரீநாத் தேறிவந்தது பிடிபடாத சந்தோசம். இலங்கைக்கு எதிரான டெஸ்ட்டில் மீண்டும் பந்துவீச வந்தபோது, 'பாவம் எப்படிப் போடப் போகிறாரோ, முன்புபோல வேகம் இருக்குமா?' என்றெல்லாம் சந்தேகங்கள். அனுதாபங்கள்.

இலங்கை அணி திணறியது. முதல் டெஸ்ட் போட்டியில் ஏழு விக்கெட்டுக்களை சாய்த்தார். அதிரடி மன்னன் சனத்தையும் ஆட்டம் இழக்கச் செய்தார். அனுதாப பார்வைகள் மறைந்து ஆச்சரியப்பார்வைகள் ஸ்ரீநாத்தை மொய்க்கத் தொடங்கிவிட்டன. அவர் வந்துவிட்டார்!

ஸ்ரீநாத்தின் பந்து வீச்சில்தான் சனத் ஜெயசூரியா அநேக தடவைகள் அவுட்டாகியிருக்கிறார்.

# நன்றி நவிலல்



## திருமதி ரமணி ஜெயக்குமார்

மலர்வு- 08.02.1969 உதிர்வு- 03.04.1997

எம் குடும்பத்து ஒளிவிளக்காய் பிரகாசித்து இறைவனடி சேர்ந்த திருமதி ரமணி ஜெயக்குமாரின் மறைவின்போதும், 31ம் நாள் நினைவஞ்சலி மற்றும் 3ம் மாத நினைவஞ்சலியில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்,

எங்கள் துயரத்தில் தங்கள் பங்கெடுப்பை தந்திகள் மூலமும், கடிதங்கள் மூலமும், தொலைபேசி மூலமும் தெரிவித்த அனைவருக்கும்,

எங்கள் இதய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜெயக்குமார் (கணவர்) பெற்றோர், பிள்ளைகள், சகோதர, சகோதரியார், மற்றும் நண்பர்கள்.



படிப்பகம்